தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது இணைந்த பாஸ்கர், பேப்பர்காம் மற்றும் தமிழ்நாடு இ-பேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:269 | 14-04-2026 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ●சென்னை ●மதுரை ●கோவை ●திருச்சி

# நிர்மலா சீதாராமன் கூறியது உண்மைக்கு புறம்பானது

## முதல்வர் மு.க.ஸ்டாலின்




**சென்னை, ஏப்.14:**

“இந்தியாவில் உள்ள பெரும்பாலான மாநில அரசுகளும், நெல்லுக்கு ஊக்கத்தொகை தரவேண்டாம் எனும் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளதாக நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்திருப்பது உண்மைக்குப் புறம்பானது” என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘ஒன்றிய நிதியமைச்சர் அவர்களே, தாங்கள் சொல்லியது உண்மையாகஇருந்தால்கடிதத்தை வெளியிட்டிருந்தாலே போதும். மக்கள் படித்து உண்மையை அறிந்துகொண்டிருப்பார்கள். அதற்கு, இவ்வளவு நீளமான பொழிப்புரை எழுதி, கடிதத்தை வெளியிட்டதிலேயே தங்களின் குட்டு அம்பலமாகிவிட்டது.

மேலும், இந்தியாவில் உள்ள பெரும்பாலான மாநில அரசுகளும், நெல்லுக்கு ஊக்கத்தொகை தரவேண்டாம் எனும் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தாங்கள் தெரிவித்திருப்பதும் உண்மைக்குப் புறம்பானது. கடந்த பிப்ரவரி மாதம், கேரள முதல்வர் இதுகுறித்து வெளியிட்ட பதிவே இதற்குச் சாட்சி’ எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, “நெல் சாகுபடிக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டாம் என்று தமிழகத்துக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது,” என முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியிருப்பது திசை திருப்பும் செயல் என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் குற்றஞ்சாட்டி இருந்தார்.

இந்நிலையில்,“தங்கள் அமைச்சகம் அனுப்பிய கடிதத்தில் இல்லாத எதையும் நான் பேசவில்லை. அப்படி, பேசவேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. தங்களது கூற்று உண்மைதானென்றால், அந்தக் கடிதத்தைப் பொதுவில் வெளியிடத் தாங்கள் தயாரா?” என்று நிர்மலா சீதாராமனுக்கு முதல்வர் ஸ்டாலின் சவால் விடுத்தார்.

இதற்கு பதிலளித்த நிர்மலா சீதாராமன், ‘உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு வேளாண் சார்ந்த அனைத்துத் தரப்பினரும் ஆக்கப்பூர்வமான, தொடர்ச்சியான மற்றும் நேர்மறையான ஈடுபாடு மேற்கொள்வது அவசியமானதாகும். ஆனால், முதல்வர் ஸ்டாலினும், அவரது கட்சியும் எதில் கைதேர்ந்தவர்களோ அதையே இப்போதும் தொடர்கிறார்கள். மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையே விரிசலை உண்டாக்குவது, பொய் பிம்பங்களைக் கட்டமைப்பது மற்றும் தங்களை மட்டுமே விவசாயிகளின் காவலர்களாகவும் தமிழ் மக்களின் பாதுகாவலர்களாகவும் காட்டிக்கொள்வது ஆகியவற்றை அவர்கள் தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியை சார்ந்திருக்கும்போது, நாட்டின் உணவுப் பாதுகாப்பு என்பது வெளிப்புற தாக்கங்களுக்கும் விலை ஏற்ற இறக்கங்களுக்கும் உள்ளாகும் அபாயம் உள்ளது. இந்தியா போன்ற பெரிய நாட்டிற்கு இது சரியான சூழல் அல்ல. பருப்பு மற்றும் எண்ணெய் வித்துக்களின் உள்நாட்டு உற்பத்தியை விரிவுபடுத்துவது என்பது வெறும் பொருளாதாரத் தேவை மட்டுமல்ல, அது ஒரு உத்திசார்ந்த (strategic) தேவையும் கூட. சமையல் எண்ணெய் தேவையைக் காட்டிலும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி குறைவாக இருப்பதால்தான் நாம் அதிகளவில் பாமாயிலை இறக்குமதி செய்கிறோம் என்பது அவருக்குத் தெரியாதா?

பருப்பு வகைகளிலும் இதே நிலைதான் நிலவுகிறது. தேவைக்கும் விநியோகத்திற்கும் இடையே இடைவெளி உள்ள பயிர்களுக்கு விவசாயிகள் சிறந்த விலையைப் பெற முடியும் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் விவசாயிகளின் நலன் முதல்வர் ஸ்டாலினின் மனதில் இல்லை. பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் சிறுதானியங்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம், புரதம் நிறைந்த பயிர்கள் வழியாக ‘ஊட்டச்சத்து பாதுகாப்பை’ உறுதி செய்யவும், சமையல் எண்ணெய் இறக்குமதி செலவைக் குறைப்பதன் மூலம் ‘பொருளாதார நிலைத்தன்மையை’ அடையவும் இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.

மாநிலங்களுக்கு அனுப்பப்பட்ட இந்தத் தகவல், தேசிய உணவுப் பாதுகாப்பிற்கான பொறுப்பைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு அழைப்பாகும். அரசியல் வேறுபாடுகளைக் கடந்து பெரும்பாலான மாநில அரசுகள் இதைப் புரிந்துகொண்டு, கூட்டுறவு கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகின்றன. ஆனால், முதல்வர் ஸ்டாலின் மட்டுமே இதை ஒரு சர்ச்சையாக்கி ஆதாயம் தேடப் பார்க்கிறார். நீர் அதிகம் தேவைப்படும் உபரிப் பயிர்களுக்குப் பதிலாக, இந்தியாவிற்கு உண்மையில் தேவைப்படும் அத்தியாவசியப் பயிர்களை உற்பத்தி செய்வதில் மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து செயல்படும் போது மட்டுமே உண்மையான உணவு இறையாண்மை சாத்தியமாகும்.

மத்திய அரசுக்கு எதிரான வெற்றுப் பேச்சுக்களில் நேரத்தை வீணடிப்பதற்குப் பதிலாக, பருப்பு மற்றும் எண்ணெய் வித்துக்களில் நம்மைச் சுயசார்பு கொண்டவர்களாக மாற்றுவதை விடுத்து, வெளிநாட்டு நலன்களுக்கு ஏன் வாய்ப்புகளை வழங்குகிறார் என்பதைப் பற்றி தமிழக மக்களுக்கு முதல்வர் ஸ்டாலின் விளக்கமளிக்க வேண்டும். அனைத்து மாநிலங்களுக்கும் செலவினத் துறைச் செயலாளர் எழுதிய கடிதத்தை வெளியிடுமாறு முதல்வர் ஸ்டாலின் சவால் விடுப்பது ஆச்சரியமளிக்கிறது. அந்த கடிதம் ஏற்கனவே அவரிடம் உள்ளது. அவர் அதைத் திட்டமிட்டே தவறாகச் சித்தரிக்கிறார். அது அவர் தரப்பு வாதத்திற்கு வலு சேர்த்திருந்தால், அவரே அதை வெளியிட்டிருப்பார். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. இத்தகைய சவால்களை விடுப்பதன் மூலம் அவர் வெற்று வீரத்தையேவெளிப்படுத்துகிறார்.

அந்தக் கடிதத்திற்கான இணைப்பை வழங்குவதில் எங்களுக்கு எந்தத் தயக்கமும் இல்லை. தேச நலனில் துளியும் அக்கறை கொண்ட எந்தவொரு முதல்வரும் இத்தகைய ஆக்கப்பூர்வமான ஆலோசனையை வரவேற்றிருப்பார்கள். ஆனால், ஸ்டாலின் ஒரு பயனுள்ள ஆலோசனையைத் திட்டமிட்டு ஒரு குறையாகச் சித்தரிக்கிறார். ஏனெனில், தி.மு.க-வைப் பொறுத்தவரை இந்தியாவின் உத்திசார்ந்த தேவைகள் ஒரு பொருட்டல்ல, அரசியல் ஆதாயம் தேடுவது மட்டுமே அவர்களின் நோக்கம்” எனத் தெரிவித்திருந்தார்.

# வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு பயோ-மெட்ரிக் முறை! உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்

**புதுடில்லி, ஏப்.14:**

வாக்குச் சாவடிகளின் பயோ-மெட்ரிக் மூலம் வாக்காளர்களின் அடையாளத்தை உறுதி செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு பதிலளிக்க இந்திய தேர்தல் ஆணையத்துக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுவை சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு கடந்த வாரம் நிறைவடைந்த நிலையில், தமிழ்நாட்டில் ஏப். 23 மற்றும் மேற்கு வங்கத்தில் ஏப். 23 மற்றும் 29 ஆகிய தேதிகளில் வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களின் போது, வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களை பயோ-மெட்ரிக் முறையில் அடையாளம் காண உத்தரவிடக் கோரி வழக்கறிஞர் அஸ்வினி உபாத்யாய் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் மனு அளித்திருந்தார்.



இந்த மனு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, “சில மாநிலங்களில் தேர்தல் நடைமுறைகள் ஏற்கெனவே தொடங்கிவிட்ட நிலையில், பயோ-மெட்ரிக் முறையை அமல்படுத்துவது நடைமுறைக்கு உகந்ததாக இருக்காது” என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

இதற்கு பதிலளித்த மனுதாரர், “தற்போது அத்தகைய நடைமுறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்று கோரவில்லை. மாறாக, இந்த விவகாரத்தை பரிசீலிக்கும் வகையில் எதிர் மனுதாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டும் என்று மட்டுமே கருதுகிறேன்” என்று தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, ”அடுத்த நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைத்தேர்தல்களில் இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமா என்பதை இந்திய தேர்தல் ஆணையமே தீர்மானிக்க வேண்டும். எனவே நோட்டீஸ் அனுப்பப்படுகிறது” என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதுதொடர்பான நோட்டீஸ் இந்திய தேர்தல் ஆணையம், மத்திய அரசு மற்றும் அனைத்து மாநில அரசுகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.



வாசகர்கள், படைப்பாளிகள், விளம்பரதாரர்கள மற்றும் அனைவருக்கும் இனிய **தமிழ் புத்தாண்டு** நல்வாழ்த்துகள்.

– ஆசிரியர் குழுமம்

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

## இன்றைய பஞ்சாங்கம்

14.04.2026 சித்திரை 1
செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் 6.04

திதி:
இன்று இரவு 9.55 வரை துவாதசி பின்பு திரயோதசி.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 1.42 வரை சதயம் பின்பு பூரட்டாதி

யோகம் :
இன்று பிற்பகல் 1.20 வரை சுப்பிரம் பின்பு பிராம்யம்.

கரணம்
இன்று காலை 10.10 வரை கௌலவம் பின்பு இரவு 9.55 வரை தைதுலம் பின்பு கரசை

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.03 வரை சித்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

சந்திராஷ்டமம் :
இன்று பிற்பகல் 1.42 வரை பூசம் பின்பு ஆயில்யம்.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30.

இராகு காலம்
பிற்பகல் 3.00 – 4.30.

எமகண்டம்
காலை 9.00 – 10.30.

குளிகை
பிற்பகல் 12.00 – 1.30.

இன்று தமிழ் வருடப் பிறப்பு நாள். அனைவருக்கும் இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் வாழ்க வளமுடன்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# அமைச்சர் சேகர் பாபுவின் மகன்களுக்கு சொந்தமான நிறுவனத்தில் வருமான வரித்துறை சோதனை

**சென்னை, ஏப்.14:**

அமைச்சர் சேகர் பாபுவின் மகன்களுக்கு சொந்தமான நிறுவனத்தில் வருமான வரித்துறையினர் இன்று (ஏப்.13) திடீர் சோதனை நடத்தி வருகின்றனர்.

தமிழகத்தில்சட்டப்பேரவை தேர்தல் களம் சூடு பிடித்து வருகிறது. இதனிடையே, அமைச்சர் சேகர் பாபுவின் மகன்கள் ஜெயசிம்மன், விக்னேஷ் ஆகியோர் நடத்தி வரும் நிறுவனத்தில் திடீரென வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகிறார்கள்.

சென்னை மயிலாப்பூரில் உள்ள சாலை கட்டுமான டெண்டர் நிறுவனத்தில் அதிகாரிகள் இச்சோதனையை நடத்தி வருகிறார்கள்.

அதோடு, மத்திய பாதுகாப்பு படையினர் துணையுடன் தேர்தல் பறக்கும் படையினரும் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

பணப்பட்டுவாடா தொடர்பான புகாரின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது. சென்னையில் காலை முதலே மயிலாப்பூர், வடபழனி, கீழ்பாக்கம், அடையாறு உள்ளிட்ட 5 இடங்களில் வருமான வரித்துறையினர் தீடீர் சோதனை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

சோதனை முடிந்த பிறகுதான் கைப்பட்டப்பற்ற ஆவணங்கள் குறித்து தகவல் தெரியவரும் என கூறப்படுகிறது.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
➤ Public Notice ➤ Loss of Share
➤ Legal Notice ➤ Merger
➤ Tender Notice ➤ Acquisition
➤ Society Notice ➤ AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

# ஏப். 19-ல் சென்னை வருகிறார் அமித் ஷா!

**சென்னை, ஏப்.14:**

மத்திய அமைச்சர் அமித் ஷா வரும் ஏப். 19 ஆம் தேதி மயிலாப்பூர், ஆவடி உள்ளிட்ட இடங்களில் பாஜக வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிக்கிறார்.

தேர்தல் பிரசாரத்துக்காக, பிரதமர் நரேந்திர மோடி வரும் ஏப். 18 ஆம் தேதி கோவை வரவுள்ள நிலையில், மறுநாள் மத்திய அமைச்சர் அமித் ஷா சென்னை வருகிறார்.

சட்டப்பேரவைத் தேர்தல் பிரசாரத்துக்காக பிரதமர் நரேந்திர மோடி வரும் ஏப். 15- ஆம் தேதி கன்னியாகுமரி வரவுள்ளார். அங்கு நடைபெறும் பொதுக் கூட்டத்தில், தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்யவுள்ளார்.

வேப்பமூடு பகுதியில் இருந்து வடசேரி எம்ஜிஆர் சிலை வரை ஏப். 15 ஆம் தேதி மாலை 5 மணிக்கு பிரதமர் மோடி சாலை வலம் மேற்கொள்கிறார்.

தேர்தல் பிரசாரத்துக்காக பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தமிழகம் வரவுள்ளது அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ள நிலையில், அரசியல் தலைவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# மதுரா படகு விபத்து; பலி எண்ணிக்கை 15 ஆக உயர்வு

**மதுரா, ஏப்.14:**



பஞ்சாப்பின் லூதியானா மாவட்டத்தில் இருந்து 30-க்கும் மேற்பட்டோர் சுற்றுலாவுக்காக உத்தர பிரதேசம் சென்றனர். அவர்கள் யமுனை ஆற்றில் படகு ஒன்றில் புனித பயணம் மேற்கொண்டனர். அப்போது, கடந்த வெள்ளியன்று மதியம், விருந்தாவன் நகரில் கேசி காட் பகுதியருகே பண்டூன் பாலத்தில் இருந்து விழுந்து, ஆற்றில் மிதந்து வந்த டிரம் ஒன்றின் மீது படகு மோதி விபத்து ஏற்பட்டது.

படகில் இருந்த அனைவரும் நீரில் தத்தளித்தனர். அவர்களில் பலர் ஆற்றில் மூழ்கி பலியானார்கள். இந்த நிலையில் இன்று, மோனிகா என்ற பெண் ஒருவரின் உடல் மதுரா நகரின் பங்காளி காட் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. இதேபோன்று, விருந்தாவன் நகரில் யாஷ் என்ற யுவராஜ் பல்லா (வயது 22) என்ற இளைஞரின் உடலும் மீட்கப்பட்டது.

இதனால், பலி எண்ணிக்கை 15 ஆக உயர்ந்து உள்ளது என காவல் கண்காணிப்பாளர் சுரேஷ் சந்திர ராவத் கூறியுள்ளார். இந்த மீட்பு பணிக்காக தேசிய பேரிடர் மீட்பு படையின் 8 குழுக்கள் மற்றும் மாநில பேரிடர் மீட்பு படையின் 2 குழுக்கள் என மொத்தம் 10 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். படகில் குறிப்பிட்ட அளவுக்கும் கூடுதலான பயணிகள் இருந்துள்ளனர். போதிய பாதுகாப்பு வசதிகளும் இல்லை என கூறப்படுகிறது.

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

## திருக்குறள் குறள்-589

ஒற்றொற் றுணராமை யாள்க உடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும்



ஓர் ஒற்றனை மற்றோர் ஒற்றன் அறியாதபடி ஆள வேண்டும், அவ்வாறு ஆளப்பட்ட ஒற்றர் மூவரின் சொல் ஒத்திருந்தால் அவை உண்மை எனத் தெளியப்படும்.

## சிந்திக்க ஒரு நொடி



ஆழமான அன்பை விட
சரியான புரிதல் தான்...
எல்லா
உறவுகளையும்
நட்புகளையும்
நம்முடன் நீண்ட
காலம் வாழ வைக்கும்

**உஷா முத்துராமன்**

## துணை முதலமைச்சர உதயநிதி ஸ்டாலின் வாக்கு சேகரிப்பு



கடலூர் மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதியின் வேட்பாளராக சிவெ.கணேசனை ஆதரித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் திட்டக்குடி பேருந்து நிலையம் அருகில் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அதுசமயம் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் திரளாக கலந்து கொண்டனர்.

## காங்கிரஸ் பேரியக்க தோழர்கள் பிரச்சாரம்



ஆர்கே நகர் 1வது சர்க்கிள் 39 வட்டம் பிரச்சாரம் செய்யும் போது உடன் காங்கிரஸ் பேரியக்க தோழர்கள்.

## சின்னகரம் ஊராட்சியில் வாக்காளர் தகவல் சீட்டு வழங்கல்





விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டமன்றம் தொகுதியிக்கு உட்பட்ட சின்னகரம் ஊராட்சியில் வாக்காளர் தகவல் சீட்டு வாக்கு சாவடி அலுவலர் மூலம் நேரிடையாக வாக்காளர்களுக்கு வழங்ப்பட்டது. **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## சித்திரை மாதச் சிறப்புகள்: ஓர் ஆவண அலசல் ஆய்வு

**முன்னுரை:**

தமிழ் நாட்காட்டியின் முதல் மாதமான சித்திரை, வசந்த காலத்தின் தொடக்கமாகவும், தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாகவும் திகழ்கிறது. "சித்திரை" என்ற சொல் "சித்திரா" என்ற நட்சத்திரத்தின் பெயரிலிருந்து உருவானது. இது ஒளி, அழகு மற்றும் பிரகாசத்தைக் குறிக்கிறது. வானியல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும், சமூக ரீதியாகவும் இம்மாதம் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது.

வானியல் மற்றும் அறிவியல் பின்னணி சித்திரை மாதம் சூரியன் மேஷ ராசிக்குள் பிரவேசிப்பதைக் குறிக்கிறது. இது மேஷ ரவி என்று அழைக்கப்படுகிறது. வானியல் ரீதியாக, இது பூமியின் வட அரைக்கோளத்தில் வசந்த காலத்தின் உச்சத்தைக் குறிக்கிறது.

❖ நட்சத்திரத் தொடர்பு: சித்திரை மாதத்தின் பௌர்ணமி அன்று சந்திரன் 'சித்திரை' நட்சத்திரத்தில் சஞ்சரிப்பதால் இம்மாதத்திற்கு இப்பெயர் வந்தது.

❖ காலநிலை: பனிக்காலம் முடிந்து வெயில் காலம் தொடங்கும் 'இளவேனில்' காலத்தின் தொடக்கமாக இது அமைகிறது.

❖ தமிழ் புத்தாண்டு மற்றும் கலாச்சார மரபுகள் சித்திரை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடப்படுகிறது. இது புதிய தொடக்கத்தின் அடையாளமாகும்.

1 கனி காணுதல்: புத்தாண்டு அன்று அதிகாலையில் தங்கம், வெள்ளி, பழங்கள், தானியங்கள் மற்றும் கண்ணாடியைப் பார்ப்பது அந்த ஆண்டு முழுவதும் செழிப்பைத் தரும் என்பது நம்பிக்கை.

2 பஞ்சாங்க வாசிப்பு: அன்றைய தினம் கோயில்களிலும் வீடுகளிலும் அந்த ஆண்டின் பலன்களைக் கூறும் பஞ்சாங்கத்தைப் படிப்பது மரபு.

3 அறுசுவை உணவு: வேப்பம்பூ (கசப்பு), வெல்லம் (இனிப்பு), மாங்காய் (புளிப்பு), உப்பு, மிளகாய் (காரம்) போன்றவற்றை உள்ளடக்கிய 'மாங்காய்ப் பச்சடி' உண்ணப்படுகிறது. இது வாழ்வில் இன்பம், துன்பம் என அனைத்து உணர்வுகளையும் சமமாக ஏற்க வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துகிறது.

❖ ஆன்மீக மற்றும் புராணச் சிறப்புகள் சித்திரை மாதத்தில் பல முக்கிய ஆன்மீக நிகழ்வுகள் நடைபெறுகின்றன:

❖ சித்திரைத் திருவிழா (மதுரை): உலகப்புகழ் பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் - சொக்கநாதர் திருக்கல்யாணமும், அழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வும் இம்மாதத்தின் பெரும் சிறப்பம்சமாகும். இது சைவ மற்றும் வைணவ சமயங்களை இணைக்கும் ஒரு மாபெரும் சமூக விழாவாகும்.

❖ சித்ரா பௌர்ணமி: மனிதர்களின் பாவ புண்ணியக் கணக்குகளை எழுதும் 'சித்ரகுப்தனுக்கு' உகந்த நாளாக இது கருதப்படுகிறது.

❖ அவதாரங்கள்: சித்திரை மாதச் சுக்கில பஞ்சமியில் மகாலட்சுமி பூமிக்கு வந்ததாகவும், அஷ்டமியில் அம்பிகை அவதரித்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன. இலக்கியக் குறிப்புகள் சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரை சித்திரையின் சிறப்புகள் பேசப்படுகின்றன

❖ நெடுநல்வாடை: பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான நெடுநல்வாடையில், மேஷ ராசியில் சூரியன் சஞ்சரிப்பது பற்றிய குறிப்புகள் உள்ளன.

❖ சிலப்பதிகாரம்: புகார் நகரில் கொண்டாடப்பட்ட 'இந்திர விழா' சித்திரை மாதத்தில் நடைபெற்றதாக இளங்கோவடிகள் விவரிக்கிறார்.

❖ பக்தி இலக்கியம்: திருஞானசம்பந்தர் தனது தேவாரப் பதிகங்களில் மயிலாப்பூரில் நடைபெறும் சித்திரைத் திருவிழாவைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். வேளாண்மைச் சிறப்பு (சித்திரைப் பட்டம்) தமிழக விவசாயத்தில் "சித்திரைப் பட்டம்" மிக முக்கியமானது.

❖ பொன் ஏர் பூட்டுதல்: சித்திரை முதல் நாளில் விவசாயிகள் நிலத்தை உழுது விவசாயப் பணிகளைத் தொடங்குவர்.

❖ பயிர் சாகுபடி: இம்மாதத்தில் உளுந்து, பாசிப்பயறு, எள், நிலக்கடலை மற்றும் கம்பு போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன. கோடை மழையைப் பயன்படுத்திச் செய்யப்படும் இந்தச் சாகுபடி "இறவைச் சாகுபடி" எனப்படுகிறது.

சமூக அறம்: தண்ணீர் பந்தல் சித்திரை மாதத்தின் கடும் வெப்பத்தைத் தணிக்க, முன்னோர்கள் ஆங்காங்கே 'தண்ணீர் பந்தல்' அமைத்து நீர், மோர் மற்றும் பானகம் வழங்குவதை ஒரு பெரும் அறமாகச் செய்தனர். இது இன்றும் பல இடங்களில் தொடர்கிறது.

முடிவுரை சித்திரை மாதம் என்பது வெறும் காலக் கணக்கீடு மட்டுமல்ல; அது தமிழர்களின் வாழ்வியல், வானியல் அறிவு, ஆன்மீகம் மற்றும் வேளாண்மை ஆகியவற்றுடன் பின்னிப் பிணைந்த ஒரு கலாச்சாரக் கருவூலமாகும். இயற்கையோடு இணைந்து வாழ்வதையும், புதிய நம்பிக்கையுடன் வாழ்வைத் தொடங்குவதையும் இம்மாதம் நமக்குக் கற்பிக்கிறது.

**கோவில்பட்டி உணவு ஆர்வலர், கோ. சுரேஷ்குமார்.**

## "சமத்துவ நாள் உறுதிமொழி"



**திருப்பத்தூர், ஏப்.14:** திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி V. சியாமளா தேவி, இ.கா.ப., அவர்களின் தலைமை யில், மாவட்ட காவல் அலுவலகத் திலும், அனைத்து காவல் நிலையங்களிலும், ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் தலைமையில் "சமத்துவ நாள் உறுதிமொழி" எடுக்கப்பட்டது.

இந்த உறுதிமொழியில், சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும், சாதி பெயரில் நடைபெறும் சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தொடர்ந்து போராடி, ஒதுக்கப்பட்ட மக்களின் உரிமைகள் மற்றும் சமத்துவத்திற்காக வாழ்நாளெல்லாம் குரல் கொடுத்து, எளிய மக்களிடம் உரிமை விழிப்புணர்வை ஏற்படுத்திய, நம் அரசிய லமைப்புச் சட்டத்தை வடிவமைத்த அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சாதி வேறுபாடுகள் இல்லாத சமத்துவமான சமுதாயத்தை உருவாக்க நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும், சக மனிதர்களை சாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காணமாட்டேன் என்றும், அவர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைபிடிப்பேன் என்றும் உளமாற உறுதியளிக்கப்பட்டது.

## தண்டலை நடுநிலைப் பள்ளியில் சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்பு





**புதுக்கோட்டை , ஏப்.14:** இன்று ஏப்ரல் 14ஆம் நாள் சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாளை சமத்துவ நாளாக அனுசரிக்க அரசின் உத்தரவை அடுத்து புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் தண்டலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் சந்திரசேகரன் தலைமையில் சமத்துவ நாள் உறுதி மொழியை எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஆசிரியர்கள் சீனிவாசன், தேன்மொழி ,மாலதி சரண்ராஜ் மற்றும் பிரதீபா உட்பட மாணவர்கள் 70 பேர் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிமைகள் பெறவும், சமத்துவம் பெறவும் குரல் கொடுப்போம். சாதி ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் படைப்போம், சக மனிதர்களிடம் சாதி வேறுபாடு பார்க்க மாட்டோம் என்பன உறுதிமொழியாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

## இன்று 10வது நாள் தீர்த்தவாரி

**கோவில்பட்டி, ஏப்.14:** பக்தர்கள் கரகோஷம் முழங்க தேர் நான்கு வீதிகளையும் கடந்து அடுத்தடுத்து கோவில் நிலையை அடைந்தது, தேரோட்டத்தை யோட்டி பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள் பக்தர்கள் தாகம் தணிக்கும் வகையில் நீர்மோர் பந்தல்கள் அமைத்து இருந்தனர்.



தேரோட்ட் நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் கடம்பூர் ராஜூ, நகராட்சி தலைவர் கருணாநிதி, கோவில் அதிகாரிகள், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர், இன்று (14.04.2026) 10வது நாள் தீர்த்தவாரி, 11-வது நாள் தெப்பத் திருவிழா நடைபெற இருக்கிறது, இந்த நாட்களில் கூட்டம் அதிகம் வரும் என்பதால் திருட்டு சம்பவங்களை தடுக்கவும், பெண்களிடம் அத்துமீறும் கும்பலை பிடிக்க சாதாரண உடை அணிந்த போலீசார் ரோந்து சுற்றி வர ஏற்பாடு செய்யபட்டுள்ளது.

**செய்தியாளர் கோவில் பட்டி கோ. சுரேஷ்குமார்.**

## திருவோணம் சுவாமி புறப்பாடு



**தஞ்சாவூர்,ஏப்.14:** தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாளுக்கு நேற்று முன்தினம் (12.04.2026) திருவோணத்தை முன்னிட்டு காலை திருமஞ்சனம் கண்டருளால், மாலை சுவாமி பிரகார புறப்பாடு சிறப்பாக நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள் மற்றும் உபயதாரர்கள் செய்து இருந்தனர்.

**செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

## இலங்கை விமான நிலையத்தில் முனைவர் கா.ந.கல்யாணசுந்தரத்துக்கு நினைவுப் பரிசு



தன்முனைக் கவிதைகள் குழுமத்தின் செயலாளர் Dr தன்முனைக் கவிக்கோ ரேணுகா பிரதீப்குமார் அவர்களும், அவரது கணவர் டாக்டர் பிரதீப்குமார் குணராசா அவர்களும் இணைந்து, இலங்கை நாட்டில் சுற்றுலா முடித்து திரும்பும் முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நினைவுப் பரிசினை இலங்கை விமான நிலையத்தில் வழங்கினார்கள்.

இவர்களுடன் இவர்களது மகள் இளம் கவி பிரணவி பிரதீப்குமார் அவர்களும் ஆசான் கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நினைவுப்பரிசினை வழங்கினார்கள். இந்தியாவில் தமிழகம் மட்டுமல்லாது இலங்கை போன்று பல்வேறு நாடுகளிலும் தன்முனைக் கவிதைகளை அறிமுகம் செய்து தமிழ் கவிதை உலகுக்குப் பெருமை சேர்த்தவர் முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம் எனப் பாராட்டி போற்றினார் தன்முனைக் கவிதை குழுமங்களின் செயலர் டாக்டர் ரேணுகா பிரதீப்குமார். இலங்கை சுற்றுலா முடித்து திரும்பிய முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்கள் இலங்கையின் ஆன்மிகத் தளங்கள் மாற்றுமல்லாது ஈழப்போரின் வரலாற்று பின்னணி கொண்ட இடங்களையும் கண்டு திரும்புகிறோம் எனக் கூறி விரைவில் தமிழ்நாடு இணைய மின்னிதழில் இதுகுறித்த பயணக் கட்டுரைகளை தொடராக வெளியிடுவதாகவும் கூறினார்.




## தேர்தல் களப்பணியில்...

## தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை: வைகோ



தமிழகத்தில் அமையப்போவது ஸ்டாலின் ஆட்சி. கூட்டணி ஆட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை; அந்த நிலையை மக்கள் ஏற்படுத்த மாட்டார்கள் என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், திருச்சி மேற்கு தொகுதியில் போட்டியிடும் அமைச்சர் கே.என். நேருவை ஆதரித்து, திருச்சி உறையூர் பாண்டமங்கலம் பகுதியில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ பிரசாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது: சுயமரியாதை, சமூகநீதி சமத்துவம், சகோதரத்துவ மதச்சார்பின்மை, கூட்டாட்சி கருத்தியல் கொண்ட இயக்கம் திராவிட மாடல் ஆட்சி நடத்துகிற இயக்கம். கடந்த ஐந்தாண்டு காலத்தில் கலைஞர் மகளிர் உரிமை திட்டம், கட்டணம் இல்லா விடியல் பயணம், முதல்வர் காலை உணவு திட்டம், புதுமைப் பெண், தமிழ் புதல்வன், நான் முதல்வன், மக்களை தேடி மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்த நமது முதல்வரை, பிற மாநிலங்களில் இருக்கக்கூடிய முதல்வர்கள், தலைவர்கள் பின்பற்ற விரும்புவதாக தெரிவித்துள்ளனர்.

இதில், திருச்சி மேற்கு தொகுதிக்கு பல்வேறு திட்டங்களை அமைச்சர் கே.என்.நேரு செய்து கொடுத்துள்ளார். சிங்கப்பூருக்கு நிகராக, ஆசிய கண்டத்திலேயே எங்கும் இல்லாத பேருந்து முனையம், காய்கறி சந்தை, டைடல் பார்க் உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்புகளை ஏற்படுத்தி உள்ளார். தமிழகத்தில் அமையப்போவது ஸ்டாலின் ஆட்சி. கூட்டணி ஆட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை; அந்த நிலையை மக்கள் ஏற்படுத்த மாட்டார்கள் என பேசினார்.

## விஜயை தனித்துப் போட்டியிட வைத்தது பாஜக - திருமாவளவன்

செய்யூர் தொகுதியின் விசிக வேட்பாளர் சிந்தனைச் செல்வனை திருமாவளவன் ஆதரித்து பிரசாரம் மேற்கொண்டார். அப்போது பேசிய திருமாவளவன் கூறியதாவது: ”விசிக தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் 8 இடங்களில் போட்டியிடுகிறது. அனைத்திலும் நாம் வெல்ல வேண்டும். அதில், செய்யூர் முதலாவதாக இருக்க வேண்டும். அதனால், நாம் வாக்குகள் சிதறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எம்.ஜி.ஆர், ஜெயலலிதா அதிமுக தற்போது இல்லை. இரட்டை இலை சின்னம் பாஜகவின் இன்னொரு சின்னமாக மாறிவிட்டது.

தப்பித்தவறி கே. பழனிசாமி முதல்வரானால், 2 மாதம் கூட பாஜக பொறுத்துக்கொள்ளாது. எடப்பாடியைத் தூக்கி எறிந்து விட்டு அண்ணாமலையைக் கூட முதல்வராக்குவார்கள். அதேபோல, விஜயை கூட்டணி இல்லாமல் தனியாக நிறுத்தி இருப்பதே பாஜக தான். அதிமுக கூட்டணியில் இணைய வேண்டும் என பாஜக அழுத்தம் கொடுத்தது என்பதெல்லாம் பொய்” இவ்வாறு அவர் கூறினார்.

## விருதுநகரில் பாஜக தேசிய தலைவர் நிதின் நபின் பிரசாரம்



தமிழக சட்டசபை தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சியினர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதிமுக கூட்டணியில் பாஜக 27 தொகுதிகளில் களமிறங்கியுள்ளது. இதில் விருதுநகர் மாவட்டம் சாத்தூர் தொகுதியில் பாஜக வேட்பாளராக நயினார் நாகேந்திரன் களமிறங்கியுள்ளார்.

இந்நிலையில், நயினார் நாகேந்திரனை ஆதரித்து பாஜக தேசிய தலைவர் நிதின் நபின் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். சாத்தூரில் நயினார் நாகேந்திரனை ஆதரித்து நிதின் நபின் ரோடு ஷோவில் ஈடுபட்டார்.

# தமிழக தேர்தல் பிரசாரத்தை புறக்கணிக்க ராகுல்காந்தி முடிவா?



தமிழகத்தில் வரும் 23-ந் தேதி (வியாழக்கிழமை) சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. தேர்தலுக்கு இன்னும் 9 நாட்களே இருக்கும் நிலையில், அ.தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் நரேந்திரமோடி இதுவரை 3 முறை தமிழகம் வந்து பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

அடுத்து 15-ந் தேதி நாகர்கோவிலில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும், 18-ந் தேதி கோவையில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் பிரதமர் நரேந்திரமோடி பங்கேற்று பேசுகிறார். இதில், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட கூட்டணி கட்சி தலைவர்களும் கலந்துகொள்கின்றனர்.

அதேபோல், ஆளுங்கட்சியான தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் பொதுக்கூட்டத்தை நாளை (15-ந் தேதி) சேலத்தில் பிரமாண்டமாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதில், பங்கேற்க வருமாறு காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்திக்கு தி.மு.க. தலைமை அலுவலகத்தில் இருந்து அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், ராகுல் காந்தி தரப்பில் இருந்து சாதகமான பதில் வரவில்லை என்று கூறப்படுகிறது. இதனால், தி.மு.க. தலைமை அதிருப்தியில் இருக்கிறதாம்.

சட்டசபை தேர்தலுக்கான கூட்டணி பேச்சு வார்த்தை நடந்தபோதே, தி.மு.க. - காங்கிரஸ் இடையே பிரச்சினை எழுந்தது. இதனால், நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைய காங்கிரஸ் தலைமை பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் கூறப்பட்டது. இதற்கு ராகுல்காந்தி ஆதரவு தெரிவித்த அதே நேரத்தில், அவரது தாயாரான சோனியாகாந்தி இதற்கு மறுப்பு தெரிவித்தாராம். அதன்பின்னரே, தி.மு.க.வுடனான கூட்டணி உறுதி செய்யப்பட்டுள்ளது.

ராகுல்காந்தி தொடர்ந்து அதிருப்தியில் இருந்து வருவதால், தமிழகத்தில் தேர்தல் பிரசாரத்தை புறக்கணிக்க முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது. ஏற்கனவே, புதுச்சேரி தேர்தல் பிரசாரத்திற்கு ராகுல்காந்தி, தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் ஒரே நாளில் பிரசாரத்திற்கு சென்றபோதும், ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொள்ளவில்லை. வெவ்வேறு நேரத்தில் பிரசாரம் செய்தனர். கேரள தேர்தல் பிரசாரத்திற்காக செல்ல, சென்னை மற்றும் கோவைக்கு ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி வந்தபோதும்கூட பிரசாரம் எதுவும் மேற்கொள்ளவில்லை.

தற்போது, தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரீஷ் ஷோடங்கர், ராகுல்காந்தி பிரசாரத்திற்கு வருவார் என்று கூறிவந்தாலும், மற்றொரு மேலிட பொறுப்பாளரான முகுல் வாஸ்னிக் அதை உறுதிப்படுத்தவில்லை. அதனால், ராகுல்காந்திக்கு நெருங்கிய நண்பரான கமல்ஹாசன் மூலம் அழைப்பு விடுக்க தி.மு.க. தலைமை முயற்சி செய்து வருவதாக கூறப்படுகிறது.

## தேர்தல் பிரசாரத்தின்போது அண்ணாமலை முகத்தில் விழுந்த செல்போன்; பரபரப்பு சம்பவம்



தமிழக சட்டசபை தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சியினர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே, சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளராக தென்னிந்திய பார்வர்டு பிளாக் கட்சி தலைவர் திருமாறன் களமிறங்கியுள்ளார். அவரை ஆதரித்து தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை நேற்று பிரசாரத்தில் ஈடுபட்டார்.

இந்நிலையில், திருப்பத்தூர் பஸ் நிலையம் அருகே பிரசாரத்தில் ஈடுபட்டபோது வேட்பாளர் திருமாறனுக்கும், அண்ணாமலைக்கும் பாஜக மற்றும் கூட்டணி கட்சியினர் மலர் மாலை அணிவித்தும் பூக்களை தூவியும் வரவேற்றனர்.

பூக்கள் வீசப்பட்டபோது திடீரென பூக்களோடு சேர்த்து ஒரு செல்போனும் வீசப்பட்டுள்ளது. அந்த செல்போன் பிரசார வாகனத்தில் நின்றுகொண்டிருந்த அண்ணாமலை முகத்தில் விழுந்தது.

இதனால் சற்று திகைத்த அண்ணாமலை பின்னர் அந்த செல்போனை எடுத்து உரியவரிடம் ஒப்படைத்தார். பிரசாரத்தின்போது பூக்களை வீசும்போது எதிர்பாராத விதமாக செல்போனும் வீசப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவம் குறித்த வீடியோ சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது.

## தமிழக சட்டசபை தேர்தலையொட்டி புதுச்சேரி எல்லையில் 3 நாட்களுக்கு மதுபான கடைகள் மூடல்

தேர்தல் நெருங்கும் நிலையில் அனைத்து கட்சிகளும் தீவிர பிரசாரத்தைமுன்னெடுத்துள்ளது.

தமிழகத்தில் வருகிற 23-ந் தேதி சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறுகிறது. தமிழகத்தில் மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். வாக்காளர்கள் அனைவரும் வாக்களிக்க வசதியாக 75 ஆயிரத்து 97 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. இதில் துணை வாக்குச்சாவடிகளும் அடங்கும்.

தேர்தல் நெருங்கும் நிலையில் அனைத்து கட்சிகளும் தீவிர பிரசாரத்தைமுன்னெடுத்துள்ளது. கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் அரசியல் கட்சி தலைவர்கள் முழுவீச்சில் பிரசாரம் செய்து வருகின்றனர். வேட்பாளர்களும், கட்சி தலைவர்களும் வீதி, வீதியாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில், தமிழக சட்டசபை தேர்தலையொட்டி புதுச்சேரி எல்லையில் உள்ள மதுபான கடைகளை 3 நாட்களுக்கு மூட அம்மாநில கலால் துறை உத்தரவிட்டுள்ளது. 21-ம் தேதி காலை 10 மணி முதல் 23-ம் தேதி நள்ளிரவு 12 மணி வரை மதுபான கடைகளை மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

இதை மீறி கள்ளத்தனமாக மது விற்பனை செய்வது கண்டறிந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தேர்தலையொட்டி அசம்பாவித சம்பவங்களை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அதிமுக நடிகர் ராமராஜன் தவெக வேட்பாளருக்கு பிரச்சாரம்



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட உடையாம்புளி, ஓடைமறிச்சான், காத்தபுரம், கண்டபட்டி, மருதம்புத்தூர், புதுப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் தவெக வேட்பாளர் விபின் சக்கரவர்த்திக்கு நடிகர் ராமராஜன் வாக்கு சேகரித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: இந்த தேர்தல் வித்தியாசமான தேர்தல். இதுவரை பார்க்காத தேர்தல். நல்லவர்களுக்கு வாக்கு செலுத்தி அடுத்த 5 ஆண்டுகளை பொற்காலமாக மாற்ற வேண்டும். நான் தவறானவர்களுக்கு ஆதரவு அளிக்க மாட்டேன். ஆலங்குளம் தொகுதி தவெக வேட்பாளர் எனது நீண்ட கால குடும்ப நண்பரின் மகன். அரசியலுக்கு அப்பாற்பட்டு, நட்புக்காக அவருக்கு பிரச்சாரம் செய்ய வந்துள்ளேன்.

நீண்ட இடைவெளிக்கு பின்னர் நான் நடித்து வெளியான சாமானியன் திரைப் படத்தை தமிழகம் முழுவதும் வெளியிட யாரும் முன்வராத நிலையில் ஆலங்குளத்தில் டிபிவி குடும்பத்தினர் அவர்களது தியேட்டரில் 130 நாட்கள் ஓட வைத்து வெற்றிப்படமாக ஆக்கினார்கள். அந்த குடும்பத்தினர் முன்பு கேட்ட கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகவே அவர்களின் வாரிசான விபின் சக்கரவர்த்திக்கு ஆதரவு கேட்டு வந்துள்ளேன். அவர் எந்த கட்சியைச் சேர்ந்தவர் என்பது எனக்கு முக்கியமில்லை.

குடும்ப நெருக்கமும், விசுவாசமும் தான் முக்கியம். என் நண்பருக்காகவே நான் ஓட்டு கேட்க வந்துள்ளேன். எம்ஜிஆர் மீது கொண்ட மரியாதை என் உயிர் இருக்கும் வரை மாறாது.

இவ்வாறு அவர் பேசினார். அதிமுகவைச் சேர்ந்த நடிகர் ராமராஜன் தவெக வேட்பாளருக்கு ஓட்டு கேட்டு பிரச்சாரம் செய்தது ஆலங்குளம் தொகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ஒட்டுமொத்த துரோக கூட்டமும் சேர்ந்தது தான் அதிமுக கூட்டணி - உதயநிதி ஸ்டாலின்



திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜாவை ஆதரித்து நேற்று துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மன்னார்குடி பெரியார் சிலை அருகே பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது:-

கஜா புயல், கொரோனா காலக்கட்டத்தில் மக்களோடு, மக்களாக நின்று பணியாற்றியவர் டி.ஆர்.பி. ராஜா. தொழில் வளர்ச்சியில், நம்பர் ஒன் மாநிலமாக தமிழகம் உயர்ந்ததற்கு டி.ஆர்.பி. ராஜாவின் முயற்சிதான் காரணம். தமிழகம் முழுக்க தொழில் வாய்ப்புகளை உருவாக்கி கொடுத்தவர் டி.ஆர்.பி. ராஜா. இவரை இந்த முறை ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும்.

இந்த தேர்தலில் தி.மு.க.வுக்கு எதிராக ஒட்டுமொத்த துரோக கூட்டமும் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைத்துள்ளது. எடப்பாடி பழனிசாமியுடன் கூட்டணி சேர்ந்தால் நான்கு முழம் கயிற்றில் தொங்கி விடுவேன் என்றார் ஒருவர். பழனிசாமியை டயர் நக்கி என விமர்சனம் செய்தவர் மற்றொருவர். தேர்தலுக்கு பின்னர் அதிமுகவை கைப்பற்றுவதற்காக ஒருவர் கூட்டணி அமைத்துள்ளார். இப்படிப்பட்ட துரோக கூட்டம் எல்லாம் சேர்ந்து கூட்டணி அமைத்துள்ளது. முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த தேர்தல், தமிழ்நாடு அணிக்கும், டெல்லி அணிக்கும் இடையே தான் என்று கூறியுள்ளார்.

எடப்பாடி பழனிசாமியை பொறுத்தவரை ஜெயலலிதாவின் காலை பிடித்தார், அதன் பின்னர் சசிகலா, டி.டி.வி. தினகரன் ஆகியோரின் காலை பிடித்தார். தற்போது பிரதமர் மோடியின் காலை பிடித்துக் கொண்டிருக்கிறார். இதைத்தான் நான் முரட்டு அடிமை என்று கூறுகிறேன். எனக்கு அனுபவம் இல்லை என்று எடப்பாடி பழனிசாமி கூறுகிறார். எனக்கு இது போன்று அடிமையாக இருந்த அனுபவம் இல்லை என்பதை ஒத்துக்கொள்கிறேன்.

காலில் விழுவது தவறில்லை, ஆனால் சசிகலாவின் காலையே வாரிவிட்டார். இதைத்தான் நான் கூறி வருகிறேன். சசிகலாவும் நான் சொன்னது சரிதான் என்று கூறுகிறார். தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றவுடன் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பெண்களுக்கான விடியல் பஸ் திட்டத்தில் கையெழுத்திட்டார். தேர்தலை காரணம் காட்டி மகளிர் உரிமை தொகையை நிறுத்த முயன்றபோது முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் காலை 6.30 மணிக்கே ரூ.5 ஆயிரத்தை மகளிர் வங்கிக் கணக்கில் செலுத்தினார்.

இந்த தேர்தலுக்கு பின்னர் அமைய உள்ள தி.மு.க. ஆட்சியில் மகளிர் உரிமைத் தொகை, முதியோர் உதவித்தொகை உயர்த்தப்பட உள்ளது, ரூ.8 ஆயிரம் கூப்பன் வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு பல்வேறு திட்டங்கள் தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட உள்ளன. நீங்கள் நினைப்பதைப் போல் மீண்டும் அமைய உள்ள தி.மு.க. ஆட்சியில் டி.ஆர்.பி. ராஜா அமைச்சராக வருவார். அதன் பிறகு அவர் மன்னார்குடி தொகுதிக்காக கொடுத்துள்ள அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றி தரப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## குத்தாலத்தில் ஒரே நேரத்தில் 3 கோவில்களின் குடமுழுக்கு

**மயிலாடுதுறை, ஏப்.14:**
மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் காவிரி கரை தெருவில் ஸ்ரீ பத்ரகாளியம்மன், ஸ்ரீ பிடாரியம்மன், ஸ்ரீ மன்மதீஸ்வரர் ஆகிய 3 கோவில்கள் அமைந்துள்ளன. இந்த கோவில்களின் திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டு கடந்த 9-ம் தேதி குடமுழுக்கு விழா தொடங்கியது.

அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜையைத் தொடர்ந்து யாகசாலை பூஜைகள் நடைபெற்றன. நான்கு கால யாகசாலை பூஜைகள் இன்று காலை நிறைவுற்றதையடுத்து யாகசாலையில் இருந்து கடம் புறப்பாடு நடைபெற்றது.

புனித நீர் கலசங்கள் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு கோபுரத்தை அடைந்தது. அதனைத் தொடர்ந்து விமான கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு ஒரே சமயத்தில் மூன்று கோவில்களுக்கும் குடமுழுக்கு நடைபெற்றது.

பின்னர் மூலவருக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

குடமுழுக்கு விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

## தாம்பரம் - சந்திரகாச்சி இடையே சிறப்பு ரெயில் இயக்கம்



**சென்னை, ஏப்.14:**
சென்னை தாம்பரம் - மேற்கு வங்காள மாநில ஹவுரா அருகே உள்ள சந்திரகாச்சி இடையே கோடை கால சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது.

இது தொடர்பாக, தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

சென்னை தாம்பரத்தில் இருந்து நாளை (14-ந் தேதி), 21 மற்றும் 28-ந் தேதிகளில் (செவ்வாய்கிழமை) காலை 10.15 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (வண்டி எண் 06075) மறுநாள் மாலை 6.30 மணிக்கு சந்திரகாச்சியை சென்றடைகிறது.

மறுமார்க்கத்தில், சந்திரகாச்சியில் இருந்து நாளை மறுநாள் (15-ந் தேதி), 22 மற்றும் 29-ந் தேதிகளில் (புதன்கிழமை) இரவு 9.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06076), 3-வது நாள் காலை 10.30 மணிக்கு தாம்பரத்தை வந்தடைகிறது.

இந்த சிறப்பு ரெயிலில் 16 தூங்கும் வசதிபெட்டிகளும், 2 இரண்டாவதுவகுப்பு பெட்டிகளும் இணைக்கப்பட்டிருக்கும். இந்த சிறப்பு ரெயில்களுக்கான முன்பதிவு (13-ந் தேதி) மதியம் 2 மணிக்கு தொடங்கிவிட்டது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருப்பதியில் ஜூலை மாதத்துக்கான ஆர்ஜித சேவை, இதர தரிசன டிக்கெட்டுகள் வெளியீடு



**திருமலை, ஏப்.14:**
திருப்பதி ஏழுமலையானை ஜூலை மாதம் வழிபட ஆர்ஜித சேவை, இதர தரிசன டிக்கெட்டுகள் வெளியிடப்பட உள்ளதாக, தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

### ஆர்ஜித சேவை டிக்கெட்டுகள்

திருப்பதி ஏழுமலையானை வருகிற ஜூலை மாதத்தில் வழிபட பல்வேறு தரிசன டிக்கெட்டுகள், தங்கும் இட ஒதுக்கீடுகளை தேவஸ்தானம் வெளி யிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

சுப்ர பாதம், தோமாலை, அர்ச்சனை மற்றும் அஷ்டதள பாத பத்மாரா தனை சேவை போன்ற ஆர்ஜித சேவை டிக்கெட்டுகளுக்கான ஒதுக்கீடு வருகிற 18-ந்தேதி காலை 10 மணிக்கு இணையவழியில் வெளியிடப் படும்.

இந்தச் சேவைகளுக்கான 'மின்னணு குலுக்கல்' முறையில் பதிவு செய்ய, பக்தர்கள் வருகிற 20-ந்தேதி காலை 10 மணி வரை விண்ணப்பிக்கலாம்.

குலுக்கல் முறையில் டிக்கெட் ஒதுக்கப்பட்டவர்கள் 20 முதல் 22-ந்தேதி வரை மதியம் 12 மணிக்குள் அதற்கான கட்டணத்தைச் செலுத்த வேண் டும். அதன் பின்னரே டிக்கெட்டுகள் உறுதி செய்யப்படும்.

கல்யாண உற்சவம், ஊஞ்சல் சேவை. ஆர்ஜித பிரம்மோற்சவம் மற்றும் சகஸ்ர தீப அலங்கார சேவை ஆகியவற்றுக்கான டிக்கெட்டுகள் 21-ந்தேதி காலை 10 மணிக்கு இணையவழியில் வெளியிடப்படும்.

### அங்கப்பிரதட்சண டோக்கன்கள்

அங்கப்பி ரதட்சணத்துக்கான டோக்கன்கள் 23-ந்தேதி காலை 10 மணிக்கு இணையவழியில் வெளியிடப்படும். ஸ்ரீவாணி அறக்கட்டளை தரிசன டிக்கெட்டுகளுக்கான ஒதுக்கீடு 23-ந்தேதி காலை 11 மணிக்கு வெளியிடப் படும்.

மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட பக்தர்களுக்கான இலவச சிறப்பு தரிசன டோக்கன்கள் 23-ந்தேதி மாலை 3 மணிக்கு இணையவழியில் வெளியிடப்படும். சிறப்பு நுழைவு தரிசனத்துக்கான (ரூ.300 டிக்கெட்டுகள்) ஒதுக்கீடு 24-ந்தேதி காலை 10 மணிக்கு இணையவழியில் வெளியிடப்படும்.

### திருமலை, திருப்பதியில் தங்கும் வசதி

திருமலை மற்றும் திருப்பதியில் தங்கும் வசதிக்கான (அறைகள்) ஒதுக்கீடு 24-ந்தேதி மாலை 3 மணிக்கு இணைய வழியில் வெளியிடப்பட உள்ளது.

எனவே பக்தர்கள் ஆர்ஜித சேவைகள், தரிசன டிக்கெட்டுகள் மற்றும் தங்கும் வசதிகளை தேவஸ்தான அதிகாரப்பூர்வ இணையதளமான https://ttdevasthanams.ap.gov.in வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# உலகப்புகழ்பெற்ற சித்திரை திருவிழா: மதுரைக்கு 29-ந்தேதி கள்ளழகர் புறப்படுகிறார்



**மதுரை, ஏப்.14:**
உலகப்புகழ்பெற்றசித்திரை திருவிழாவையொட்டி வருகிற 29-ந் தேதி மதுரைக்கு கள்ளழகர் தங்கப்பல்லக்கில் புறப்படுகிறார். இந்த ஆண்டு 494 மண்டகப்படிகளில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

மதுரை சித்திரை திருவிழா உலக அளவில் பிரசித்தி பெற்றதாகும். மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை விழா, மதுரையை அடுத்த அழகர் கோவிலில் உள்ள கள்ளழகர் கோவில் சித்திரை விழா என, சைவ-வைணவ மதங்களின் இணைப்பாக இந்த விழா நடக்கிறது.

இந்த ஆண்டுக்கான அழகர்கோவில் சித்திரை விழாவின் முன்னோட்டமாக கடந்த ஜனவரி மாதம் 23-ந்தேதி ஆயிரம் பொன் சப்பர முகூர்த்த விழா மதுரை தல்லாகுளம் பெருமாள் கோவிலில் நடந்தது. அடுத்ததாக வருகிற 17-ந்தேதி கொட்டகை முகூர்த்த விழா நடைபெற உள்ளது. அழகர்கோவில் சித்திரை திருவிழா வருகிற 27-ந்தேதி தொடங்குகிறது.

29-ந்தேதி மாலை 6 மணிக்கு மேல் 6.15 மணிக்குள் அழகர், மதுரைக்கு புறப்பட தங்கப்பல்லக்கில் எழுந்தருள்கிறார். 18-ம்படி கருப்பணசுவாமி கோவில் முன்பு இருந்து பக்தர்கள் புடைசூழ வர இருக்கிறார். 30-ந்தேதி அதிகாலையில் மூன்று மாவடியில் அழகருக்கு எதிர்சேவையும், மே 1-ந்தேதி அதிகாலை 5.35 மணிக்கு மேல் 5.55 மணிக்குள் தங்கக்குதிரையில் வீற்றிருந்து மதுரை வைகை ஆற்றில் கள்ளழகர் எழுந்தருள்கிறார்.

அப்போது பல லட்சம் பக்தர்கள் அழகரை தரிசனம் செய்கிறார்கள்.

2-ந்தேதி சேஷ வாகனத்தில் கள்ளழகர் புறப்பாடும், கருட வாகனத்தில் தேனூர் மண்டபத்தில் மண்டூக முனிவருக்கு மோட்சம் கொடுக்கும் நிகழ்ச்சியும், அன்றிரவு ராமராயர் மண்டபத்தில் விடிய விடிய தசாவதார காட்சியும் நடக்கிறது.

3-ந்தேதி இரவு மன்னர் சேதுபதி மண்டபத்தில் பூப் பல்லக்கு திருவிழா, 4-ந்தேதி காலையில் கள்ளழகர் அதே பரிவாரங்களுடன் அழகர்மலை நோக்கி புறப்படுகிறார்.

5-ந்தேதி காலை 10.40 மணிக்கு மேல் 11.10 மணிக்குள் கள்ளழகர் கோவிலுக்குள் சென்று இருப்பிடம் சேருகிறார். 6-ந்தேதி உற்சவ சாந்தியுடன் திருவிழா நிறைவு பெறுகிறது.

இந்த ஆண்டில் வரும் வழியில் கள்ளந்தரி, அப்பன் திருப்பதி, தல்லாகுளம், மதுரை வண்டியூர் வரை என 494 மண்டகப்படிகளில் கள்ளழகர் எழுந்தருளி அருள்பாலிக்கிறார். திருவிழா ஏற்பாடுகளை கோவில் இணை ஆணையர் ஹரிஹரன் மற்றும் அதிகாரிகள், பணியாளர்கள் செய்து வருகின்றனர்.





வறுமை, நோய், அறியாமை மூன்றும்
முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528




## நலம் தரும் மருத்துவம்

### தினமும் பிளம்ஸ் சாப்பிடுவதால் கிடைக்கும் 6 ஆரோக்கிய நன்மைகள்.!

பிளம்ஸ் பழத்தில் விட்டமின் பி1, விட்டமின் ஏ, விட்டமின் சி, விட்டமின் கே, விட்டமின் பி2, பி3, பி6 மற்றும் விட்டமின் ஈ போன்ற ஏராளமான சத்துக்கள் காணப்படுகிறது. பிளம்ஸ் பழம் சாப்பிடுவதால் உங்க உடல் எடையை பராமரிக்க முடியும், மேலும் நீரிழிவு மற்றும் இதய நோயை எதிர்த்து போராட உதவுகிறது.

பிளம்ஸ் என்பது ஊட்டச்சத்து பண்புகள் நிறைந்த இனிப்பு மற்றும் புளிப்பு பழமாகும். இந்த பிளம்ஸ் பழம் சுவையாக இருப்பதோடு நமக்கு பலவித ஆரோக்கிய நன்மைகளை வழங்கக் கூடியது. எனவே இந்த ப்ளம்ஸ் பழத்தை எங்கு கிடைத்தாலும் தாராளமாக வாங்கி சாப்பிடலாம். அந்த அளவிற்கு பல்வேறு ஆரோக்கிய நன்மைகள் இதில் கொட்டி கிடக்கின்றன. பிளம்ஸ் பழத்தை சாப்பிட்டு வருவதால் இதய நோய்கள் முதல் சரும ஆரோக்கியம் வரை மேம்படும் என்கிறார்கள் ஊட்டச்சத்து நிபுணர்கள்.

இந்த பிளம்ஸ் பழத்தில் விட்டமின் பி1, விட்டமின் ஏ, விட்டமின் சி, விட்டமின் கே, விட்டமின் பி2, பி3, பி6 மற்றும் விட்டமின் ஈ போன்ற ஏராளமான சத்துக்கள் காணப்படுகிறது. பிளம்ஸ் பழம் சாப்பிடுவதால் உங்க உடல் எடையை பராமரிக்க முடியும், மேலும் நீரிழிவு மற்றும் இதய நோயை எதிர்த்து போராட உதவுகிறது. இது கொழுப்பை குறைக்கிறது. மற்றும் இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது. மேலும், இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், பார்வைத்திறனை மேம்படுத்தவும், சரியான செரிமான ஆரோக்கியத்தை பராமரிக்கவும் உதவுகிறது.

எடை குறைப்புக்கு உதவுகிறது: பிளம்ஸில் காணப்படும் கலோரிகளின் அளவு மிகவும் குறைவாக உள்ளது. நீங்கள் உடல் எடையை குறைக்க விரும்பினால், உங்கள் உணவில் பிளம்ஸை சேர்த்துக்கொள்ளலாம்.

ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளது: உங்கள் மூளை ஆரோக்கியமாக இருக்கவும், மன அழுத்தத்திலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், உங்கள் உணவில் பிளம்ஸை சேர்த்துக் கொள்ளுங்கள். இதில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்கள் உங்கள் சருமத்தையும், மூளையையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது.

கண் பார்வையை மேம்படுத்துகிறது: வைட்டமின் கே மற்றும் பி6 பிளம்ஸில் ஏராளமாக உள்ளது. வைட்டமின்கள் உங்கள் கண் பார்வை மற்றும் தோலுக்கு நல்லது என்று கருதப்படுகிறது. உங்கள் உணவில் பிளம்ஸை சேர்த்துக் கொள்வதன் மூலம் கண் பார்வையை மேம்படுத்தலாம்.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது: அயன், பொட்டாசியம் மற்றும் வைட்டமின்கள் போன்ற ஊட்டச்சத்துக்கள் பிளம்ஸில் காணப்படுகின்றன, இது நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்த உதவுகிறது.

# ஆர்டெமிஸ் (Artemis) விண்வெளிப் பயணங்கள்... இதனால் நமக்கு என்ன பயன்?




விண்வெளிப் பயணம் என்றாலே ஆச்சரியம்தான். அதிலும்நிலவுசம்பந்தமானது என்றால் ஒருவிதச் சுவாரசியத்தை நமக்குள் ஏற்படுத்துகிறது. சாதாரண மக்களுக்கு இதில் ஏதாவது பயன் இருக்கா?

சாமானிய மக்கள் மீதான தாக்கங்கள்:

இப்போது நடக்கும் விண்வெளிப் பயணங்கள் அல்லது எதிர்கால திட்டத்தில் உள்ள ஆர்டெமிஸ் (ARTEMIS) விண்வெளிப் பயணங்கள் அதில் பயணிக்கும் விண்வெளி வீரர்கள், விஞ்ஞானிகளுக்கு மட்டும் பலன்களைத் தருபவை அல்ல. அவை மனித சமூகத்தில் பல ஆழமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

இந்தத் திட்டத்திற்காக செய்யப்பட்ட விண்வெளி ஆய்விலிருந்து கிடைக்கும் தொழில்நுட்ப விஷயங்கள் காலப்போக்கில் மக்களாகிய நம் அன்றாட வாழ்வில் இடம்பிடிக்கின்றன. விண்கலங்களுக்காக உருவாக்கப்பட்ட விஷயங்கள் காலப்போக்கில் நமக்கான நுகர்வோர் பொருட்களாகவும், மருத்துவத்துறையில் செய்யப்படும் அறுவை சிகிச்சைகளுக்கான பொருட்களாகவும் பயன்பட்டு, மனிதர்களுக்குத் தேவையான பல எரிசக்தி அமைப்புகளைக்கூட மேம்படுத்தக்கூடும்.

உளவியல் ரீதியாகப் பார்த்தால், ஆர்டெமிஸ் II-ன் பயணத்தைத் திரையில் காணும் லட்சக்கணக்கானோருக்கு, அது ஒரு பிரமிப்பூட்டும் உணர்வையும், கோள்கள் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறது. இது விஞ்ஞானம் சார்ந்த ஒற்றுமையையும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வையும் பலருக்குள் வளர்க்கிறது.

பொருளாதார ரீதியாக இந்த ஆர்டெமிஸ் திட்டம் விண்வெளி, பொறியியல், தரவு அறிவியல் (DATA SCIENCE) துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்கிறது. அதேநேரத்தில் அடுத்தத் தலைமுறையினரை அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் சார்ந்த தரமான கல்வியைத் தொடரவும் ஊக்குவிக்கிறது. ஆக சாமானிய மக்களுக்கு இது சிறந்த தொழில் வாய்ப்புகளையும், வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துகிறது.

ஆர்டெமிஸ் விண்வெளி திட்டத்தில் உள்ள தனித்துவம்:

1972 வரை நிகழ்ந்த அப்போலோ திட்டங்கள் போலல்லாமல் ஆர்டெமிஸ் திட்டம் ஒரு நிலைத்தன்மைகாக, அனைத்து தரப்பையும் உள்ளடக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 50 ஆண்டுகளுக்குப் பிறகு மனிதர்கள் நிலவை நோக்கிச் செல்லும் முதல் பயணமாக ஆர்டெமிஸ் II விளங்குகிறது.

இதன் ஓரியன் (ORION) விண்கலத்தில் பயணிக்கும் விண்வெளி வீரர்கள் மிக நுணுக்கமாகத் திட்டமிடப்பட்ட 10 நாள் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

அதுவும் முற்றிலும் அமெரிக்கர்களால் சாத்தியமாக்கப்பட்ட அப்பல்லோவை போலில்லாமல்; இந்தத் திட்டம் பல நாடுகளின் கூட்டு சர்வதேச விண்வெளித் திட்டமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மற்றொரு தனித்துவமான அம்சம், இதுவரை நடந்த நிலவுப் பயணங்களில் நடக்காத ஒரு விஷயம். அதுதான் மனிதகுலத்தின் சமநிலையைக் குறிக்கும் வகையில், நிலவில் முதல் பெண்ணையும், முதல் கறுப்பின மனிதரையும் தரையிறக்க நாசா எடுத்த முயற்சி.

மேலும், இந்த ஆர்டெமிஸ் பயணங்கள் அப்பல்லோ போல் வெறும் நிலவைப் பார்வையிடுவதற்காக மட்டுமல்ல; அவை செவ்வாய் கிரக ஆய்விற்கான முதற்படியாகவும் பார்க்கப்படுகிறது.

வேற்றுக்கிரகத்தில் எப்படி உயிர் வாழலாம்? ஆழ்ந்த விண்வெளி சார்ந்த பயணங்களை எப்படி மேற்கொள்ளலாம்? மற்றும் நிலையான நிலவுக்கான ஒரு வாழ்விடம் (SUSTAINABLE LUNAR HABITATS) போன்றவைகள் அடுத்தடுத்த ஆர்டெமிஸ் திட்டங்களில் சோதித்துப் பார்க்கப்படும்.

# தெளிவான முடிவு



அரக்க பரக்க அண்ணக்கூடையை எடுத்து கக்கத்தில் வச்சிக்கிட்டு அடா ஆண்டவா இன்னைக்கும் நேரமாச்சே அவன்கிட்ட போயி திட்டு வாங்கணுமேயென்று வெரசா நடையைப் போட்டாள் ராசாத்தி, என்னப்பன்றது பொறப்படுற நேரத்துல அந்த மகளிர் குழுக்காரன் வேற வந்து பணத்தை கட்டியே ஆகணுமுன்னு ஒத்தக்கலுல நிக்கிறான்,ஆமா பணம் கொடுத்தவன் சும்மாவா விடுவான், அவனுக்கு அங்கே இங்கே கடனை வாங்கி அழுதுட்டு, வீட்ல உள்ள மனுசனுக்கு சோறாக்கி வச்சிட்டு பொறப்படுறதுக்குள்ள நேரமாச்சி, என்னபன்றது அவன் என்ன திட்டினாலும் வாங்கிதானே ஆக வேண்டுமுன்னு நெனச்சிட்டே போகும்போதே,,,

"ஏய் ராசாத்தி இங்க வாம்மா, உனக்கு எத்தனை தடவை சொன்னாலும் மண்டையில ஏறாதா,,,? பாவம் ஏழப்பாழை சனங்க பொழைக்கட்டுமேன்னு அரசாங்கம் இந்த நூறு நாளு வேலையை கொடுத்துயிருக்கு, இதுல பெரிசா நீங்க ஒன்னும் வேலையும் செய்றதில்ல, சரியான நேரத்துக்குக்கூட வந்த பேர் கொடுக்க வலிக்குதா உனக்கு,,,? இனிமே இப்படி வந்தின்னா ஆப்செண்ட் போட்டுருவேன், இதுதான் பஸ்ட அன்ட் லாஸ்ட் சொல்லிட்டேன்"

"சார் அந்த குழுக்காரன் வந்து,,,,"

அந்த அம்மா சொல்றதுக்கு முன்னாடியே இடைமறித்த கணக்கப்புள்ள,,,

"காரணமே சொல்ல வேண்டாம் எல்லாருக்கும் பிரச்சனை இருக்கதான் செய்யும், ஆனா வேலைக்கு கரெக்டா வந்துதான் ஆகணும், புரியுதா,,போ,,, போயி அந்த வாய்காலை சுத்தம் பன்னு"

முனு முனுத்தப்படியே போயி வாய்காலை சுத்தம் செய்ய ஆரமித்தாள் ராசாத்தி ராசாத்தி ரொம்ப ஏழ்மையில்தான் இருக்கிறாள், வீடுக்கூட மழை பெய்தால் தண்ணீர் வீடு முழுவதும் தேங்கி நிற்கும், ராசாத்திக்கு ஒரு மகனும், ஒரு மகளும் பிறந்தார்கள், அதில் மகனுக்கு கல்யாணமாகி அவன் பொண்டாட்டிக்கூட திருச்சிக்கு போயி கம்பேனில வேலை செய்யுறான், வீட்டுக்கு எதுவும் பணம் அனுப்புவதில்லை, ராசாத்தியும் கேட்பதில்லை, மகன் பாவம் டவுனுல இருக்கிறான், அவனுக்கே பத்தாதுன்னு பாக்குறவங்களிடமெல்லாம் சொல்லிக்கிட்டு இருப்பாள், மகள் இப்பதான் பணிரெண்டாம் வகுப்பு படிக்கிறாள், ஏதோ அரசாங்கம் படிப்புக்கு உதவி பன்றதுனால பிரச்சனை இல்லை, புருசன் முனியான்டிதான் கவலையே இல்லாமல், சின்ன சின்ன வேலைக்கு போயி கெடைக்கிற காசில எல்லாம் குடிக்கிறதே என் பணியென்று குடிச்சி தீர்த்துடுறான், ராசாத்திதான் அங்கே இங்கே கடன ஒடன வாங்கி குடும்ப செலவு பன்றது, அதுவும் இல்லாம ரேசன் அரிசி, நூறு நாள் வேலையின்னு குடும்பத்தை தூக்கி சுமக்கிறாள்,

நூறு நாள் வேலையை முடிச்சிட்டு அவசரம் அவசரமாக வீட்டுக்கு வந்தாள் ராசாத்தி, வீட்டுக்கு வந்து பார்த்தாள் புருசன் முனியான்டி சரக்கு அடிச்சிட்டு வாந்தி எடுத்து அதுலையே படுத்துக்கிடந்தான் நிதானம் இல்லாமல், அடாப் பாவி மனுசா தெனமும் இதே வேலையா என் உசிரை வாங்குறீயேன்னு பொலம்பிக்கிட்டே, அவனை இழுத்து அந்தப்பக்கம் போட்டுட்டு, வாந்தியை சுத்தம்பன்னினாள், அந்த வழியா நூறு நாள் வேலை முடிந்து வந்த சனங்கள் எல்லாம் ஆளாளுக்கு அறிவுரை சொல்லவே டென்சனாகி விட்டாள் ராசாத்தி,

"உங்களுக்கெல்லாம் என்ன,,, நீங்க சொல்லிட்டு போய்டுவீங்க,,, குடிச்சிட்டு வாந்தி எடுத்தாலும் அவன் எனக்கு புருசன்னா இருக்கானே அது போதும், அவனும் இல்லன்னா எனக்கு மரியாதை இருக்குமா,,,? இந்த பொண்ணு இப்பதான் பணிரெண்டாவது படிக்கிறா,,, அவளை படிக்க வச்சி ஒருத்தன் கையில புடிச்சி குடுக்குற வரைக்குமாவது அவன் உயிரோட இருக்கணுமே , என் புள்ள அப்பன் இல்லாத பொண்ணா மணமேடையில உட்காரும்போது பெத்த வயிறு பத்தி எரியுமே, என் கஷ்டம் என்னோடு போகட்டும், நீங்க உங்க ஜோலிய பாத்துட்டு போங்கடின்னு, புருசனை கட்டிலில் தூக்கிப்போட்டாள்,

"என்ன சொல்லிட்டோம் அக்கா, இப்படி எடுத்தோம் கவுத்தோமுன்னு பேசுற,,, நல்லதுதானே சொன்னோம்",

"அடியே அம்புஜம், எந்த ஒரு பிரச்சனையாக இருந்தாலும் சட்டுனு முடிவு எடுக்கக்கூடாது, ஆற அமர யோசிச்சுதான் செய்யணும், ஒரு முடிவு எடுத்தா அது தெளிவா இருக்கணும், எம்புருசன் குடிக்கிறான், வேற ஏதாவது தவறு செய்றானா,,, இல்லியே, அந்த குடிப்பழக்கத்தையும் மாத்தமுடியமென்ற நம்பிக்கை எனக்கிருக்கு, அதை விட்டுட்டு அவனை பிரிஞ்சி நான் போய்ட்டா அவன் உடனே திருந்திடுவானா,,,? இதைவிட அதிகமா குடிப்பான் அவ்வளவுதான், கூடவே இருந்து குழிப்பறிக்கிறதைவிட, கூடவே இருந்து அவனை வாழவைக்கிறதுதான் முக்கியம், அதை நான் செய்யுறேன்"

"என்னவோ நல்லா இருந்தா சரிதான்" னு அம்புஜமும் கூட வந்தவர்களும் அண்ணக்கூடையை இடுப்பில் வைத்தப்படி திரும்பிப் பார்க்காமல் சென்றார்கள்.

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

# இணையற்றது இழப்புகள்




திருமன்னன், திருமகள் தம்பதிக்குப் பிறந்த ஒரே மகன் திருஞானம். திருஞானம் பாட்டியின் பெயர் கோமதி, தாத்தாவின் பெயர் கோதண்டம். திருஞானம் பிறந்ததும் முதலில் கையில் வாங்கியதே கோமதிப் பாட்டி தான். உச்சிமோர்ந்து குழந்தையை ரசித்த கோமதிப் பாட்டி அங்குள்ளவர்களிடம் முக மலர்ச்சியுடன் தனது மகிழ்வைப் பகிர்ந்து கொண்டார். குழந்தையின் வளர்ப்பில் முழு கவனம் செலுத்தினார்கள் குடும்பத்தார்கள். திருஞானத்திற்கு கோமதிப்பாட்டி தெய்வீக பாடல்கள், தோத்திரங்கள், கதைகள், தமிழ் மொழி போன்றவற்றைகளைக் கற்றுக் கொடுத்தார். வாழ்க்கை நுணுக்கங்களைப் பற்றியும் அவ்வப்போது கூறுவார். தாத்தா ஆங்கிலம், ஹிந்தி மற்றும் நாட்டு நடப்புப் பற்றி கூறுவார். தேசியத் தலைவர்கள் மற்றும் அவர் செய்த தியாகங்கள் பற்றியும் கூறுவார் . ஆலயங்கள் சிறப்புப் பற்றியும் அடிக்கடிக் கூறுவார். திருஞானம் அம்மா மற்ற பாடங்களைக் கற்றுத்தருவார்கள். தாத்தா கணித சூத்திரங்கள் பற்றிக் கூறும் போது அதனுடன் தொடர்புவுடைய நீதிக் கதைகள் கூறி அசத்துவார். பாட்டியும் தாத்தாவும் எங்கு கற்றார்கள் இவ்வளவு விஷயங்களை என்று வியப்பார் திருஞானம்.

திருஞானம் வளர வளர அவருக்கு பொது அறிவு விஷயங்களை தாத்தா கற்றுக் கொடுத்தார். மாலை கட்டாயம் விளையாட்டு மைதானத்திற்கு அழைத்துக் கொண்டு சென்று விளையாட விடுவார். விடுமுறை நாட்களில் நீச்சல் குளத்திற்கு அழைத்துச் சென்று நீந்தக் கற்றுத் தருவார். பள்ளிப் படிப்பு முடிவதற்குள் திருஞானம் நிறைய விஷயங்களைக் கற்றுக் கொண்டார். பள்ளிப் படிப்பு இறுதித் தேர்வில் பள்ளியில் முதல் மாணவனாகத் தேர்வானார் திருஞானம். பிறகு பௌதிகம் படிப்பிற்கு ஒரு கல்லூரியில் சேர்ந்தார். இளங்கலை, முதுகலை பட்டங்களைப் பெற்று முனைவர் பட்டமும் பெற்றார் திருஞானம். பிறகு மத்திய அரசாங்க ஆராய்ச்சி நிறுவனத்தில் மைசூரில் பணி கிடைத்து அங்கு பணியில் தன்னை இணைத்துக் கொண்டார். திருஞானம் அங்கு செல்வதற்குள் அவர் தாத்தா அங்கு வெகு காலமாக உள்ள தனது நண்பர் மூலம் எல்லா ஏற்பாடுகளையும் செய்தது கண்டு திருஞானம் அசந்து போனார். வந்த இடத்தில் எல்லாமே ஏற்பாடு ஆனதால், திருஞானம் சிரமமின்றி பணி செய்தார். தங்கி இருந்த வீட்டின் பின்புறம் உள்ள காலி இடத்தில் திருஞானம் பயிர்க்குழிகள் தோண்டி வெண்டை, கத்திரி, புடல், பாவை, பூசணி மற்றும் கீரை போன்றவற்றை வளர்த்தார். ஒவ்வொரு செடி வளரும் போது திருஞானத்திற்கு பாட்டியின் ஞாபகம் வரும். திருஞானம் தானே சமைத்து உண்டதால் சாப்பாடுப் பிரச்னை இல்லாமல் போனது. அன்று அலுவலகத்தில் இருந்து வந்தவன் வீட்டு வாசல் ஓரத்தில் ஒரு நாய் படுத்திருந்ததைக் கண்டு முதலில் அதை விரட்ட நினைத்து பின் மனதை மாற்றிக் கொண்டார். மிருகங்களுக்கு நாம் தினம்தோறும் உணவு அளிக்கக் கூடாது, அப்படி அளித்தால் அவைகள் உணவு தேடும் பழக்கத்தை மறந்து விடும் என்ற பாட்டியின் சொல் நினைவிற்கு வந்தது திருஞானத்திற்கு .அன்று வாசலில் நாய் கத்திக்கொண்டிருந்ததைக் கண்டு திருஞானம் சென்று பார்த்த போது அது ஒரு குறிப்பிட்ட ஓட்டை அருகில் நின்று கொண்டு ஒரு விதமான ஒலி எழுப்பிக் கொண்டிருந்ததைக் கண்டு அங்கு சென்று பார்க்கையில் ஒரு அணில் குஞ்சு அங்கு ஓட்டையில் சிக்கிக் கொண்டு இருப்பதைக் கண்டு, அதை விடுவித்தார் திருஞானம். அணில் ஒரே ஓட்டம் ஓடியவுடன், நாய் ஒரு மகிழ்வான பார்வையை உதிர்த்து அதன் இடத்திற்குச் சென்றது, ஒரு நாளும் அது வீட்டிற்குள்ளே வந்ததில்லை .உடனே உள்ளே சென்ற திருஞானம் ஒரு பிஸ்கட் பொட்டலத்தைக் கொண்டு வந்து நாய்க்கு ஒரு தட்டில் வைத்து தந்தார். நாய் சாப்பிட்டு விட்டு சென்று படுத்தது. இந்த விஷயத்தை உடனே பாட்டியைத் தொடர்பு கொண்டு சொல்ல, பாட்டி மகிழ்வுடன் ரசித்தார். அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு கொல்லைப் பக்கம் சென்று கொய்யா மரத்தில் உள்ள நன்கு பழுத்த இரண்டு கொய்யப் பழங்களைக் கண்டு பிறகு பறிக்கலாம் என்று உள்ளே வந்தார் திருஞானம். உள்ளே வந்து சில வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்த திருஞானம், திடீரென்று வாசலில் நாய் ஒரு விதமான சப்தம் எழுப்பியது கண்டு கொல்லையில் இருந்து வாசல் பக்கம் வந்தார் திருஞானம். இவரைக் கண்டதும் நாய் அமைதியானது. நாய் திருஞானம் வீட்டிற்குள் நுழைய முயன்றால் மறுபடியும் கத்த ஆரம்பித்தது. திருஞானம் அதன் பக்கத்தில் வந்தால் சப்தம் போடுவதை நிறுத்தியது. சற்று நேரத்தில் பெரிய சப்தம் பின்புறம் கேட்டது. போய்ப் பார்க்கையில் பின் புறத்தில் இருந்த கொய்யா மரம் வேர் உடன் சாய்ந்திருந்தது. பின் பக்கம் போகாமல் காத்த நாயை நன்றி மிக்க கண்ணோடு பார்த்தார் திருஞானம். ஆட்களை வைத்து இடத்தை சுத்தம் செய்தார் திருஞானம். இதற்குப் பிறகு திருஞானம் மனதில் நாய் ஒரு தனி இடம் பிடித்தது. நாளை பறிப்போம் என்று இருந்த கொய்யாப் பழங்கள் மரம் விழுந்ததில் உதிர்ந்து இரண்டும் வீட்டிற்குள் வந்தது கண்டு ஒரு பக்கம் மகிழ்வு அடைந்தாலும் அந்த இடம் வெற்றிடமாக இருப்பதைக் கண்டு மனம் வாடியது திருஞானத்திற்கு. மறுநாள் புது கொய்யா செடி வாங்கி வைத்தார் திருஞானம். அப்பாவிடம் இது பற்றிக் கூற, அவர் அந்த நாயை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொன்னார்.

அன்று காலையில் அலுவலகம் புறப்பட்ட திருஞானம் வாசலில் உள்ள நாய் சுறுசுறுப்பின்றிப் படுத்துக் கொண்டிருந்தது கண்டு நேரமின்மையால் சென்று விட்டார். அலுவலகம் சென்றதும் மேலதிகாரி அழைப்பதாகக் கூற, அவர் அறைக்குச் சென்ற திருஞானத்தை மேலதிகாரி அமரச் செய்து, அவரிடம், சென்னையில் ஒரு கிளை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் ஆரம்பம் ஆகியுள்ளது. உங்களை அந்த கிளைக்கு மேனேஜர் ஆக பதவியுயர்வு தர உள்ளோம். சம்மதமா, என்று கேட்க, திருஞானம் சரி என்று சொன்னார். வீட்டிற்கு வந்த திருஞானம் வாசலில் சோம்பிப் படுத்திருந்த நாயைக் கண்டு அதன் முதுகில் தடவிக் கொடுத்து நீயும் என்னோடு வருவாய் என்றார். நாய் ஒரு தடவை வாலாட்டி விட்டு படுத்துக் கொண்டது. இந்த சமாச்சாரத்தை அப்பா, அம்மா, பாட்டி, தாத்தாவிடம் கூற, அவர்கள் சீக்கிரம் வா என்றார்கள். அப்பா மட்டும் முடிந்தால் அந்த நாயை அழைத்துவா , மிகவும் அறிவுள்ள ஜீவன் என்றார்.

நடு இரவில் கோமதிப் பாட்டியின் முனகல் சப்தம் கேட்ட கோதண்டம், என்ன என்று கேட்க கோமதி தனது கணவரிடம் சற்று உங்கள் மடியில் என் தலையை வைத்துக்கொள்ளவா என்றதும், கோதண்டம் உடனே அதை செய்ய, அவரையே பார்த்துக்கொண்டிருந்த கோமதியின் தலை சற்று சாய, கோதண்டம் தன் மகனை அழைக்க , அவர் வந்து பார்த்துவிட்டு உடனே மருத்துவரை அழைக்க, அவர் வந்து பார்த்து விட்டு, கோமதிப்பாட்டி நம்மை விட்டு சென்று விட்டார்கள் என்றார்.

திருஞானம் மிகுந்த வருத்தத்தில் ஆழ்ந்தார். தான் படித்த, அறிந்த , அனுபவக் கருத்துக்களை வரும் சந்ததியினருக்கு பயன்பட வேண்டும் என்ற மானுட தர்மத்தைக் கடைபிடித்த மனிதர்களில் எனது பாட்டியும் ஒருவர் என்று கலங்கினார் திருஞானம். இந்த காலத்தில் பிள்ளைகள் கைப்பேசி அல்லது கணினியில் கவிதைகள், கதைகள், புராணங்கள், சாகச விளையாட்டுக்கள் ஆகியவற்றைப் பார்த்து தெரிந்து கொள்ளுகிறார்கள். நேரில் சொன்னால் கேட்க தயங்குகிறார்களே என்று நினைத்தார் திருஞானம். பொறுப்புக்களை முடிப்பதில் காட்டும் நிதானம், எல்லோரையும் அணைத்துச் செல்வதில் உள்ள பொறுமை இவைகள் இப்போது உள்ளவர்களிடம் குறைந்து போய் உள்ளது என்று நினைத்தார் திருஞானம். வீட்டில் அடுத்த வெற்றிடம் என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டார் திருஞானம். பிறப்பிலிருந்தே ஒட்டிய சொந்தம், நடுவில் வந்து ஒட்டிக்கொண்டு சென்ற பந்தம் இரண்டின் இழப்புகள் இணையற்ற இழப்புகளே என்று கூறி அடக்க முடியாத அழுகை குமுறி வர, அழுத திருஞானத்தை தாத்தா தேற்றினார்.

**-மு.வெ.சம்பத்**

# அகத்தியனின் பயணம் 18



**- கயப்பக்கம் இரா.இரமேஷ்**

## அகத்தியனின் கதை

மனிதன் வகுத்துக்கொண்ட விதிமுறைகள் யாவும் மனிதனே மீறும் நிலைக்கு வருவதற்குச் சூழல்தான் முக்கிய காரணம் என்பதை அகத்தியனும் உணர்ந்திருந்தான்.

தேநீர் கடையில் காவலாளி அழகுமாறன் உட்கார்ந்திருந்தார். அகத்தியன் அங்கு சென்றதும் “வாங்க தம்பி உட்காருங்க” என்று அருகில் உள்ள நாற்காலியை எடுத்துப் போட்டார்.

இரண்டு தேநீர் சொல்லிவிட்டு, இன்றைய செய்தித்தாளைப் படிப்பதில் கவனம் செலுத்தினான் அகத்தியன்.

சூடாக தேநீர் வந்ததும், சாப்பிட்டுக்கொண்டே தனது கதையை காவலாளி அழகுமாறனிடம் சொல்ல ஆரம்பித்தான்.

“என் மனசுக்குள்ளேயும் வலி இருக்கு. அமுதருவி..! என் தேவதை..! அழகா லட்சணமா இருப்பா. கருப்பா, கலையா, நல்ல மூக்கு முழியா இருக்கான்னு என் சொந்த பந்தமெல்லாம் சொல்லுவாங்க. என் மனசுக்குள்ள ஆசைய வளர்த்து விட்டுட்டு, கடைசியாக அவள...” எனச் சொல்லி முடிக்கும் முன்னே, அகதித்தியனின் கண்ணில் நீர் கசிந்தது.தனது சட்டைப்பாக்கட்டில் இருந்த தனது மாமன் மகளின் புகைப்படத்தை எடுத்து அழகுமாறனிடம் காட்டினான்.

“எனக்கு நினைவு தெரிஞ்ச நாள்ளயிருந்து, அவ என்மேல அளவுகடந்த அன்ப வச்சிகிட்டு இருந்தா. அது காதலில்ல... அதவிட அதிகமானது. அந்த சின்ன வயசுல அவளோட அன்பின் அளவ என்னால புரிஞ்சுக்க முடியல. நான் அத எளிமையா எடுத்துகிட்டன்.” அகத்தியனால் தொடர்ந்து சொல்ல முடியவில்லை. உணர்ச்சிவசப்பட்டு அழுதான்.

“என்னுடைய குடும்பச் சூழல் ஏழ்மையானதுதான். அவ வசதியான குடும்பத்துல பிறந்தவ. நல்ல படிப்பு படிச்சவ. நானும் படிச்சிறுக்கன். என்ன பயன். வசதி வாய்ப்பு இல்லன்னு என் மாமங்காரன் எனக்கு என் அழகு தேவதைய கொடுக்க மாட்டேன் சொல்லிட்டான்.” தனது கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, “ அதே வைராக்கியத்தோடு புறப்பட்டு வந்தவந்தான்.” என முடித்தான்.

நான் இங்க வேலைக்கு வரதுக்கு முன்நாள், என் வீடுதேடி வந்து, நீ போயிட்டு சம்பாதிச்சுகிட்டு வா... நான் எந்த நிலையிலும் உன்ன விட்டுட்டு வேர யாரையும் கட்டிக்க மாட்டேன்னு உருதி அளிச்சா, அவளுக்கு... ..“என மீதி கதையையும் சொல்லி அமைதியானான்.

“நான் எப்படி மறக்க முடியும்? எனக்காக காத்துகிட்டிருக்கேன்னு சொன்னவளுக்கு, நான் செய்றது துரோகம் இல்லையா? அது தப்பு இல்லையா?” என அழகுமாறனைப் பார்த்து கேள்வி கேட்டான்.

“மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ பணம் ஒரு பொருட்டே இல்ல. தான் ஆசைப்பட்டதும், விரும்பினதும் கிடைச்சாலே போதும். அங்கதான் நிம்மதியும் இருக்கும்.” என அழகுமாறனின் கோரிக்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பதுபோல் பேசி முடித்தான்.




தேநீருக்கு சில்லறையைக் கொடுத்துவிட்டு “ சரிங்க, நேரமாச்சு. நான் வரேன். பிறகு பார்க்கலாம்” என்றுக் கண்களை துடைத்துக்கொண்டு நடந்தான் அகத்தியன்.

சாந்தி, சத்தியா, மீனா, நித்யா அனைவரும் ஒன்றாக உணவு இடைவேளையை முடித்து அலுவலகத்திற்குள் நுழைந்தனர்.

யாரையும் நிமிர்ந்து பார்க்காமல், குனிந்த தலையோடு உள்ளே நுழைந்த அகத்தியன் தனது இருக்கையில் உட்கார்ந்தான்.

“சார்” என்ற குரல் கேட்டதும், நிமிர்ந்து பார்த்தான்.

குட்டி இனிப்பு பொட்டலத்தோடு நின்றிருந்தாள்.

“என்னம்மா..” எனக் கேட்டான்.

“என்னோட வருங்கால கணவருக்கு பிறந்தநாள் சார்” என வெட்கத்துடன், சின்ன சிரிப்போடு பதில் சொன்னாள் குட்டி.

எந்த எதிர்வினையும் ஆற்றாமல், இனிப்பை எடுத்துக்கொண்டு “வாழ்த்துக்கள்” என சொல்லி முடித்தான்.

அகத்தியனுக்கு ஒன்றும் புரியவில்லை. மனித சிந்தனையில் அன்பையும், நேசத்தையும், பாசத்தையும், காதலையும் தவிர்த்துவிட்டு வாழ்ந்து பார் என்று யாராவது கட்டளையிட்டால், நிச்சயமாக வாழ முடியாது என்றுதான் சொல்ல முடியும் என்று தனக்குத்தானே மனதிற்குள் புலம்பினான்.

இந்த மனித உறவுகளுக்கு பாலமாக இருப்பது அன்புதான். அது கிடைக்காத தருணத்தில், கிடைக்காத இடத்தில், அன்பு எங்கு கிடைக்கிறதோ, அந்த இடம் தேடி பயணிப்பதும் அன்புக்காகதான் என ஒரு முடிவுக்கு வந்தான்.

ஒருவர் மீதான அன்பின் உயிரிழை, மயிரிழைபோல் உடலில் எங்கோ ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த அன்பின் நுண்ணிய இழையில்தான், இந்த உலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தான் அகத்தியன்.

(தொடரும்)

# வன்னி மரத்தின் சிறப்புகள்...





வன்னி மரம் மிகவும் வசீகரமான மரம். இதனுடைய இலைகள் முதல் அனைத்தும் சிறப்பு வாய்ந்தது. வன்னி மரம் பாலைவனப் பகுதியில் கூட வளரக்கூடியது.

வன்னி மரம் என்று சொன்னாலே விருதாச்சலம் என்றுதான் அனைவருக்கும் ஞாபகம் வரும். விருதாச்சலம் விருதகிரி ஆலயத்தில் பழமையான வன்னி மரம் இருக்கிறது. இந்த வன்னி மரத்தின் இலைகளைப் பறித்துதான் அந்தக் கோயிலைக் கண்டினார்கள் என்று சொல்வார்கள்.

எப்படி என்றால், அங்கு விபசித்தி முனிவர் என்று ஒருவர் இருந்தார். அந்த முனிவர் அங்கேயே வாழ்ந்து அங்கேயே ஒரு கோயிலைக் கட்டிவிட்டு ஜீவ சமாதியும் அடைந்திருக்கிறார். அவர் என்ன செய்வாரென்றால், தினசரி வேலையாட்களுக்கு அந்த வன்னி மரத்தின் கீழ் உட்கார்ந்து வன்னி இலைகளை உருவி கொடுப்பாராம். அவர்கள் எந்த அளவிற்கு உழைத்தார்களோ அந்த அளவிற்கு அது பொன்னாக மாறுமாம். ஒன்றுமே உழைக்காமல் சுற்றிக் கொண்டிருந்தால் அது இலையாகவே இருக்குமாம். கடினமாக வியர்வை சிந்தி அனைத்தும் செய்தவர்களுக்கு அத்தனையும் தங்கமாக மாறுமாம். இது வரலாற்றுச் சான்றுகளில் இருக்கிறது. கல்வெட்டுச் சான்றுகளில் இருக்கிறது. அப்படியொரு சக்தி இந்த வன்னி மரத்திற்கு உண்டு. இன்றைக்கும், குழந்தைப் பேறு இல்லாதவர்கள், மனநலம் குன்றியவர்களை அந்தக் கோயிலுக்கு அழைத்துச் செல்லலாம். அங்கு இன்னமும் அந்த பழமையான வன்னி மரம் இருக்கிறது. அதற்குக் கீழே விபசித்தி முனிவருடைய உருவமும் இருக்கிறது. அதை வழிபட்டால் எல்லா வகையிலும் சிறப்புகள் உண்டாகும்.



மார்புச் சளியை இந்த வன்னிக்காய் பொடி எடுக்கும். இந்த வன்னி இலையை அம்மியில் அரைத்து அப்படியே புண் இருக்கும் இடத்தில் கட்டினால் அப்படியே சரியாகிவிடும். எல்லா மரத்தையும் கரையான் அரிக்கும். ஆனால் வன்னி மரத்தை மட்டும் கரையான் தொடாது. நெருங்கவே முடியாது. அப்படியென்றால் பார்த்துக் கொள்ளுங்கள் இந்த மரத்தினுடைய அமைப்பு எவ்வளவு வலிமையானது என்று. இதுதவிர, தெய்வீகத் தன்மைகள் இந்த வன்னி மரத்திற்கு மிக அதிக அளவில் உண்டு. ஏனென்றால் பல சிவாலயங்களில் தலவிருட்சமாக இருப்பதே இந்த வன்னி மரம்தான். விருதாச்சலத்தை எடுத்துக்கொண்டால் வன்னி மரம்தான் தலவிருட்சம். இராமபிரான் இராவணனை நோக்கி போர் தொடுக்கப் போகும் முன்பாக வன்னி மரத்தை தொட்டு வணங்கி வலம் வந்து சென்றதாக ஐதீகம். அதேபோல, குற வள்ளியை மணப்பதற்காக முருகன் வன்னி மர வடிவில் காட்சியளித்ததாகவும் ஐதீகம். அதேபோல, பஞ்ச பாண்டவர்கள் அஞ்ஞானவாசம் செல்வதற்கு முன்பாக நிராயுதபாணியாக இருக்க வேண்டுமல்லவா, அப்பொழுது அவர்களுடைய ஆடை, அணிகலன்கள், ஆயுதங்கள் அனைத்தையும் ஒரு பெரிய துணியில் வைத்துக் கட்டி, மரஉறி தறித்து கிளம்புவதற்கு முன்பாக, வன்னி மரத்தடியில் வைத்துச் சென்றதாகவும் ஐதீகம். அப்படியானால், இது ஒரு பாதுகாப்பிற்கு உரிய மரம், சத்தியத்திற்கு கட்டுப்பட்ட மரம் என்ற அதன் தன்மை நமக்குத் தெரிகிறது.

வீரியம், வெற்றி என எல்லாவற்றையும் தரக்கூடிய தன்மை இந்த மரத்திற்கு உண்டு. மருத்துவ குணங்கள் ஏராளமாக இருக்கிறது. சித்த மருத்துவர்கள் நிறைய கூறுவார்கள். நமக்குத் தெரிந்த வரையில் ஆன்மீகம், மருத்துவம் என எல்லாவற்றிற்கும் மிகச் சிறந்த மரம். இந்த வன்னி மரத்தினுடைய கன்று நட்டு பாதுகாத்து வளர்த்து வந்தால் எல்லா தோஷங்களும் நீங்கும். அப்படி ஒரு பெரிய சக்தி இந்த வன்னி மரத்திற்கு உண்டு. ஓம் நமசிவாய! நற்றுணையாவது நமசிவாயவே!



ப. கோபிபச்சமுத்து.
பாரதியார் நகர்,
புதுப்பேட்டை
கிருஷ்ணகிரி - 1

## தினம் ஒரு தலைவர்கள்

# பீம் ராவ் அம்பேத்கர் வரலாறு

★ மகாராஷ்டிராவில் இந்து தாழ்த்தப்பட்ட சாதி (மகார்) பிரிவைச் சேர்ந்த குடும்பத்தில் பதினான்காவது குழந்தையாக ஏப்ரல் 14ஆம் தேதி 1891 ஆம் ஆண்டு பிறந்து, இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை எழுதுகின்ற வல்லமை பெற்று, இந்திய அரசியலில் ஒரு மாபெரும் புரட்சியாளராக விளங்கியவர்தான் -பீம் ராவ் அம்பேத்கர்!

★ அவர் படித்த உயர் நிலைப் பள்ளியின் பார்ப்பன ஆசிரியர் தனது குடும்ப பெயரான 'அம்பேத்கர்' என்பதை பீமராவ் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்ததால், அவருடைய குடும்ப பெயரான 'அம்பவடே' என்பதை மாற்றி தனது குடும்ப பெயரான 'அம்பேத்கர்' என்று பள்ளி பதிவேடுகளில் மாற்றினார்! அன்றிலிருந்து அவர் பீம் ராவ் அம்பேத்கர் ஆனார்!

★ அம்பேத்கர் தீண்டப்படாத சாதியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் பள்ளிகளிலும், பொது இடங்களிலும், கல்லூரிகளிலும் பட்ட அவமானங்களும் இன்னல்களும் ஏராளம். அவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு தன்னை ஒரு சிறந்த கல்வியாளராக கொஞ்சம் கொஞ்சமாக செதுக்கி உச்சத்தை அடைந்தார்!

★ மேற்படிப்புக்காக அமெரிக்காவிற்கு சென்றார். அங்கு பயின்று கொலம்பியா பல்கலைக்கழகத்தில் தத்துவ இயலில் முனைவர் பட்டம் பெற்றார் ! புத்தகங்களை மிகவும் நேசித்தார் ! புத்தகங்களை மணிக்கணக்கில் வாசித்தார் ! பின்பு இங்கிலாந்துக்கு சென்றார். வாழ்நாள் முழுவதும் படிப்பதையே பேரின்பமாக கொண்டிருந்தார் . பம்பாய்க்கு திரும்பி வந்த பின் கல்லூரியில் பேராசிரியர் ஆனார்!

★ தான் எவ்வளவு பெரிய படிப்பை படித்து முடித்தாலும் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் தன்னை ஒரு தீண்டப்படாதவனாகவே இந்தச் சமுதாயம் நடத்துவதை நன்கு உணர்ந்தார். தீண்டப்படாத மக்களின் உரிமைகளைப் பேச ஆரம்பித்தார்.

★ இதே வேளையில்தான் 1925இல் வைக்கத்தில் நடைபெற்ற, பெரியார் தீவிரமாக பங்கேற்ற -தெருக்களில் தீண்டப்படாதவர்கள் நடப்பதற்கான உரிமைப் போராட்டம் வெற்றிகரமாக நடந்ததை அறிந்தார் ! அதன் விளைவாக அம்பேத்கருக்கு ஒரு புதிய உத்வேகம் பிறந்தது!

★ மகாராஷ்டிராவில் கொலாபா மாவட்டத்தில் மகத் என்ற ஊரில், 1927 மார்ச் 19, 20 தேதிகளில் நடைபெற்ற தீண்டப்படாத மக்கள் மாநாட்டை சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்தார். இறுதி நாள் நிகழ்வாக, மகத்திலுள்ள தீண்டப்படாத மக்களை அனுமதிக்காத -சௌதார் குளத்திற்கு மாநாட்டில் கலந்து கொண்ட மக்களை ஊர்வலமாக திரட்டி சென்றார்!

★ அம்பேத்கர் சௌதார் குளத்தில் இறங்கி தண்ணீரை எடுத்துப் பருகினார் ! ஜெய் பீம் என்ற முழக்கம் எங்கும் பரவியது !அன்று முதலாக, பெரியாரின் வைக்கம் போராட்டம் போல அம்பேத்கரின் மகத் போராட்டமும் வரலாற்றில் பொறிக்கப்பட்டது!

★ அம்பேத்கர் தனது தீண்டப்படாத மக்களிடையே



ஆவேசமாக உரையாற்றினார் . "பணிவாக வேண்டுதல் மூலமாகவோ, உரிமைகளைப் பறித்தவர்களின் மனம் நெகிழ வேண்டும் எனக் கோருவதாலோ நாம் இழந்த உரிமைகளை என்றும் பெற முடியாது. இடையறாத போராட்டங்களின் மூலம் தான் உரிமைகளைப் பெற முடியும்! ஆடுகளைத்தான் பலியிடுகிறார்கள் ! சிங்கங்களை அல்ல!" ...என கர்ஜித்தார்!

★ அம்பேத்கர் பார்ப்பனர்களைக் கடுமையாகச் சாடினார்! "வேதங்களைப் படிக்கும் அல்லது பக்கத்தில் நின்று கேட்கும் சூத்திரர்களின் காதில் காய்ச்சிய ஈயத்தை ஊற்ற வேண்டும் என்று மனுநீதி சொல்கிறது ! அந்த மனுநீதியை கொளுத்த வேண்டும் !" என்று ஆத்திரமுடன் பேசினார். அதன்படியே டிசம்பர் 25ஆம் தேதி 1927ஆம் ஆண்டு மகத்தில் மனுநீதியைக் கொளுத்தினார்!

★ தீண்டப்படாத மக்களின் இழிவை சாதி இந்துக்கள் நீக்காவிட்டால் இந்து மதத்தை விட்டு விலகி வேறொரு மதத்தில் சேர வேண்டியிருக்கும் என மே 29 -1929இல் எச்சரிக்கை விடுத்தார்!

★ மத மாற்றம் பற்றி அம்பேத்கர் தன் நிலைப்பாட்டை 13.10.1935 அன்று இவ்வாறு மிகத் தெளிவாகப் பிரகடனப்படுத்தினார், " என் போதாத காலம் நான் இந்துத் தீண்டப்படாதவனாக பிறந்து விட்டேன் ! ஆனால் இந்து மதத்தின் மரியாதைக் கெட்ட, இழிவு படுத்தும் சூழ்நிலையின் கீழ் நான் வாழ மறுப்பது என்பது என் சக்திக்கு உட்பட்டதே ஆகும். ஆகவே நான் ஒரு இந்துவாக சாக மாட்டேன் என்று உங்களிடம் உறுதி கூறுகின்றேன்!"

★ அம்பேத்கரின் புகழ் பெற்ற வழிகாட்டு கோஷம் -நாக்பூரில் ஜூலை 18ம் நாள் 1942ஆம் ஆண்டு நடைபெற்ற அனைத்திந்திய தீண்டப்படாத மாநாட்டின் சிறப்புரையின் போது அம்பேத்கரால் முழங்கப்பட்டது . அவை : "கற்பி ! போராடு ! ஒன்றுசேர்!"

★ இன்று இந்துத்துவா சக்திகள் கீதையை தலைக்கு மேல் வைத்து கொண்டாடுவதின் காரணம் அறிய வேண்டுமா ? அம்பேத்கர் சொன்னதைக் கேளுங்கள்: " வேதங்களின் கருத்துக்களை தூக்கிப் பிடிப்பதையும், பார்ப்பனியத்தை உச்ச நிலைக்கு உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்ட அரசியல் நூல் தான் - கீதை ! " ...இதை விட தெளிவான விளக்கம் தேவையா ?

★ சுதந்திர இந்தியாவில் 1947இல் நேருவின் அமைச்சரவையில் இந்தியாவின் முதலாவது சட்ட அமைச்சராகப் பணியாற்றினார். புதிதாக பிறந்த இந்தியாவுக்கான அரசியல் அமைப்பு சட்ட வரைவுக் குழுவின் தலைவரானார்!

★ இந்து சட்ட திருத்த மசோதா காரணமாக அமைச்சர் பதவியிலிருந்து விலகினார். 1952இல் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் அம்பேத்கர் தோல்வியுற்றார். பின்பு அவர் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். தலித் மக்களுக்கான உரிமைகளைப் பெற தொடர்ந்து போராடினார் !

★ பிறவி இழிவாம் தீண்டப்படாத சாதி என்ற சகதியிலிருந்து வெளியேற வேண்டுமென்றால் இந்து மதத்தை விட்டு வெளியேறுவதே சரியான தீர்வு என முடிவெடுத்தார். நாக்பூரில் அக்டோபர் 14ஆம் நாள் 1956ஆம் ஆண்டு, மூன்று லட்சம் தொண்டர்களுடன் புத்த மதத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டார்! தான் ஒரு இந்துவாக சாக மாட்டேன் என்ற வாக்குறுதியை நிறைவேற்றினார் !

★ பல ஆண்டுகளாக அவரது உடல் நலன் குறைய ஆரம்பித்தது. அதை உணர்ந்து கொண்டதால் மத மாற்றம் செய்து கொள்வதில் குறியாக இருந்து நிறைவேற்றினார். அவரது இறுதிக் காலம் நெருங்கியது. டெல்லியிலிருந்த அவரது இல்லத்தில் டிசம்பர் 6ஆம் நாள் 1956ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்! புரட்சி தீபம் அணைந்தது!

★ புரட்சியாளர் அம்பேத்கரின் அரசியல் பங்கெடுப்புகள், பூனா ஒப்பந்தம், வட்ட மேசை மாநாடுகள், பாகிஸ்தான் பிரிவினை பற்றி, காந்தியுடன் உறவு, அரசியல் அமைப்பு சட்ட குழு விவாதங்கள் ஆகியவற்றை தெரிந்து கொள்ள அவரது முழு வாழ்க்கை வரலாற்றையும் படித்து அறிந்து கொள்வது அவசியமாகிறது .




TN 2026 விமர்சனம்(2.5 / 5)

வட இந்தியாவிலிருந்து தமிழகம் வரும் நட்ராஜ், குல்கந்த் குமார் என்ற நடிகராக தனது பயணத்தை தொடங்குகிறார்.

ஆரம்பத்தில் எந்த ஆதரவும் இல்லாமல் தடுமாறும் அவருக்கு, ஜமீன்தார் தம்பி ராமையா உதவியாக நிற்கிறார். அவரது ஆதரவால் சினிமாவில் முன்னேறும் நட்ராஜ், பின்னர் முன்னணி நடிகராக உயர்கிறார்.

நடிகராக உச்சத்தை அடைந்த பிறகு, தனது ரசிகர் மன்றத்தை மக்கள் மன்றமாக மாற்றும் அவர், அரசியலுக்கு வருகிறார் என்ற சூழ்நிலை உருவாகிறது. இதனால் அரசியல் அழுத்தங்கள் அதிகரிக்க, நட்ராஜ் தனது சொந்த கட்சியை தொடங்கி 2026-ல் முதலமைச்சராக வேண்டும் என்று முயற்சி செய்கிறார்.

இறுதியில் நட்ராஜ் முதலமைச்சராக மாறினாரா? திரைப்பயணம் என்ன ஆனது என்பதே படத்தின் மீதிக்கதை.

**நடிகர்கள்**

குல்கந்த் குமார் கதாபாத்திரத்தில் நட்ராஜ் தனது நடிப்பால் படத்தை தாங்கி நிற்கிறார். ஒரு சாதாரண இளைஞனாக தொடங்கி, பெரிய நடிகராகவும், பின்னர் அரசியல் தலைவராகவும் மாறும் மாற்றங்களை நன்றாக வெளிப்படுத்தியுள்ளார். சில முக்கிய காட்சிகளில் அவரது நடிப்பு கவனத்தை ஈர்க்கிறது.

தம்பி ராமையா, வழிகாட்டியாகவும், ஆதரவாளராகவும் தனது கதாபாத்திரத்தை சிறப்பாக செய்துள்ளார். அவரின் காட்சிகள் சில இடங்களில் உணர்ச்சியை ஏற்படுத்துகிறது. மற்ற கதாபாத்திரங்கள் தங்களுக்கான பங்கை அளவாக செய்துள்ளனர்.

படத்தின் முதல் பாதி, ஒரு நடிகரின் வளர்ச்சியும், அவர் அரசியலுக்கு வருகிற சூழலும் விறுவிறுப்பாக நகர்கிறது. சமகால அரசியல் மற்றும் சினிமா நிகழ்வுகளை நினைவூட்டும் காட்சிகள் இருந்தாலும், திரைக்கதை இன்னும் சீராக இருந்திருக்கலாம்.

**இயக்கம்**

இயக்குனர் உமாபதி ராமையா, ஒரு நடிகரின் வாழ்க்கை மற்றும் அரசியல் பயணத்தை தைரியமாக சொல்ல முயற்சி செய்துள்ளார். சில வசனங்கள் தற்போதைய சூழ்நிலைகளை பிரதிபலிக்கும் வகையில் இருக்கிறது. முதல் பாதி ஈர்க்கும் வகையில் இருக்கிறது. இரண்டாம் பாதி விறுவிறுப்பாக இருக்கிறது.

**ஒளிப்பதிவு**

பி.ஜி.முத்தையாவின் ஒளிப்பதிவு அந்தந்த காலத்திற்கு ஏற்ப சிறப்பாக அமைந்து இருக்கிறது.

**இசை**

தர்புகா சிவாவின் இசையில் பாடல்கள் கேட்கும் ரகம். பின்னணி இசை காட்சிகளுக்கு தேவையான அளவில் உதவுகிறது.



பாலிவுட் திரையுலகில் முன்னணி நடிகைகளில் ஒருவர் ஹுமா குரேஷி. இவர் தமிழில் வெளிவந்த காலா மற்றும் வலிமை ஆகிய திரைப்படங்களில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இவர் நடிப்பில் அடுத்ததாக டாக்சிக் திரைப்படம் வெளிவரவுள்ளது. இப்படத்தை எதிர்பார்த்து இந்திய சினிமா ரசிகர்கள் அனைவரும் காத்திருக்கின்றனர்.

நடிகை ஹுமா குரேஷி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தன்னுடைய போட்டோஷூட் புகைப்படங்கள் அவ்வப்போது வெளியிடுவார். அந்த வகையில், தற்போது கருப்பு நிற கிளாமர் உடையில் எடுத்துக்கொண்ட போட்டோஷூட் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார்.

# விஜய் கடைசி படம் மாற்றம்




சினிமாவின் உச்ச நட்சத்திரங்களில் ஒருவரான நடிகர் விஜய் கடந்த 2024ஆம் ஆண்டு தமிழக வெற்றிக் கழகம் என்ற அரசியல் கட்சியை நிறுவினார். அதைத்தொடர்ந்து தான் கையொப்பமிட்ட படங்களில் நடித்து முடித்துவிட்டு, பின் முழுநேர அரசியலில் ஈடுபடப் போவதாக தெரிவித்திருந்தார்.

அதன்படி ஜன நாயகன்தான் அவரின் கடைசிப் படம் எனக் கூறப்பட்டது. ரூ.500 கோடி பொருட்செலவில் உருவான ஜன நாயகன் கடந்த ஜனவரி மாதமே வெளியாக வேண்டியது. ஆனால் தணிக்கை பிரச்னைகளால் தற்போதுவரை வெளியாகவில்லை.

இச்சூழலில் வெளியீட்டிற்கு முன்பே முழுப்படமும் இணையத்தில் கசிந்தது படக்குழுவிற்கு பெரும் அதிர்ச்சியை தந்துள்ளது. இதனால் படத்தின் தயாரிப்பு நிறுவனமாக கேவிஎன் புரொடக்ஷனுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இதனை ஈடுகட்ட கேவிஎன் நிறுவனத்திற்காக மற்றொரு படத்தில், நடிகர் விஜய் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனால் ஜன நாயகன் விஜய்யின் கடைசிப் படம் இல்லை எனக் கூறப்படுகிறது. ஏற்கனவே எதிர்க்கட்சியினர் சிலர் அவர் படம் நடிப்பதை கைவிடமாட்டார் என விமர்சித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# முடிவுக்கு வந்த சகாப்தம்




மகாரஷ்டிராவின் சாங்கியில் 1933 ஆம் ஆண்டு பிறந்த ஆஷா போஸ்லே மறைந்த புகழ்பெற்ற பாடகி லதா மங்கேஷ்கரின் சகோதரி ஆவார்.

தமிழ், இந்தி, கன்னடம் உள்ளிட்ட 20 க்கும் மேற்பட்ட மொழில்களில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ள ஆஷா போஸ்லே 70 ஆண்டுக்கு மேலாக இந்திய திரையிசையின் ஒரு சகாப்தத்தை தனது குரலால் கட்டிப்போட்டவர் ஆவார்.

2000ல் தாதா சாகேப் பால்க்கே விருதும், 2008ல் பத்மவிபூஷனும், இரு முறை தேசிய திரைப்பட விருதும் ஆஷா போஸ்லேவுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தமிழில் ஹே ராம் படத்தில் வரும் 'நீ பார்த்த பார்வைக்கொரு நன்றி' உள்பட இளையராஜா இசையில் பல்வேறு பாடல்களை ஆஷா போஸ்லே பாடியுள்ளார்.



தொகுப்பாளினி திவ்யதர்ஷினி, இவருக்கு அறிமுகமே தேவையில்லை. 90-ஸ் கிட்ஸ் முதல் தற்போது உள்ள ஜென் சி வரை பிரபலமான ஒருவராக இவர் இருக்கிறார். இவர் காஃபி வித் டிடி, பாய்ஸ் vs கேர்ள்ஸ் போன்ற பல சூப்பர்ஹிட் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி வருகிறார்.

கடந்த சில ஆண்டுகளாக உடல்நல குறைவு காரணமாக தொடர்ந்து நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதில் இருந்து விலகி, அவ்வப்போது படங்களின் இசை வெளியீட்டு விழா மற்றும் அரசு நிகழ்ச்சிகளை மட்டுமே தொகுத்து வழங்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், தொகுப்பாளினி டிடி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெள்ளை நிற சேலையில் எடுத்துக்கொண்ட சமீபத்திய போட்டோஷூட் புகைப்படங்களை தற்போது பதிவிட்டுள்ளார்.

# கரீனா கபூர் இளமை ரகசியம்




பாலிவுட் திரை உலகில் பிரபல நடிகையாக இருப்பவர் கரீனா கபூர். திருமணமாகி 2 குழந்தைகள் பெற்ற பின்பும் வயது என்பது வெறும் நம்பர் மட்டுமே என்று தனது உடலை கட்டுக்கோப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துள்ளார்.

45 வயதிலும் அதே இளமை தோற்றத்தில் இருக்கும் கரீனா கபூர் பெண்களுக்கு உத்வேகமாக இருந்து வருகிறார்.

அதிகாலையில் உடற்பயிற்சி, உணவு கட்டுப்பாடு, மாலை 6.30 மணிக்கு இரவு உணவு, 9 மணிக்கு உறக்கம் என அவர் கடைபிடித்து வரும் பழக்க வழக்கங்கள் அவரை அழகு குறையாமல் பார்த்து வருகிறது.

இளம் கதாநாயகிகளுக்கு போட்டியாக படங்களில் நடித்து வரும் கரீனா கபூர் ஐதராபாத்தில் நடந்த ஒரு நகைக்கடை தொடக்க விழாவில் பங்கேற்றார்.

பிரமிக்க வைக்கும் பாரம்பரிய சல்வார், தங்க நகைகள் அணிந்து விருந்தினர்களுடன் உரையாடிய கரீனாகபூர் தோற்றங்கள் விழாவில் குவிந்திருந்த கேமரா கண்களுக்கு விருந்தாக அமைந்தது.


Happy Birthday
YASHMITH KRISHNAN



WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Happy Birthday
K.TAMIL SELVI


RS.999/-
Best MLM Software Development Company In India
At Easy EMI
9853719337
7436914247
www.mlmperfect.com


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


அருள்தரும் தெய்வம்
விளம்பர முகவர்கள் & விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
( FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
TV NEWS
பேப்பர்பாய்
8122664699


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakash : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


WANTED
— MARKETING EXECUTIVES —
We are hiring Marketing Executives (Male/Female) for immediate openings.
Full-Time / Part-Time
Salary: ₹30,000 - ₹50,000
Open to all, including Retired / VRS candidates and Job Seekers.
Location: All Over Tamil Nadu
Contact: 7789941009






1. கர்ணனைப் போல
நண்பனை தேர்ந்தெடு
நீ வீழ்கின்ற நிலை வந்தாலும்
உனக்காக போராடுவான்

2.உண்மையாக
இருப்பவர்களிடம் உறவுகள்
ஒட்டாது

3. பாவத்தை மனிதனுக்கு
செய்துவிட்டு மன்னிப்பை
கடவுளிடம் கேட்கும் அதிசய
பிறவி மனிதன்

4. அடுத்தவன் அடுப்பில்
என்ன வேகிறது என்று
பார்க்காதீர்கள் உங்கள்
அடுப்பில் என்ன கருகு
இருக்கிறது என்று பாருங்கள்

5.சரியா பேசுகிறோமோ
என்பதை விட
சரியானவர்களிடம்
பேசுகிறோமா என்பது தான்
முக்கியம்

---------------------

1. அனுபவசாலிகள்
என்பவர்கள் வயதை
கடந்தவர்கள் அல்ல
பல வலிகளை கடந்தவர்கள்

2. கவலையை மறப்பது கலை
கவலையை மறைப்பது
மாபெரும் கலை

3. பணம் உழைத்து
வாழ்பவர்களிடம்
பேசிவிட்டு சென்று விடுகிறது
பிறர் உழைப்பில்
வாழ்பவர்களிடம் ஏசி போட்டு
தங்கி விடுகிறது

4. மனிதனைத் தவிர மற்ற
அனைத்து ஜீவராசிகளும்
இயல்பாகவும் இன்பமாகவும்
வாழ ஒரே காரணம்
அவற்றுக்கெல்லாம்
பணத்தைப் பற்றி
ஒன்றும் தெரியாது

5. பணமும் மகிழ்ச்சியும்
பரம விரோதிகள்
ஒன்று இருக்கும்
இடத்தில் மற்றது
இருப்பது
இல்லை



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## கேளிர் உரைதம்மைக் கேள்!

நேரிசை வெண்பா!

கேட்டார்ப் பிணிக்கும்
தகவாக கேளிரை
நீட்டி முழக்கியே
நீண்டிட..கேட்காமல்
ஆளுமை யோடேதான்
அன்பாய்ச் சமயத்தில்
கேளிர் உரைதம்மைக் கேள்!

பரந்த மனப்பான்மை
பாங்காகக் கொண்டே
உரிமையும் உண்மையும்
கண்டே..உறுநன்மை
கோளினை மூட்டாது
கூறும் சமயத்தில்
கேளிர் உரைதம்மைக் கேள்!

## விண்வெளி வீரரைப் போற்றுவோம்!

நேரிசை வெண்பா!

விண்வெளி ஆய்வுப்
பயணத்தில் வெற்றிகண்ட
கண்ணான நாளே
கனிவாகப்பண்பினைக்
காட்டியே பாராட்டும்
நாளன்றோ பண்பினைக்
காட்டியே சீராட்டும்
நாளன்றோ சீர்!

வானவியல் மற்றும்
வான்வெளி நுட்பத்தில்
கானமாய் ஆய்வுசெய்து
கண்டாரே..ஞானத்தை!
விண்ணையே
தொட்டிட்ட
வீரரை
எந்நாளும்
கண்ணாகக்
காப்போம்
கனிவு!



**முனைவர் இராம.வேதநாயகம்.**





## காய்! காய்! காய்!

(சிறுவர்களுக்கான சிறு பா)

குலை குலையாய்
அவரைக்காய்;
கொத்து கொத்தாய்
கொத்தவரைக்காய்
கொல்லையிலே நீ பாரு.

படை படையாய் புடலங்காய்;
படல் மேலே நீ பாரு.

குண்டு குண்டு கத்தரிக்காய்;
செண்டு செண்டாய்
சுண்டைக்காய்;
பிஞ்சு பிஞ்சாய்
வெண்டைக்காய்;
செடி மேல் நீ பாரு

பந்தலிலே பாகற்காய்
கொடி நிறைய
பீர்கங்காய்
பக்கத்திலே நீ பாரு

சடை சடையாய்
முருங்கைக் காய்;
மரத்தின் மேலே நீ பாரு

குண்டு குண்டாய்
பறங்கிக்காய்;
தரை மேலே நீபாரு

மஞ்சள் நிற பூசணிக்காய்;
வேலியோரம் நீ பாரு.

பார்ப்பதோடு நில்லாமல்
பறித்தே அதை
பாட்டியிடம்; நீ
கொடுத்து விடு.

பக்குவமாய் அவள்
சமைக்க; நீயும் சப்புக்
கொட்டி
சாப்பிடு



**சசிகலா விஸ்வநாதன்**

## இது ஒரு மீள் பதிவு

காதலர் தின விசேஷ
லிமரைக்கூக்கள்
*********
காதலர் தினம் – பிப்ரவரி 14
காதல் லிமரைக்கூகள் – 14
********
குடைப் பிடித்துதானே
நடந்தனர் காதலர் இருவரும்
உலகை மறந்து–
பின் எப்படி நனைந்தனர்?
*********
வருகிறது இன்னொரு
காதலர்தினம்/ மழையின்றி
உலர்ந்த ரோஜாத் தோட்டமும்/
ஆகிடுமினி ஏதேன் வனம்.
*********
வேலெண்டின் என்னும் பாதிரி/
இரகசிய காதல் மணம்
செய்வித்ததால்/ ஆகிறார்
தூயக்காதலின் மாதிரி/
*********
வாழ்த்துமடல், பரிசுகள்
பரிமாற்றம்/ இல்லையேல்
பிப்ரவரி பதினான்காம்
தினத்தன்று/ நிலவிடும்
காதலரிடையே ஏமாற்றம்.
********
அலைப்பேசியில் உரையாடினும்
நித்தம்/ காதலர் தினத்தன்று
பெற்றாலே இனிக்கும்/
ஆப்பிள் கன்னத்தில் முத்தம்.
*********
காதலித்தாலும் இடை
விடாமல்/ கொண்டாடுவீர்
இந்த காதலர் தினத்தை/
காமத்தின் எல்லையைத்
தொடாமல்.
********
காதல் மொழிப்பேசிட
கண்போதும்/ பரிபாஷைகள்
தவறாமல் பரிமாறிக்
கொள்ளப்படும்./
கற்பனையில் மிதப்பரிவர்
எப்போதும்./
**********
காதலர் தினத்தில் திருமணம்/
நடப்பது என்பதோ சாலப்
பொருத்தம்/ வீசிடும்
இல்லறத்திலும் நறுமணம்./
*********
காதல் வாலிபத்தின்
வானவில்/ உன் காதல்
என்றும் புனிதமென்றால்/
உலகத்திற்கு அஞ்சாதே
துணிந்துநில்/.
*********
காதல் என்றும் தோற்பதில்லை/
காதலித்து மணந்தவர்க்கும்
இது புரிவதில்லை./
பொல்லாத உலகமிதை
ஏற்பதில்லை./.
**********
முதல்–மழை, முதல்–முத்தம்,
முதல்–காதல்/ இவை மூன்றும்
காதலரின் வேதம்/
காதலென்றால்



இருமனங்களின் மோதல்./
********
இந்த வையகமே கையகலம்/
பிரபஞ்சமே கால்களின் கீழ்
சுழலும்/ காதலி உடனிருந்தால்
ஆனைபலம்.
*********
இரண்டால் பெருக்கப்படும்
ஆயுள்/ காதலில் விழுந்தால்
பொய்யும் நிஜமாகும்./
நெஞ்சில் கூவும் குயில்./
********
வரைவதில் சுகமுண்டு
காதல்கடிதம்/ படித்ததனை
பாதுகாப்பதில் தேவை
கவனம்/ பூமிமேல் காதலோ
மிகப்புனிதம்/
********

## TAKE A TIME TO LOVE

'காதலர் தினத்தை' யாவது/
காதலிக்கிறேன் கண்ணே/
'காதலி நீதான்' என்று/
கனவில் பிதற்றும் முன்னே./

வீனஸின் ஆசியுடன்/
வீதியெங்கும் காதலர்கள்/
வேத நூலாம் இவர்க்கு/
வெலண்டைனின்
வியாக்கியானங்கள்/

பிப்ரவரி பதினான்கு மட்டுமே/
பரிசுத்த நாளாம் காதலர்க்கு/
பிதாவே! இவர்களையும்
மன்னியும்/
பரிதவிக்கின்றன 364
நாட்கள்/

காதல் கடிதங்கள்/
கொஞ்சம் கனமானவை/
இதயங்களையும்
இணைத்து/
அனுப்பப் படுவதால்./

பிறந்த பயனை அடைகின்றன/
பிப்ரவரியில் ரோஜாப் பூக்கள்/
மனம் திறந்து மண்டியிட்டு/
மன்மதன்கள் வழங்குகையில்/
'Dilectus insanus' என்பது/
காதலர் தினத்தின் culture/
காதல் தோல்வியில் சாகும்/
காதலரிட்ட 'Binomial
nomenclature'./

காதல் ரோஜா
இல்லையெனில்/
ஏதென்ஸ் தோட்டம்
பட்டிருக்கும்/
ஆதாம்–ஏவாள் நினைவுகள்/
வேதாகமத்தில்
விடப்பட்டிருக்கும்/

சொல்லப்படா காதல்கள்/
கண்களில் இதயத்தில்
தேங்கிடும்/
உள்ளத்தை திறவா
தருணங்கள்/
ஊமைத் தென்றலாய்
ஏங்கிடும்/

Love someone?/
express it at once./
காதலொன்றே வசந்தத்தை/
துயிலெழுப்பும் alarm
timepiece./

கதவைத் திறவுங்கள்/
காதல் வரட்டும்/
காற்று வாக்கில் /
இதயங்கள்
பூவாகட்டும்./



**முனைவர் வே. புகழேந்தி,**
பெங்களூரு

## காயமே இது பொய்யடா.!

அகங்காரம் கொண்டாய்.
அலங்காரம் செய்தாய்..
அதிகாரி நானென்று..
சொன்னாய்! ஆனாலும்
போனாயே மண்ணாய்!

உதிராது என்று..
தலைவாரிக் கொண்டாய்..
உனக்கில்லை எனக்கென்று..
நீ சொல்லிக் கொண்டாய்
ஒரு மண்டை ஓடாக
இக்கோலம் கொண்டாய்.!

வெளிவந்த வார்த்தை
விஷமாக போகும்..
நெலிகின்ற பாம்பாய்
நேர்வழியை மறக்கும்
ஒளிந்து விளையாடும்
ஆனாலும் உனது.. உடல்
கூடாய் ஆகும்.!

நூறு அடிச் சாலையில்..
வீடுகளைக் கட்டி..
நூறாறு ஏவலரை கைகட்ட
வைத்து.. யாருயெனைப்
போல அகங்காரம் மிஞ்ச..
ஆனாலும் என்ன?
எலும்பாகிப் போனாய்!

**வே.கல்யாண்குமார்.**



## பிரியமான தோழி :

தோல்வி வந்தால் எனக்கு
துணையாக இருப்பாள்...
தோழியே எனக்கு
அன்னையாக இருப்பாள்..!

வேலி போல பாதுகாப்பாள்...
தோழியே என் வெற்றிக்கு
துணையாக இருப்பாள்..!

வாளைப் போல கூர்மையாக
இருப்பாள்... தோழியே என்
வாழ்க்கைக்கு வழி
அமைப்பாள்..!

ஆருயிர் தோழியாக
இருப்பாள்... என்ஆயுட்காலம்
வரை அன்பான தோழியாக
அவளே இருப்பாள்..!


**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

## விதியின் வழியில்

"எண்ணம் போல் வாழ்க்கை"
சரிதான் ஆனால் யாரும்
"கஷ்டப்பட்டு" வாழனுமுனு
(எண்ணம் போல்)
நினைக்கிறது இல்லை !
அப்புறம் ஏன் ?
"கஷ்டப்படுகிறார்கள்"
எப்படி இந்த வரிகள்
சாத்தியம்! கண்டவனிடம்
திட்டு வாங்கி!
தகுதியே
இல்லாதவனெல்லாம்
அறிவுரை சொல்றது !
எந்த தவறும் செய்யாத
யோக்கியனாக பேசுறது !
இப்படி போன்றவர்கள்
மத்தியில் சூழலில் நாம்
வாழ்ந்து பயணிப்பது
"விதி" விதித்த
படியே...!



**G.A.கோவிந்தராஜ்**
**(எ) சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்



## சித்திரைப் பொன் மகளே வருக !

இன்று எட்டுத் திக்கிலும்
சித்திரைப் பொன் மகளே
உந்தன் முத்திரை பதித்த
முகம் தோன்றுகிறதே !

நோக்குமிடமெல்லாம்
சித்திரைப் பொன் மகளே
உந்தன் நேசக்கரம்
நீட்டுகிறதே !

கேட்குமிடமெல்லாம்
சித்திரைப் பொன் மகளே
உந்தன் மனிதநேயம்
ஒலிக்கிறதே!

பேசும் இடமெல்லாம்
சித்திரைப் பொன் மகளே
உந்தன் சீரும்சிறப்பும்
பேசப்படுகிறதே!

வணங்கும் இடமெல்லாம்
சித்திரை பொன் மகளே
உந்தன் தெய்வ அருள்
கிடைக்கிறதே!

சித்திரைப்
பொன்
மகளின்
நாளும்
புன்னகை
முகம்
கண்டு நாம்
உள்ளம் மகிழ்ந்து வணங்கி
வரவேற்போம்!



**பூ. சுப்ரமணியன்,**
சென்னை



இயற்கை அன்னையின் எழில் சூழ பசுமை நிறைந்த புல்வெளி நடுவே அழகிய நீரோடை நடுவில் நீண்டு ஓடிக்கண்ணுக்கு குளிர்ச்சியூட்ட, அதன் சுற்றுப்புறத்தில் விரிந்த புல்வெளியோரங்களில் செடிகளில் மணமிகு பூக்கள் பூத்துக்குலங்க, அதனைத்தாண்டி நீண்டு உயர்ந்து வளர்ந்திருக்கும் மரங்களுடன் என்னே இயற்கை அன்னையின் கொடை ! கண்ணுக்கு விருந்தாக, மனதிற்கு ரம்யமாக, இயற்கை சூழலில் நீரோடை சூழ நடுவில் ஒரு குடில் அமைத்து வாழும் வாழ்க்கை வரம் ! பாரதியின் கவிதை " காணி நிலம் வேண்டும் பராசக்தி காணிநிலம் வேண்டும் .... " இந்த எழில்மிகு இயற்கைச்சூழலில் தான் எழுதப்பட்டிருக்கும் !

# நூல் விமர்சனம்

நூலின் பெயர் : என்னைச் சுற்றிப் பெண்கள்
ஆசிரியர்: கிரிஜா ராகவன்
விலை : ₹100
வெளியீடு: காயத்ரி பப்ளிகேஷன்ஸ்
தொடர்புக்கு: 044–2489 8162/94443 62244




தன்னிடம் பிரச்சினைகளோடு வந்து தீர்வு பெற்று இன்று நல்ல நிலையில் இருப்பவர்களை கற்பனை மாந்தர்களாக்கி 19 கதைகளாக தொகுத்துள்ளார்.


**வாழ்க்கைப் பாடம்**

வரவு நல்ல உறவு விசு படம் போல் இருக்கும் போதே தங்கள் சொத்துக்களை பிரித்துக் கொடுத்து பெண், பிள்ளைகளால் கைவிடப்பட்ட சுசீலா- சுந்தரம் தம்பதியர் இவரின் ஆலோசனையின் பேரில் சிறிதாக கேட்டரிங் தொழில் ஆரம்பித்து பின்னர் 4-5 பேரை வைத்து வேலை வாங்கும் அளவு முன்னேறிய கதை.

**எனக்கு எண்பது:**

கிராமத்தில் இருந்து நகர வாழ்கை பிடிபடாமல் விரக்தியில் இருந்த ஒரு பெண்மணி, இவரின் ஆலோசனையின் பேரில் தனக்கு பிடித்த வாசிப்பில் நாட்டம் செலுத்திய பின், ஒரு கட்டத்தில் தானே தன் அனுபவங்களை புத்தகமாக எழுதி அவர் மகனே அம்மாவைப் புகழும் அளவுக்கு உயர்கிறார்.

**ஸ்ரீகாந்த் திருச்சி**



## அவள்

உன்னிடம்தான் உதிக்கிறது
என் எல்லாக்கவிதைகளும்...

உன்னிடம்தான் முடிகிறது
என் எல்லாக் கதைகளும்....

உன்னிடம்தான்
தொடங்குகிறது
என் எல்லாக் கனவுகளும்...

உன்னிடம்தான்
அடங்குகிறது
என் எல்லா
நினைவுகளும்...

உன்னிடம்தான்
மலர்கிறது
என் எல்லா
ரோஜாப்பூக்களும்!



**கே. பி. ஜனார்த்தனன்**






நீ,,,என்னும் குறுகிய
இலக்கணத்துக்குள்
அடைக்க முடியாத
அற்புத மாத்திரை அவள்....,
என் சந்தோச
தருணங்களுக்காய்
தென்றலாய் தேடியலைந்து
தேன் கோப்பை
கொடுப்பவள்,,,

இருக்கமாய் இருந்த
என் தடுகளுக்கு
சிரிப்பு பழகி மகிழ்ந்தவள்...,
காமம் எனும் சொல்
அவள் வருகையின்
பின்னரே தற்கொலை
செய்துகொண்டது,,,

வசந்தங்களை
வாரி தந்தவள்,,
வடக்கோ தெற்கோ
எப்படியோ உதிர்ந்தோம்,,
காலத்தின் கைகளில்
கரைந்தோம்,,,

என்றேனும் சந்தித்தால்
நான் சேமித்து
வைத்திருக்கும்
நினைவுகளை நட்பின்
வெகுமதியாய்
அவளுக்கு
காணிக்கையாக்குவேன்,....



என் இதய வீதிகளில்
குவிந்து கிடந்த
கருங்கற்களை
கன்னங்களின்
கீர்த்தியினால்
கரைத்துப்போட்டவள்...,

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்



**தமிழ் புத்தாண்டு ..**

சென்ற திங்களில்
இலையுதிர்த்து மொட்டையாய்
நின்ற மரம்
பூத்துக் குலுங்குகிறது..

வேப்ப மரங்களில் புத்திளம்
இலைகளுடன்
வெள்ளை மலர்கள்
தலையசைத்து ஆடுகின்றன..

அக்கா அக்கா என்று கூவி
அழைத்த "அக்கா குருவி "
அறிவிக்கிறது
ஆண்டு மலர்வதை ...

ஐவகை கனிகளுடன் ...
ஐஸ்வர்ய பொருட்களுடன் ..
அழகழகாய் புத்தாடையுடன்..
முகம் பார்க்கும்
கண்ணாடியும்..

மாவிலை தோரணமும்
மஞ்சள் குங்குமமும்..
மங்கலப் பொருள்களும்
மனைதனை அலங்கரிக்க ..

மாங்காய் பச்சடியுடன்
மணம் மிகுந்த சாம்பார் ..
வெல்லப் பாயசமும்..
வெள்ளை அவலுடன் சேர ...
ஆள் மயக்கும் அவியலும் ..
அடுக்கைளையில் மணக்க ...

செழிப்பான சிறந்ததொரு
ஆண்டாய் இவ்வருடமும்
அமைய .. ஆண்டுதோறும்
வைக்கும் அழகான



பிரார்த்தனையை
இவ்வருடமும்
வைப்போம் ..
இறைவன்
சன்னதியில்!!!

**தி.வள்ளி**
திருநெல்வேலி



**தேடல்கள் பலவிதம்**

" அரசியல்வாதி
ஓட்டைத் தேடுகிறான் பதவி
நாற்காலியைத்
தேடுகிறான் ..."

இளமையில் உள்ளவன்
நல்ல வாழ்க்கையை
தேடுகிறான்..."

நல்ல வாழ்க்கை
கிடைத்தவன் சந்தேகத்தில்
தொலைத்து விட்டு
தேடுகிறான் ...."

மாற்றுத் திறனாளி
முழு உடலைத்
தேடுகிறான்
முழுமை பெற்றவன்
காசு பணத்தை
தேடுகிறான் ....."

இல்லாதவன் உணவு
இல்லையைத் தேடுகிறான்
இருப்பவன் பசி எடுக்காமல்
தேடுகிறான். ...."

மனதை அடக்கியவன்
இறைவனை
தேடுகிறான்
மனதை தொலைத்தவன்
வீதியில் தேடுகிறான் ..."

முதுமையில் முடியாதவன்
மரணத்தை தேடுகிறான்
பிள்ளையைப் பெற்றவன்
ஆதரவை தேடுகிறான் ...."

விவசாயி மண்ணில்
தேடுகிறான்
வானத்தைப் பார்த்து
மழையைத்
தேடுகிறான் ....."

காதலில் விழுந்தவன்
கனவில் தேடுகிறான்
கனவைத்தொலைத்தவன்
பொது வெளியில்
தேடுகிறான் ..."



தேடல் தான்
வாழ்க்கை
என்றாலும்
தேடலிலும்
ஒரு அர்த்தம்
வேண்டும்
....."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி

1. கைகளுக்கும் காலுக்கும்
எவ்வளவு வலிமை உண்டு
என்பதை வறுமை ஒன்றே
தீர்மானிக்கிறது

2. அன்பும் அடமானமும்
ஒன்றுதான் ஏண்டா வச்சோம்
என்று ஒருநாள்
வருத்தப்படுவோம்

3. பெண்களிடம் வயது
ஆண்களிடம் சம்பளம்
அரசியல்வாதிகளிடம்
கொள்கை இவற்றைப் பற்றி
கேட்கக் கூடாது

4.போராடுவது வெற்றி தருமா
அல்லது தோல்வி தருமா
என்று தெரியாது
ஆனால் நிச்சயம்
அனுபவத்தை தரும்

5. அடுத்த நிலையை
அடைய முயற்சி செய்
அடுத்தவன் நிலையை
அடைய முயற்சி செய்யாதே

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

**இறையே!**

உன்னைத் தவிர வேறு
நினைப்பேது? நினைவும்
கனவும், நிறைவும் குறையும்,
கரைய கரைய உன்னை
ஒழிய வேறு ஏதும் நான்
காணிலை. காணும்
இடமெல்லாம் காணும்
எதுவும் நீயே ஆனபின்
நினைப்பு– மறப்பு எனும்
இருமை இல்லை எனக்கு.
பிறப்பும் இறப்பும் இல்லை;
இனி எனக்கு. அகண்டனே!
அகிலனே!அனாதியே!
செம்பொன் பேரொளியே!
உன் ஒளிக்குள் நான்
ஒருமித்து உள்ளேன்.
என் உயிரொளியில் நீ!



இதை
எங்கனம் நான்
விவரிக்க?
விரிக்க
இயலாது!
சுருங்கி
உன்னில்
இருக்க இரும்; என்றே
உரையும்.

**சசிகலா விஸ்வநாதன்**

கடந்துபோன காலங்கள்
கழுவிப்போன

பல நிகழ்வுகளுள் எனக்குள்
நீயும் கரைந்து போனாய்

நீ மட்டும் எப்படி இன்னும்
அப்படியே இருக்கின்றாய்

என்ற உன் பார்வைக்கு
மாற்றம் ஒன்றே மாறாதது
என்பதை பொய்யாக்க

முயற்சிக்கின்றேன் என்பதை
சொல்லி மெல்ல நகைத்தேன்
உன் கேள்விக்கு பதிலாய்

ஓடும் நீரை கையில் அள்ளி

நிச்சயம் கடலிடம்
சேர்வாயா? என கேட்டேன்

என் கையில் ஒட்டிய நீர்
சிரித்தது உன்னைப்
போல்தான் நான் என்று

ஆற்று நீரின் ஆசையாய் என்
ஆசைகளும்..

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

மீன்களைப் போல
வாழுங்கள் இயல்பும்
உரிமையுமாய்..

பறவைகளைப் போல
வாழுங்கள் இயல்பும்
ஒழுங்குமாய்..

பூச்சிகளைப் போல
வாழுங்கள் இயல்பும்
நுட்பமுமாய்..

இலைகளைப் போல
வாழுங்கள் இயல்பும்
செழுமையுமாய்..

இயல்பான வாழ்வில்
எல்லாமும் கைகூடும்
இயல்பாய் வாழ்ந்து
இன்பமாய் இறந்து போங்கள்.



இவ்வுலகம்
இயல்பானது
எல்லாமும்
இயல்பானது..

**ஹரணி**
தஞ்சாவூர்



**புத்தாண்டு தரிசனம்...**

சித்திரையே வருக...
சிந்தனைச் செல்வத்தோடு
சிறப்புகள் பலவும் அள்ளித்
தருக...!

ஆங்கிலப் புத்தாண்டு
அகிலத்தின் வழக்கு...
தமிழ்ப் புத்தாண்டு
தொன்மையின் கிழக்கு!

பண்டிகைத் திருநாளை
பேதத்தால் பிரிக்க வேண்டாம்.
பகை நெருப்பு மூட்டி பசுமைப்
பொலிவுக்கு
தாழ்ப்பாள் போட்டு
தடையாகவும் வேண்டாம்...

வேரின் மகத்துவம்
தெரியாமல் வெறும்
கிளைகளில் நீரூற்றும்
வெளிச்சமில்லா வழிமுறைக்கு
விடை கொடுத்து
விளக்காவோம்!

நீர்க்குமிழி சபதமெல்லாம்
நிமிடப் பொழுதில் மறைந்து
போகும்... நெஞ்சில் நங்கூரம்
பாய்ச்சும் சங்கல்பமே,
நிலைத்து நின்று நிலையை
உயர்த்தும்.

சித்திரையே வருக...
சிந்தனைச் செல்வத்தோடு
சிறப்புகள் பலவும் அள்ளித்
தருக...!

கொண்டாட்டம்
வேண்டுந்தான்...
குதூகலமும் வேண்டுந் தான்
கூடவே கூர்மதி கொண்டு
குவலயத்தை
காத்திடவும் வேண்டும்!

வகைவகைப்
பட்சணங்களோடு
நல் விருந்துண்டு மகிழ்வோம்
வாழ்வின்
வளர்ச்சிக்கு வழிகாட்டும்
வெற்றிச் சிந்தனைகளை,
உள்ளத்தின் வயிற்றுக்கு
அக விருந்தாக்கி உயர்வோம்!

பல்சுவைக் கனிகளைப்
படைத்து காணும் பரவசம்
தனியின்பம்... பக்குவ
வளத்தால் மனம்பழுத்து
அருங்கனியாவது பேரின்பம்!

கவலை மறந்து களிப்பு
கொள்வோம்... கடவுளை
வணங்கி பேரமைதி
பெறுவோம்... வஞ்சனை,
சூது, வன்மம் ஒழிப்போம்...
வளர் அறத்தின் உயர்
அன்பின் உச்சத்தில்
ஒளிர்வோம்! புத்தாண்டு
தரிசனம், காட்டுவதில்
இல்லை... காண்பதில் தான்
இருக்கிறது.

தனிமனித ஒழுக்கப் பேணலில்
தடுமாற்றமே இல்லாத
தரமிக்க தரணியை
சமைப்போம்... தூய வழி
நின்று மக்கள் துயரமெல்லாம்



வேரோடு
நீங்கிட
வீறு கொண்டு
எழுவோம்...
போரில்லா
புத்துலகம்
புதுப்புனலாய்
பொங்கிட
புத்தாண்டில் புது சபதம்
எடுப்போம்! சித்திரையே
வருக... சிந்தனைச்
செல்வத்தோடு சிறப்புகள்
பலவும் அள்ளித் தருக...

**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்

**வருகை**

தூரத்து மணியோசை
சொல்லி விடுகிறது...
தபால்காரரின் வருகையை.

சின்னக் கொலுசொலிகள்
சொல்லி விடுகின்றன...
குழந்தைகளின்
வருகையை.

அடுப்பங்கரையில்
கொதிக்கும் கறியின்
வாசம் சொல்லி
விடுகிறது....

உறவினர் வருகையை.
தரையைத் தேய்த்தபடி
வருகிற செருப்புச் சத்தம்
சொல்லி விடுகின்றன...
அந்நியர் வருகையை.
பூனை பாதம் பதித்து,
மெல்ல பின் வந்து..



'அய்...'யென
கட்டியணைக்கையில்
தான் உணர முடிகிறது...
உன் வருகையை மட்டும்.

**எஸ். சந்திரசேகரன்**
அமுதா செஞ்சி
கோட்டை



**சித்திரையே வருக !**

மனித மனங்களும் பூத்துக்
குலுங்கும் ஆண்டாக
இருக்கட்டும்...
பக்தியை இதயத்திலும்...
மலர்ச்சியை முகத்திலும்...
இனிமையை பேச்சிலும்...
சுற்றமும் உற்றமும் நட்பை
வளர்த்து.. பகைமையை
கலைந்து... இருளை
நீக்கி
ஒளி ஏற்றும் ஆண்டாக
இப் ' புராபவ வருடம் '
இனிதே துவங்கட்டும் !

விசுவாசு ஆண்டு
விடை பெற்று... புராபவ
ஆண்டு துவங்கும்
சித்திரை ஒன்று...
மரங்களும், மலர்களும்
பூத்துக் குலுங்கும்
இவ்வாண்டில்...



**எம்.பி. தினேஷ்.**
கோவை



உன் புன்னகை
மலர்ந்த மலர்..
உன் பார்வை இழுக்கும்
மின்னல்...
உன் முகம் ஒரு காந்தம்...
உன் கன்னம் கஸ்மீர்
ஆப்பிள்... உன் கண்
நாவை பழம்..
உன் உதடு மாதுளை பழம்...
உன் கழுத்து ஒரு கலை...
உன் இதயம் ஒருஅரியணை...
மொத்தத்தில் நீ ஒரு சிலை...
நீ அறிவையும், ஆற்றலையும்
உறுப்பத்தி செய்யும் ஆலை...



உன்னை
காப்பதே
என் முதல்
வேலை....!!

**பொன். கருணா**
நவி மும்பை

**தலைப்பாகை நாள்!**

(சீக்கியர் அடையாளம்)
அறுசீர் மண்டிலம்.

பெருமையின் அடையாளம்
தலைப்பாகை பீடுடைய
சீக்கியரின் கலைப்பாகை
அருமையான அடையாளம்
தலைப்பாகை அர்த்தமுள்ள
சீக்கியரின் நலப்பாகை!
திருவான பொருளன்றோ
தலைப்பாகை சீக்கியரின்
சின்னம்தான் மலைப்பாகை
உருவாகும் தலைமுடியை
மறைத்திடவே
உணர்ந்தேதான் மறைத்தாரே
தலைப்பாகை!

விழுமியத்தைக் காட்டிடுமே
தலைப்பாகை வீறுதன்னைக்
காட்டிடுமே தலைப்பாகை
ஒழுக்கத்தின் மேன்மையாம்
தலைப்பாகை ஒற்றுமையின்
சின்னம்தான் தலைப்பாகை!
முழுமையுடைச் சிந்தனையே
தலைப்பாகை மேன்மைக்கே
காட்டாகும் தலைப்பாகை
அழகுக்கும் அடையாளம்
தலைப்பாகை அன்புகாட்டும்
சீக்கியரின்
தலைப்பாகை!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



**புத்தாண்டு வாழ்த்துகள்**

ஒரு இனிய துவக்கம்
கடந்த ஆண்டில்
கண்ட கனவுகளில்
கொண்டது எத்தனையோ?
கொண்டதிலும்
நின்றது எத்தனையோ ?
வென்றது எத்தனையோ
வாழ்க்கை என்னும்
முடிவதில்லை
வெற்றியோ தோல்வியோ
இன்பமோ துன்பமோ
நல்லதோ கெட்டதோ
தெரிந்ததோ தெரியாதது
தெரியுமோ தெரியாதோ
வாழ்ந்தாக வேண்டும்
நம் வாழ்க்கையை நாம்
வாழ்ந்தாக வேண்டும்
கடந்தவை காணாமல்
போகட்டும் நடப்பவை
நல்லதாக இருக்கட்டும்
நினைவுகள் என்றும்
நிற்பதில்லை காற்றுடனே
கற்பூரம் போலும்
நாட்களின் ஓட்டத்திலே
கரைந்து போகும்
மகிழ்ச்சி தரும்
நினைவுகளை மனதினில்
நினைந்துகொண்டே
புத்தாண்டை வரவேற்போம்



புதியதொரு
முயற்சியுடன்
வெற்றி பெற
வணங்கி
நிற்போம்

**ஓம் குமார் P N**
மதுரை

**மற்றொன்று...**

அடித்தல் திருத்தல்
ஏதுமற்ற ஒரே தடத்தில்
எழுதி முடித்தேன் அந்தக்
கவிதையை.

மற்றொரு வாசிப்பில்
ஏதோவொன்று கவிதையில்
கூடியிருப்பதாகவோ,
குறைந்திருப்பதாகவோ
உணர்ந்தேன்.

படித்துப் பார்த்த ஒரிரு



நண்பர்களின்
பாராட்டில்
... திருத்தம்
செய்ய
மனம் வராது
அப்படியே
விட்டுவிட்டேன்.

பிறகொரு நாள்
ஏதேச்சையாய் பார்க்கையில்
தெரிந்தது..


அது என் கவிதைபோல்
இல்லாதிருப்பது.


**எஸ். தயாளன்**
காட்பாடி சேவூர்




மொழிக்கெனப் பிறந்ததோ;
காலச் சுழற்சியைக்
கவனிக்கப் பிறந்ததோ
எவ்வகையாயினும்
ஏதோ ஒரு புத்தாண்டு
அவ்வப்போது வந்து வந்து
உரைப்பதென்னவோ
கழிந்து ஓராண்டு
கதைக்காதே எல்லாம்
நானே என்று
இறைவனோ இயற்கையோ
பொறுமையுடன்
பார்த்திருக்கும்! அந்தப்
பொறுமை நீண்டிருக்க
உள்ளும் வெளியும் தூய்மை
காத்து உவந்து வாழ்வாய்
நீயே என்றும் என்பது தான்!
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
புத்தாண்டு வாழ்த்துக்கள்
அன்புடன்,

**தெ.முத்துக்குமார்**
மைசூர்.




# நூல் விமர்சனம்

நூலின் பெயர்: பகடை பன்னிரெண்டு!
ஆசிரியர்: ஈரோடு கார்த்திக்
விலை : ₹350
வெளியீடு: வகம் பதிப்பகம்
தொடர்புக்கு :9894692768

ஆதித்ய கரிகாலனை ரவிதாசன் மற்றும் அவன் சகோதரர்கள்தான் கொன்றார்கள் அதுவும் வர்மக்கலையை பிரயோகித்து எனக் கண்டறியப்பட்டு, பிராமணர்களைக் கொன்றால் தோஷம் என சிறையிடலிடப்பட்டு,அங்கிருந்த பிரம்மராயர் விதித்த தீர்ப்பால் 15 நாட்களுக்கு பிறகு அவர்களை நாடு கடத்த திட்டமிடப்படுகிறது.

அவர்கள் நாடு கடத்தப்படும் வேளையில் வழியில் உண்ண உணவின்றி இறக்க , குந்தவை தீட்டிய திட்டம் நிறைவேறியதா?காந்தளூர் வர்மக்கலை பயிற்சி மையம் தான் ஆதித்த கரிகாலன் மரணத்திற்கு முக்கிய காரணம் என அது தீக்கிரையாக்கப்படுகிறது. ஓலைச்சுவடிகளுடன் தப்பிய அச்சுதவர்மனின் 12 சீடர்கள் குருவின் மறைவிற்கு காரணமான அருள்மொழிவர்மனை கொல்ல முடிவு செய்கின்றனர்.

மன்னரின் உயிருக்கு ஆபத்து எப்போது வேண்டுமானாலும் நேரலாம் என்பதற்கான ஒரு தடயம் மலைத்தேவன் கையில் சிக்குகிறது. அது என்ன ? சதி முறியடிக்கப்பட்டதா? அறியப் படியுங்கள்....

**ஸ்ரீகாந்த் திருச்சி**






















WANTED

வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106













Special Invitation
To Retired Senior Housewives
Businessmen Bankers CAs
NRIs Age.30 to 70.Qualification.
SSLC/Graduate

★ To Restart Your Second Innings
With A Career Business Opportunity

- Flexible Timing Unlimited Incentive.
- No Target Work From Home
Training Provided
- For Successful Business.

Contact Mr.Irudaya Raj
Ph.9486634780


WANTED
MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED
Managers: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000
Telecaller -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer
Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000
Call/wapp: 9438610756


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


! WANTED !
Muslim Lady
Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet
Contact: 99401 46318


உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம்
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
• குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
• இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
• எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
• இடங்கள்:
• பெருங்குடி, துரைப் பாக்கம்
• காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
• விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97


ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact
9790979539


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY - 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756


WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
We Done Here
9840882711
7200043675
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872


முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


DIGITAL MARKETING SOLUTIONS
DIGITAL MARKETING
EMAIL MARKETING
SEO
smartpromoters.com


THE BEST CENTRE OF
CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


ஸர்வேஜநா சுகிநோபவந்து
அஜந்தா பாக்கு
சம்பிரதாய தாம்பூல பாக்கு
RAVIKUMAR AND COMPANY
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
అజంతా
వక్కపలుకులు
సంప్రదాయ తాంబూళ వక్కపలుకులు
சம்பிரதாய தாம்பூல பாக்கு! பூஜைக்கு உகந்த பாக்கு
21, North Mada Street, Viilivakkam, Chennai - 600 049 PH: 044 26171341 | emalir ajanthasupari@hotmail.com


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


PALANIVEL
9677174691
9176232026
PR
TRANSPORT
NO.1-B, parivallai street, Murugappa nagar,
Manali high road, Ernavoor,Chennai-57


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com


உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com


வாரம் தோறும்
பல்சுவை செய்திகளை
தரும் தரமான
வார இதழ்
பேப்பர்பாய்
www.Paperboy.com

# பல்சுவை களஞ்சியம்

# மீம்ஸ்

# டைட்டானிக் மூழ்கியது



பிரான்சின் செர்பர்க் மற்றும் அயர்லாந்தின் குயின்ஸ்டவுன் ஆகிய இடங்களில் இறுதிப் பயணிகளை ஏற்றுவதற்காக நிறுத்திய பிறகு, அந்த பிரம்மாண்டமான கப்பல் நியூயார்க் நகரத்தை நோக்கி முழு வேகத்தில் புறப்பட்டது . இருப்பினும், ஏப்ரல் 14 அன்று நள்ளிரவுக்குச் சற்று முன்பு, ஆர்.எம்.எஸ் டைட்டானிக் ஒரு பனிப்பாறையிலிருந்து தனது பாதையைத் திருப்பத் தவறியதால், அதன் மேல்தளத்தில் குறைந்தது ஐந்து அறைகள் உடைந்தன. இந்த அறைகளில் நீர் நிரம்பி, கப்பலின் முன்பகுதியைக் கீழே இழுத்தது. டைட்டானிக்கின் அறைகளின் மேற்பகுதி மூடப்படாததால், உடைந்த அறைகளிலிருந்து வந்த நீர் அடுத்தடுத்த அறைகளில் நிரம்பி, முன்பகுதி மூழ்கவும், பின்பகுதி நீருக்கு மேலே கிட்டத்தட்ட செங்குத்தான நிலைக்கு உயரவும் காரணமாக அமைந்தது. பின்னர் டைட்டானிக் இரண்டாக உடைந்து, ஏப்ரல் 15 அன்று அதிகாலை சுமார் 2:20 மணியளவில், அதன் பின்பகுதியும் முன்பகுதியும் கடலின் ஆழத்திற்குச் சென்றன.

உயிர் காக்கும் படகுகளின் பற்றாக்குறை மற்றும் திருப்திகரமான அவசரகால நடைமுறைகள் இல்லாத காரணத்தால், 1,500-க்கும் மேற்பட்டோர் மூழ்கும் கப்பலில் மூழ்கினர் அல்லது பனி நிறைந்த வட அட்லாண்டிக் கடலில் உறைந்து இறந்தனர். உயிர் பிழைத்த சுமார் 700 பேரில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளும் ஆவர். இந்தத் துயரச் சம்பவத்தில், புகழ்பெற்ற பிரிட்டிஷ் பத்திரிகையாளர் வில்லியம் தாமஸ் ஸ்டீட் மற்றும் ஸ்ட்ராஸ், ஆஸ்டர், குகன்ஹெய்ம் செல்வங்களின் வாரிசுகள் உட்பட பல குறிப்பிடத்தக்க அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் குடிமக்கள் உயிரிழந்தனர்.

டைட்டானிக் மூழ்கிய ஒரு மணி நேரம் 20 நிமிடங்களுக்குப் பிறகு , குனார்ட் நிறுவனத்தின் கார்பதியா கப்பல் வந்து சேர்ந்தது. உயிர் காக்கும் படகுகளில் இருந்தவர்கள் கப்பலுக்குள் கொண்டுவரப்பட்டனர், மேலும் ஒரு சிலர் நீரிலிருந்து மீட்கப்பட்டனர். விபத்து நடந்த நேரத்தில் லேலண்ட் நிறுவனத்தின் கலிஃபோர்னியன் கப்பல் 20 மைல்களுக்கும் குறைவான தூரத்தில் இருந்ததாகவும், ஆனால் அதன் வானொலி இயக்குபவர் பணியில் இல்லாததால் டைட்டானிக்கின் ஆபத்து சமிக்ஞைகளைக் கேட்கத் தவறியதாகவும் பின்னர் கண்டறியப்பட்டது.







## விடுகதை



| | |
|---|---|
| உடம்பெல்லாம் சிவப்பு, அதன் குடுமி பச்சை. அது என்ன? | தக்காளி |
| சிறுதூசி விழுந்ததும் குளமே கலங்கிடும். அது என்ன? | கண் |
| மழை காலத்தில் பிடிப்பான் அவன் யார்? | காளான் |
| எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றாது. அவன் யார்? | மின்விசிறி |
| அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைப்பான். அவன் யார்? | மோளம் |
| தொட்டு பார்க்கலாம் ஆனால் எட்டி பார்க்க முடியாது. அது என்ன? | முதுகு |

# உலக சித்தர்கள் தினம்



உலக சித்தர்கள் தினம் என்பது சித்த மருத்துவத்தின் சிறப்பைப் போற்றவும், அகஸ்தியர் உள்ளிட்ட சித்தர்களுக்கு நன்றி தெரிவிக்கவும் கொண்டாடப்படும் ஒரு முக்கிய நாளாகும். இது பொதுவாக ஜனவரி 6 (அகஸ்தியர் பிறந்த நாள் - Vikas-pedia) அன்று இந்திய அரசால் தேசிய சித்த மருத்துவ தினமாக கொண்டாடப்படுகிறது. இருப்பினும், சில கலாச்சார மரபுகளில், சித்திரை 1 (தமிழ் புத்தாண்டு) அன்றியும் சித்தர்கள் தினம் சிறப்பாக அனுசரிக்கப்படுகிறது.

முக்கிய தகவல்கள்:
நோக்கம்: சித்த மருத்துவத்தின் மகத்துவம், விழிப்புணர்வு மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகளை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பது.

சிறப்பு: இந்த நாளில் சித்தர்கள், நவகோடி சித்தர்கள் யாகம், சிறப்பு பூஜை மற்றும் சித்த மருத்துவ விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

சித்தர்களின் பங்கு: ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் நோயற்ற வாழ்விற்கு வழிவகுத்த சித்தர்களை வணங்கி, அவர்களின் மருத்துவக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதாக உறுதி ஏற்பது.

# ஜோக்ஸ்



ஒரு புத்தக கடைக்குள் சென்ற ஒருவர் பிரச்சனைகளை தீர்க்க எதாவது புக் இருக்கிறதா என கேட்டுள்ளார்.

விற்பனையாளர்: கண்டிப்பாக சார்.. உங்களின் 50% பிரச்சனைகளை தீர்க்கும் இந்த புத்தகத்தை வாங்கிக்கொள்ளுங்கள்.

வாடிக்கையாளர்: 50% மட்டும்தானா?

விற்பனையாளர்: அப்போ 2 புத்தகமா வாங்கிக் கொள்ளுங்கள் சார்..

வாடிக்கையாளர்: !!!

-----------------------

ஹார்ட்வேர் கடைக்குள் நுழைந்த ஒரு வாடிக்கையாளர்,

வாடிக்கையாளர்: சார், ஒரே வெட்டில் பெரிய மரத்தையும் சாய்க்க கூடிய ரம்பம் இருக்கிறதா?

விற்பனையாளர்: மன்னிக்கவும்.. எங்களது கடையில் ஆச்சர்யங்கள் விற்கப்படுவதில்லை. நன்றாக வெட்ட கூடிய ரம்பம் மட்டுமே விற்கிறோம்.

வாடிக்கையாளர்: !!!

-----------------------

வாடிக்கையாளர்: இந்த பொருளை பற்றி எனக்கு பெரிதாக கருத்து இல்லை. உங்களால் இதற்கு உத்தரவாதம் தர முடியுமா?

விற்பனையாளர்: கண்டிப்பாக சார்.. நிச்சயமாக அது உங்களுக்கு பிடிக்கும், என்னால் நீங்கள் வாங்கும் வரை இந்த உத்தரவாதம் மட்டுமே கொடுக்க முடியும்.

வாடிக்கையாளர்: !!!

-----------------------

விற்பனையாளர்: சார்.. இந்த பொருள் மிகவும் சிறப்பானது.

வாடிக்கையாளர்: எதை வைத்து சொல்கிறீர்கள்?

விற்பனையாளர்: விலை அதிகமாக இருக்கும்போதே தெரிய வேண்டாமா சார்.. கண்டிப்பாக சிறப்பானது தான்.

வாடிக்கையாளர்: !!!



# சமையல் அறை ஸ்பெஷல்



## உடல் ஆரோக்கியத்துக்கு உகந்த இடியாப்பம்

தென்னிந்தியாவின் பாரம்பரிய உணவுகளில் இடியாப்பம் மிகவும் முக்கியமானது. இது ஆவியில் வேகவைக்கப்படுவதால் ஆரோக்கியமானது மட்டுமல்லாமல், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் எளிதில் செரிமானம் செய்யக்கூடிய உணவாகும். பெரும்பாலும் தேங்காய்ப்பால் அல்லது குருமாவுடன் சேர்த்து உண்ணப்படும் இந்த இடியாப்பம் உடலுக்கு உகந்தது.

சங்க காலத்திலேயே இடியாப்பம் இருந்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. 'சூடாமணி நிகண்'டில் இது பற்றிய குறிப்பு இருக்கிறது. 'இடி' என்றால் நெல்லில் இருந்து தயாராகும் மாவு, அதில் செய்யப்படும் அப்பம் என்பது இதன் பொருள். முதலாம் நூற்றாண்டிலேயே இடியாப்பம் இந்தியாவில் இருந்தது என்று வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழில் 'நூல்புட்டு', கன்னடத்தில் 'நூபுட்', மலேஷியாவில் 'புட்டுமாயம்'... என அழைக்கப்படும் இடியாப்பம் இலங்கை வரை பிரபலமான ஓர் உணவு. கடலோரப் பகுதிகளிலும், நகரத் தெருக்களிலும் தெரு வியாபாரிகள் கூவிக்கூவி விற்ற அரிய உணவு. 'பெரும்பானாற்றுப்படை', 'சிலப்பதிகாரம்', 'மதுரைக்காஞ்சி' போன்ற தமிழ் இலக்கியங்களில் எல்லாம் இதைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

சுத்தமான அரிசி மாவில் உப்பு, சிறிது எண்ணெய் சேர்த்து வேக வைத்து, இடியாப்ப அச்சில் பிழிந்து எடுத்து அவித்தால் இடியாப்பம்! தேங்காய்ப் பால், பால், மீன் குழம்பு, பாயா இவற்றுடன் சாப்பிட அபாரச் சுவை! கேரளாவில் கொண்டைக்கடலையை கிரேவியாக்கி, அதனுடன் சேர்த்துச் சாப்பிடும் பழக்கம் உண்டு.

இது, எளிய, ஆரோக்கியமான காலை உணவு. இடியாப்பத்தை உதிர்த்து, உப்புமாவாக்கலாம்.



நம் ஊரில் 'சேவை' என்று சொல்வார்கள். இதைக்கொண்டு எலுமிச்சை, தக்காளி, புளி என விதவிதமாக 'சேவை' செய்து ருசிக்கலாம். இடியாப்பத்தில் பிரியாணி செய்பவர்கள்கூட உண்டு.

தினை, வரகரிசி, சோளம், கம்பு, கேழ்வரகு என சிறுதானியங்களில் செய்து ருசி பார்க்கும் அளவுக்கு இடியாப்பத்தின் மகத்துவம் இன்றைக்கு அனைவரும் உணர்ந்த ஒன்றாகிவிட்டது. ஒரு இடியாப்பத்தில் சராசரியாக 45 கலோரிகள், 0.27 கிராம் கொழுப்பு, 9.68 கிராம் கார்போஹைட்ரேட், 0.72 கிராம் புரோட்டீன் ஆகியவை உள்ளன. ஆயுர்வேத மருத்துவமுறையில், இது வாதத்தையும் பித்தத்தையும் சமநிலையில் வைத்திருக்கும் என்கிறார்கள்.

இதை இளஞ்சூடாக சாப்பிடுவது நல்லது. இதில் நமக்குத் தேவையான கார்போஹைட்ரேட், புரோட்டீன், இரும்புச்சத்து மற்றும் கொழுப்புச்சத்து அனைத்தும் உள்ளன. எனவே, உடலைக் கட்டுக்கோப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவும். எண்ணெய் சேர்க்காத, ஆவியில் வேகவைத்துச் செய்யப்படுவது என்பதால், வயிற்றுக்கு எந்தப் பிரச்சனையையும் ஏற்படுத்தாது. நோய்வாய்ப்பட்டவர்களுக்கு, நோயின் தன்மைக்கேற்ப இடியாப்பம் செய்து, மற்றவற்றுடன் கலந்து கொடுக்கலாம். குழந்தைகளுக்கு அடிக்கடி கொடுக்க ஏற்ற உணவு.

## விறகு அடுப்பில் சமைப்பதால் கிடைக்கும் நன்மைகள்

கியாஸ் சிலிண்டர் சப்ளை நிறுத்தப்பட்டதால் பல ஓட்டல்கள் விறகு அடுப்புக்கு மாறி வருகிறது. கியால் சிலிண்டர் தட்டுப்பாட்டால் சமூக வலைத்தளங்களில் பல்வேறு பதிவுகள் வைரலாகி வருகிறது. அதன்படி, உலகின் பல பகுதிகளிலும் இயற்கை கழிவுகளில் இருந்து எரிவாயுவை இலவசமாக உற்பத்தி செய்து கொள்ள உதவும் 'ஹோம் பயோ கியாஸ்' அமைப்பை உருவாக்கி வருகின்றனர். இந்த ஹோம் பயோ கியாஸ் என்பது வீடுகளில் மீதமாகும் இயற்கை மற்றும் உணவுக் கழிவுகளில் இருந்து உயிரி எரிவாயுவை உருவாக்குவது ஆகும்.
காய்கறி தோல் உள்பட சமையலறை கழிவுகள் அனைத்தையும் சிறிய துண்டுகளாக வெட்டி, தண்ணீர் கலந்து போட்டால் 7 முதல் 10 நாட்களில் மக்கி மீத்தேன் வாயு வெளியாகும். இந்த வாயுவை குழாய் மூலம் அடுப்புக்கு இணைத்து, எரிவாயுவாக்கி சமைக்கலாம். இதனிடையே, விறகு அடுப்பில் சமைப்பது மற்றும் அதன் நன்மைகள் குறித்தும் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. அது குறித்து பார்ப்போம்...
விறகு அடுப்பில் சமைத்து உண்பது, தற்கால நவீன அடுப்புகளை விட அதிக சுவையையும் ஆரோக்கியத்தையும் தரக்கூடியது.



**கூடுதல் சுவை மற்றும் மணம்:** விறகு எரியும் போது வெளியாகும் லேசான புகைக்கரி, உணவிற்கு ஒரு தனித்துவமான சுவையையும் வாசனையையும் (Smoky flavor) சேர்க்கிறது. குறிப்பாக மண் பானைகளில் சமைக்கும் போது இந்தச் சுவை இன்னும் அதிகமாகும்.
**சத்துக்கள் பாதுகாப்பு:** விறகு அடுப்பில் வெப்பம் சீராகவும் மெதுவாகவும் பரவுவதால், காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகளில் உள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் சிதையாமல் பாதுகாக்கப்படுகின்றன. குறிப்பாக அதிக வெப்பத்தில் அழியக்கூடிய வைட்டமின் C போன்ற சத்துக்கள் இதில் நன்றாகத் தக்கவைக்கப்படுகின்றன.
**உடல் ஆரோக்கியம்:** விறகு அடுப்பு சமையல் மெதுவாக (Slow cooking) நடப்பதால், உணவு எளிதில் செரிமானமாகும் தன்மையைப் பெறுகிறது. இது வயிற்று உபாதைகளைக் குறைக்க உதவுகிறது.
**பொருளாதாரச் சிக்கனம்:** எரிவாயு (Gas) அல்லது மின்சார அடுப்புகளை விட விறகு அடுப்பு செலவு குறைவானது. கிராமப்புறங்களில் எளிதாகக் கிடைக்கும் சுள்ளிகள் மற்றும் விறகுகளைக் கொண்டு சமைக்கலாம்.
**சுற்றுச்சூழல் நட்பு:** விறகு ஒரு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலமாகும். முறையாக உலர்த்தப்பட்ட விறகுகளைப் பயன்படுத்துவது சுற்றுச்சூழலுக்குப் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது.
நீண்ட நேரம் சூடாக இருத்தல்: விறகு அடுப்பில் சமைத்த உணவுகள் நீண்ட நேரம் கெடாமலும், சூடாகவும் இருக்கும். மேலும், அடுப்பு அணைந்த பிறகும் அதில் இருக்கும் தணல் உணவைச் சூடாக வைத்திருக்க உதவும்.
**விறகு அடுப்பில் சமைப்பதால் ஏற்படும் தீமைகள்:**
விறகு அடுப்பில் அடிக்கடி சமைப்பதால் ஆஸ்துமா வர வாய்ப்பு உள்ளது. மேலும், விறகு அடுப்பில் வரும் புகையை நீண்ட காலம் சுவாசித்தால் சுவாச கோளாறுகள், நுரையீரல் பிரச்சனைகள் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுவையான தேங்காய் பால் சாதம்

நம் பாரம்பரிய உணவுகளில் புளியோதரை, லெமன்சாதம், தயிர்சாதம் போலவே தேங்காய் சாதமும் முக்கிய இடம் பிடிக்கிறது. உணவுக்கு சுவை மட்டுமின்றி, உடலுக்கு ஆரோக்கியம் சேர்க்கும் வகையில் தேங்காய் சாதம் செய்து அசத்த முடியும். இதனால் சத்துக்கள் முழுவதுமாக நமக்கு கிடைக்கும்.

குழம்பு மற்றும் பொரியல் வைக்கும் பொழுது காய்கறிகளில் உள்ள சத்துக்கள் அனைத்தும் குழந்தைகளுக்கு கிடைக்கும். ஆனால் நாம் தயிர் சாதம், லெமன் சாதம் போன்ற சாத வகைகள் செய்து கொடுக்கும் பொழுது அதில் சுவை மட்டுமே அதிகமாக இருக்குமே தவிர குழந்தைகளுக்கு தேவையான சத்துக்கள் குறைவாகவே கிடைக்கும்.

ஆனால் குழந்தைகள் அதைக் கேட்டு அடம்பிடிக்கும் பொழுது, அதனை எப்படி ஆரோக்கியமாக குழந்தைகளுக்கு செய்து கொடுக்க வேண்டும் என்பதை தான் நாம் பார்க்க வேண்டும். அப்படி ஒரு ஹெல்தியான ரெசிபி தான் இந்த தேங்காய் பால் சாதம்.
தேங்காய்ப்பால் என்பது இயற்கையிலேயே எண்ணற்ற சத்துக்களை உள்ளடக்கியது. அதனுடன் ஆரோக்கியமான காய்கறிகள் மற்றும் மசாலா பொருட்களை சேர்ந்து கொடுக்கும்பொழுது ஆரோக்கியமான மதிய உணவு அல்லது காலை உணவாக இந்த தேங்காய் பால் சாதம் இருக்கும்.



தேங்காய் பால் சாதத்தில் வைட்டமின்கள் மற்றும் மினரல்ஸ் நிறைந்துள்ளன. குறிப்பாக சொல்லப் போனால் வைட்டமின் சி, போலேட், இரும்பு சத்து, பொட்டாசியம், மெக்னீசியம் மற்றும் மாங்கனிஸ் ஆகிய சத்துக்கள் நிறைந்துள்ளன.

தேங்காய் பாலில் எம்.சி.டி. எனப்படும் நல்ல கொழுப்புகள் நிறைந்துள்ளன. இந்த கொழுப்பானது உடனடியாக கரைந்து உடலுக்கு தேவையான எனர்ஜியை கொடுக்க வல்லது. குறிப்பாக மூளை வளர்ச்சிக்கு இந்த கொழுப்பு மிகவும் அவசியமாகும்.

பசும்பால் ஒவ்வாமை உள்ள குழந்தைகளுக்கு தேங்காய்ப்பால் என்பது சிறந்த மாற்றாக இருக்கும். பசும்பாலில் உள்ள சத்துக்களை போலவே இதிலும் சத்துக்கள் அதிகம் என்பதால் பசும்பாலுக்கு பதிலாக இதனை குழந்தைகள் எடுத்துக் கொள்ளலாம்.
இதில் இயற்கையிலேயே நிறைந்திருக்கும் லாரிக் அமிலம் எனப்படும் அமிலம் நோய் எதிர்ப்பு பண்புகளை கொண்டதாகும். எனவே உடலில் ஏற்படும் காயங்களை இயற்கையாகவே ஆற்றும் தன்மை தேங்காய் பாலுக்கு உண்டு.

மேலும் இதில் கால்சியம் மற்றும் வைட்டமின் டி அதிகமாக உள்ளதால், எலும்புகளின் வளர்ச்சிக்கு தேவையான சத்துக்களை கொடுக்கின்றது.

இயற்கையிலேயே காணப்படும் ஆன்ட்டி ஆக்ஸி டென்ட்களான வைட்டமின் சி, வைட்டமின் ஈ மற்றும் செலினியம் நிறைந்துள்ளன. இவை உடலில் செல்கள் சிதை உடையாமல் பாதுகாக்கின்றன.

தேங்காய் பாலில் நீர் சத்துக்கள் அதிகம் என்பதால் உடலில் நீர்ச்சத்து குறையாமல் பார்த்துக் கொள்கின்றது.

## சமையல் டிப்ஸ்

* அரிசி களைந்த இரண்டாவது நீரில் சேனைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு முதலியவற்றை வேகவைத்து எடுக்கும் போது அதன் அரிப்புத்தன்மை அறவே நீங்கி விடும்.

* ஒரு ஸ்பூன் சட்னியை ஒரு தட்டில் போட்டதும் அதிலிருந்து தண்ணீர் தனியே வரக்கூடாது. கெட்டியாக அப்படியே இருக்கவேண்டும். இதுவே சட்னியின் சரியான பதம்.

* வத்தக்குழம்பு செய்யும்போது கொதித்த பின்னர் கொஞ்சம் வெல்லம் போட்டால் சுவை அதிகரிக்கும்.

* உப்புமா செய்யும்போது கொஞ்சம் புளித்த தயிரைச் சேர்த்தால் உப்புமாவின் சுவையே அலாதிதான்.

* முருங்கை இலையைக் கொத்தாக எண்ணெய்யில் பொரித்து அத்துடன் வறுத்த மிளகு, சீரகம், பெருங்காயம் உப்பு சேர்த்து, மிக்சியில் பொடியாக்கி நெய் சாதத்தில் பிசைந்து சாப்பிட ருசியாகவும், மணமாகவும் இருக்கும்.

* எலுமிச்சை சாதம் செய்யும்போது மாங்காயைத் துருவிச்சேர்த்தால் சுவை வித்தியாசமாக இருக்கும்.

* அப்பத்துக்கு மாவு அரைக்கும் போது தேங்காய், வெல்லத்துடன் நான்கு துண்டு அன்னாசி பழம் அரைத்து அப்பம் செய்தால் ருசியுடன் இருக்கும்.

* வேகவைத்த கொண்டைக்கடலையுடன், வேக வைத்து உரித்த உருளைக்கிழங்கு, சாட் மசாலா, உப்பு, எலுமிச்சைச்சாறு, கொத்தமல்லி சேர்த்து செய்யும் சுண்டல் சுவை மிகுந்து இருக்கும்.

* ஆரஞ்சுத் தோல்களை நறுக்கி அவற்றை வற்றல் குழம்பு தாளித்துக்கொதிக்கும் போது மூன்று, நான்கு துண்டு போட்டுக்கொதிக்க விடவும். வற்றல் குழம்பு தனிச்சுவையோடு இருக்கும்.



* அப்பளம் பொரிக்கும் போது அதை நான்காக மடித்து வைத்துக்கொண்டால் சிறிது எண்ணெய்யிலேயே பொரித்து விடலாம்.

* தேன்குழல் செய்யும்போது உளுத்தம் பருப்பு வறுத்துப் போடுவதுடன், ஒரு டம்ளர் பச்சரிசியைச் சேர்த்து வறுத்து அரைத்தால் பிசுபிசுப்பாக இல்லாமல் நன்றாக பிழியலாம்.

* தேங்காய்ப் பால் ஊற்றி செய்யும் குழம்புகளுக்கு, அடுப்பிலிருந்து குழம்பை இறக்கும்போது தான் தேங்காய்ப்பால் ஊற்ற வேண்டும். இல்லையெனில், தேங்காய் பால் திரிந்து குழம்பு வீணாகி விடும்.

* ரவை உப்புமா செய்யும்போது ரவையில் சிறிது நல்லெண்ணெய் ஊற்றிப் பிசிறி வைத்து, பிறகு உப்புமா செய்தால் கட்டி தட்டாமல் உதிரி உதிரியாக வரும்.

* தோசைக்கு மாவு அரைக்கும்போது உளுந்தோடு சிறிது கடலைப்பருப்பை சேர்த்து அரைத்தால், தோசை பொன்னிறமாக வரும்.

*சாம்பாருக்காக துவரம்பருப்பை வேகவைக்கும் போது அதில் சிறிதளவு நெய் விட்டு வேக வைத்தால் சீக்கிரம் வேகும். சாம்பாரின் சுவையும் நன்றாக இருக்கும்.

*பாகற்காய் குழம்பில் சில துண்டுகள் கேரட்டையும் சேர்த்து வேக விட்டால் ருசியும், சத்தும் கூடுவதோடு கசப்பும் குறையும்.

*வடை தட்டும்போது உள்ளே ஒரு பன்னீர் துண்டை வைத்து மாவால் மூடி எண்ணெய்யில் போட்டு பொரித்து எடுத்தால் வடை வித்தியாசமான ருசியுடன் இருக்கும்.

## நீர்த்துப் போன உணவை கெட்டியாக்க எளிய டிப்ஸ்!



* கூட்டு, குழம்பு நீர்த்துவிட்டால், பொட்டுக்கடலை மாவு அல்லது அரிசி மாவை கரைத்து கூட்டு, குழம்பில் ஊற்றி சூடு செய்தால் அவை கெட்டியாகும். ருசியாகவும் இருக்கும்.

* அடை மாவு நீர்த்துவிட்டால் சிறிதளவு கார்ன்பிளேக்ஸ் தூள் கலந்துவிட்டால் மாவு கெட்டியாகிவிடும்.

* குருமா நீர்த்துவிட்டால் ஒரு கைப்பிடி அளவு நூடுல்சை நொறுக்கிப் போட்டு கொதிக்க வைத்தால் கெட்டியாகி விடும். சிறிது சோளமாவை கரைத்து ஊற்றினாலும் கெட்டியாகும். சுவையாக இருக்கும்.

*கோதுமை அல்வா, மைதா அல்வா செய்யும்போது நீர்த்துவிட்டால் சிறிதளவு சோளமாவு கரைத்து சேர்த்துவிட்டால் கெட்டிப்படும், ருசி கூடும்.

* பொங்கல் நீர்த்துவிட்டால் சிறிதளவு வறுத்த ரவை அல்லது அவலைப் பொடித்து பொங்கலோடு சேர்த்துக் கிளறினால் போதும்.

* தோசை மாவு நீர்த்துவிட்டால் பாலில் 2 ஸ்பூன் ரவை, அரிசி மாவு சேர்த்து கலந்து விட்டால் கெட்டியாகும். புளிப்பும் இருக்காது.

* பருப்பு பாயசம், ஜவ்வரிசி பாயசம் நீர்த்துவிட்டால் அதில் இரண்டு டீஸ்பூன் சோளமாவு அல்லது பால் பவுடர் கரைத்து ஊற்றி கலந்து, 2 நிமிடம் கொதிக்க விட்டு இறக்கினால் போதும்.

* சேமியா உப்புமா நீர்க்க இருந்தால், சிறிது எலுமிச்சைச் சாறு ஊற்றி அடுப்பில் வைத்து கிளறினால் சரியாகும்.

* சாதம் குழையாமல் இருக்க, சாதம் வெந்தவுடன் அதில் எலுமிச்சைச் சாறு கலந்து கிளறினால் சாதம் உதிரியாக இருக்கும்.

* பிசைந்த சப்பாத்தி மாவில் நீர் கூடிவிட்டால் சிறிது மாவு சேர்த்துப் பிசைந்து பிரிட்ஜில் சிறிது நேரம் வைத்து எடுத்தால் கெட்டியாகும்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## பிரேமலதா விஜயகாந்த்துக்கு உற்சாக வரவேற்பு



விருத்தாசலம் சட்டமன்ற தொகுதியில் திமுக கூட்டணியில் போட்டியிடும் தேமுதிக கட்சியின் பொது செயலாளரும் வேட்பாளருமான பிரேமலதா விஜயகாந்த் நல்லூர் வடக்கு ஒன்றியதற்கு வாக்கு சேகரிக்க வருகை தந்த போது சாத்தியம் கைகாட்டி அருகே திமுக ஒன்றிய செயலாளர் பாவாடை கோவிந்தசாமி தலைமையில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் வரவேற்பு அளித்தனர்.

## தேர்தல் குழுக்கள் மூலம் மூத்த வாக்காளர்களிடமிருந்து தபால் வாக்குகள் சேகரிக்கும் பணி



திருவண்ணாமலை மாவட்டம் பெலாசூர் ஊராட்சியில் மூத்த வாக்காளர்களிடமிருந்து தபால் வாக்குகளை தேர்தல் குழுக்கள் மூலம் சேகரிக்கும் பணி நடைபெற்று வருவதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளருக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்குகள் சேகரிப்பு





திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் நகரில் கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் S.ராமச்சந்திரன் அவர்களுக்கு நகரச் செயலாளர் O. C.முருகன் அவர்கள் மற்றும் கழகத் தோழர்களுடன் வீடு வீடாக சென்று இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையில் கொடி அணிவகுப்பு



**திருப்பத்தூர், ஏப்.14:**
திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி V.சியாமளா தேவி, இ.கா.ப., அவர்களின் உத்தரவின்படி, வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கும் வகையில், வாணியம்பாடி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையில் கொடி அணிவகுப்பு நடைபெற்றது.

**வாணியம்பாடி:**
பத்தாப்பேட்டை தொடங்கி, பள்ளிப்பட்டு சந்திப்பு, மேட்டுப்பாளையம் வழியாக உதயேந்திரம் வரை அணிவகுப்பு நடைபெற்றது. இக்கொடி அணிவகுப்பில் துணை ராணுவப் படையினரும் காவல்துறையினரும் இணைந்து, சுமார் 70 பேர் கலந்து கொண்டனர்.

## மெட்டாலா இலொயோலா கல்லூரியில் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் 107 பேருக்கு நேரடி பணிநியமனம்



**இராசிபுரம், ஏப்.14:**
நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே மெட்டாலா இலொயோலா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் இணைந்து கல்லூரி வளாகத்தில் மாபெரும் வேலைவாய்ப்பு முகாமை நடத்தியது. இதில் 35-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்று, 107 பணியாளர்களை நேரடியாகத் தேர்வு செய்தன.

இந்த முகாமில் சுமார் 400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இலொயோலா கல்லூரி மற்றும் பிற கல்லூரிகளில் இருந்து கலந்து கொண்டு பயனடைந்தனர். நிகழ்வில் கல்லூரி அதிபர் தந்தை முனைவர் தோமினிக் ஜெயக்குமார், மாணவர்கள் மேற்படிப்பு அல்லது வேலைவாய்ப்புடன் வெளியேற வேண்டும் என்ற நிர்வாகத்தின் நோக்கத்தை விளக்கினார்.

செயலர் தந்தை டேனிஸ் பொன்னையா மற்றும் முதல்வர் முனைவர் ஜோஸப்பின் டெய்சி சிறப்பு விருந்தினர்களை கவுரவித்து, பணிநியமன ஆணை பெற்ற மாணவர்களை பாராட்டினர். விழாவில் மனிதவளத்துறை இயக்குநர் அமலதாஸ் மாணவர்களுக்கு தன்னம்பிக்கை மற்றும் திறன் மேம்பாட்டின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

மேலும் நான் முதல்வன் திட்ட மேலாளர் துளசிதாஸ், மாவட்ட பொறுப்பாளர் சோபியா உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினர். கல்லூரி நிர்வாகம், பேராசிரியர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் இணைந்து முகாமை சிறப்பாக ஏற்பாடு செய்தனர்.

## அறிவிப்பு



சட்டமேதை அண்ணல் டாக்டர் B.R.அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருமதி.மதாரம்மா கனி பாரூக் அவர்கள் தலைமையில் இன்னு (14/04/2026) செவ்வாய்க்கிழமை காலை 9:30 மணிக்கு திருவொற்றியூர் டோல்கேட்டில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது.

எனவே நமது மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து நிலை காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: சர்க்கிள் தலைவர்கள், வட்ட தலைவர்கள் அனைவரும் தங்கள் பகுதியில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவுருவ சிலை மற்றும் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும்படியும் மற்றும் நிகழ்ச்சி சம்பந்தமான புகைப்படத்தினை மாவட்ட அலுவலக எண்ணிற்கு 9840978679 அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**அன்புடன் மதாரம்மா கனி பாரூக் B.A., மாவட்ட தலைவர் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி**

## தேர்தல் குழுக்கள் மூலம் மூத்த வாக்காளரிடமிருந்து தபால் வாக்குகள் சேகரிக்கும் பணி



திருவண்ணாமலை மாவட்டம் ஊசாம்பாடி ஊராட்சியில் மூத்த வாக்காளர்களிடமிருந்து தபால் வாக்குகளை தேர்தல் குழுக்கள் மூலம் சேகரிக்கும் பணி நடைபெற்று வருவதை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## தேவரிஷிக்குப்பத்தில் வசிக்கும் வயது முதிர்ந்த ராணுவ வீரரிடம் தபால் ஓட்டு சேகரிப்பு!



**வேலூர்,ஏப்.14:**
வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் தனி தொகுதி பகுதியான தேவரிஷிக்குப்பம் கிராமத்தில் வசிக்கும் வயது முதிர்ந்த முன்னாள் ராணுவ வீரர் துரைசாமியின்(97) வீட்டுக்கு தேர்தல் அதிகாரிகள் நேரடியாக சென்று தபால் ஓட்டு சேகரித்தனர்.

## கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகள் சேகரிப்பு





திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதியில் வேடந்தவாடி கிராமத்தில் அதிமுக வேட்பாளர் S. ராமச்சந்திரன் அவர்கள் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். உடன் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை




## தேர்தல் குழவின் வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைப்பு



**திருவண்ணாமலை ஏப்,14:**
திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் மூத்த வாக்காளர்கள் மற்றும் மாற்றத்திறனாளிகள் வாக்காளர்களிடமிருந்து வீடுகள் தோறும் சென்று வாக்குப்பதிவு சீட்டுகளை சேகரிக்கும் தேர்தல் குழவின் பணிக்காக திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## கொடைக்கானலில் புனித லூர்து அன்னை ஆலயத் திருவிழா கொடியேற்றம்: 18ம் தேதி தேர்பவனி

**கொடைக்கானல், ஏப்.14:**
கொடைக்கானல் புனித லூர்து அன்னை ஆலய திருவிழா நேற்று மாலை கொடியேற்றத்துடன் துவங்கியது. முக்கிய நிகழ்வான அன்னையின் தேர்பவனி வரும் 18ம் தேதி நடைபெறுகிறது. திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் லூர்து மவுண்ட் தந்திமேடு பகுதியில் புனிதலூர்து அன்னை ஆலயம் அமைந்துள்ளது. இங்கு ஆண்டுதோறும் ஆலயத் திருவிழா சிறப்பாக நடைபெறும். இந்தாண்டு திருவிழா நேற்று மாலை கொடியேற்றத்துடன் துவங்கியது. முன்னதாக கொடைக்கானல் மூஞ்சிக்கல் திருஇருதய ஆலயத்தில் இருந்து கொடி ஊர்வலம் தொடங்கியது.



அன்னையின் திருஉருவம் பொறித்த கொடி முக்கிய வீதிகள் வழியாக கொண்டு வரப்பட்டு, தந்திமேடு பகுதியில் உள்ள புனித லூர்து அன்னை ஆலயத்தை அடைந்தது. அங்கு கொடியேற்ற சிறப்பு திருப்பலி பூஜை நடந்தது. திருப்பலிக்கு வடகரை பாறை இமானுவேல் மைய அதிபர் அருட்தந்தை புஷ்பராஜ் தலைமை வகித்தார். உதவி பங்குத்தந்தை கரோலின் சிபு முன்னிலை வகித்தார். திருப்பலிக்கு பின் அன்னையின் திருக்கொடி ஏற்றப்பட்டது.

இதில், கொடைக்கானல் முன்னாள் நகர்மன்ற தலைவர் ஸ்ரீதர், அருட்சகோதரிகள், கத்தோலிக்க கிறிஸ்தவர்கள், பங்கு மக்கள் என ஏராளமான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர். விழாவில் தினமும் மாலை நவநாள் திருப்பலி, பிரார்த்தனை நடைபெறும். முக்கிய நிகழ்வான அன்னையின் தேர்பவனி வரும் 18, 19 ஆகிய தேதிகளில் நடைபெறும்.

## போளூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் முரசு சின்னத்தில் வாக்குகள் சேகரிப்பு





திருவண்ணாமலை மாவட்டம் போளூர் சேத்துப்பட்டு கிழக்கு ஒன்றியம் மோதன பாளையம் ஊராட்சி பகுதியில் தேமுதிக வேட்பாளர் திரு. சரவணன் அவர்களுக்கு திரு எ.வ.வே.கம்பன் அவர்கள் முரசு சின்னத்தின் வாக்குகளை சேகரித்தார். உடன் கழகத் தோழர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சுற்றுலா: கொழுக்கு மலை சென்று வரலாம் வாங்க! அது எங்கதான் இருக்கு?



தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டத்தில், கடல் மட்டத்திலிருந்து 7130 அடி உயரத்தில் அமைந்திருக்கும் சிறிய மலைக்கிராமமான கொழுக்குமலையில் 81 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டம் அமைந்திருக்கிறது. இத்தேயிலைத் தோட்டத்தைச் சுற்றிலும் நான்கு பக்கங்களும் கேரள மாநிலப் பகுதிகளாகவும், இந்தத் தேயிலைத் தோட்டம் மட்டும் தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், கொட்டக்குடி ஊராட்சிப் பகுதியுடன் இணைந்திருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

போடிநாயக்கனூரைச் சேர்ந்த செட்டியார் சகோதரர்கள் என்பவர்களை உதவியாளர்களாகக் கொண்டு 1920 முதல் 1927 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ஆங்கிலேயர்களால் இந்தத் தேயிலைத் தோட்டம் உருவாக்கப்பட்டது. 1927 முதல் 1932 ஆம் ஆண்டு வரை இப்பகுதியில் தேயிலைச் செடிகள் நடவு செய்யப்பட்டன. தேயிலைத் தோட்டத் தொழில்பணிகள் 1936 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது. இங்கிருக்கும் வீடுகள், தொழிற்சாலைகள் மற்றும் கட்டிடங்கள் அனைத்தும் குதிரை வண்டிகளைக் கொண்டும் மற்றும் தலைச் சுமையைப் பயன்படுத்தியும் கொண்டுசெல்லப்பட்டக் கட்டுமானப் பொருட்களைக் கொண்டு கட்டப்பட்டன.

இத்தேயிலை நிறுவனம் 1935 முதல் 1971 ஆம் ஆண்டு வரை 'வலது எச்சரிக்கைத் திட்டம்' என்ற ஒப்பந்தத்தின் கீழ் செட்டியார் சகோதரர்களிடம் இருந்தது. அதன் பிறகு, செட்டியார் சகோதரர்கள் 1971 ஆம் ஆண்டு மே 1 ஆம் நாளில் சிவகாசி, ஏ.ஜே. குழுமத்திற்குத் தங்கள் உரிமைகளை மாற்றிக் கொடுத்தனர். அதன் பிறகு, 1971 ஆம் ஆண்டு முதல் சிவகாசி ஏ.ஜே. குழுமத்தினரால் இத்தேயிலை நிறுவனம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இத்தேயிலை நிறுவனத்தில் 150க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் தேயிலைக்கு பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் வேதிப்பொருட்களிலான உரம் என்று எதுவும் பயன்படுத்தப்படுவதில்லை. இத்தேயிலைத் தோட்டத்தில் மரபு வழிமுறைகளைப் பின்பற்றியேத் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

மலையுச்சியில் மிக உயரமான இடத்தில் இத்தோட்டம் அமைந்திருப்பதால், இங்கு தேயிலைச்செடிகள் மிகமெதுவாகவே வளர்கின்றன. அதிகமான உயரத்தில் வளரும் தேயிலை என்பதால் இத்தேயிலையின் தரமும் உயர்வாகவே இருக்கிறது. உலகில் மரபு வழிமுறைகளைப் பின்பற்றி உற்பத்தி செய்யப்படும் சில தேயிலைத் தோட்டங்களில், இத்தேயிலைத் தோட்டமும் ஒன்றாக இருக்கிறது. தூய்மையான, ஆற்றல் தரும் மாசு இல்லாத காற்றில் வளரும் இத்தேயிலையின் சுவை தனித்தன்மை கொண்டது. உலகின் மிக உயரமான இடத்தில் உற்பத்தி செய்யப்படும் இத்தேயிலை சுவை, தரம் மற்றும் உடல் நலம் என்று அனைத்திலும் 100% என்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இத்தேயிலைத் தோட்டம் அமைந்திருக்கும் மலைப்பகுதியில் பொதுவான கரும்பறவைகள், கருஞ்சாம்பல் வாலாட்டிகள், மலபார் பாடும் வகைக் குருவிகள், மலை மைனாக்கள், கிழக்கத்திய வெள்ளைக்கண் குருவிகள், கொண்டலாத்திகள் போன்ற பறவைகளும், நீலகிரிக் கருங்குரங்கு, இந்திய இராட்சத அணில்கள், நீலகிரி வரையாடு போன்ற விலங்குகளும் இருக்கின்றன.

கொழுக்குமலை தேனியிலிருந்து 67 கிலோ மீட்டர் தொலைவிலும், கேரள மாநிலம் மூணாறு எனும் ஊரிலிருந்து 32 கிலோ மீட்டர் தொலைவிலும் இருக்கிறது. தேனி மூணாறு தேசிய நெடுஞ்சாலையில் கேரள மாநிலப் பகுதியில் அமைந்திருக்கும் சூரியநெல்லி எனும் இடத்திற்குச் சென்று, அங்கிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கொழுக்குமலைக்கு ஜீப்களின் மூலமாகச் செல்ல வேண்டும். ஐந்து அல்லது ஆறு பேர் கொண்ட குழுவிற்கு ஜீப்களில் 2500 முதல் 3000 ரூபாய் வரை கட்டணமாகப் பெறப்படுகிறது.

கொழுக்கு மலையின் இயற்கையான அழகைக் காண்பதற்கு முன்பாக, அதிகாலையில் தோன்றும் சூரிய உதயத்தைக் காண்பதற்காகவேப் பலரும் அங்கு செல்ல இரவு வேளையிலேயேப் பயணிக்கின்றனர். கொழுக்கு மலை உச்சியில் வெண்மையான மேகக் கூட்டங்களுக்கிடையே, எழுந்துவரும் சூரியனின் தோற்றம் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இந்த மலைப்பகுதியிலிருந்து பார்க்கும் போது, வானம் தொட்டுவிடும் தூரத்தில் இருக்கும்.

கிழக்கு அடிவானத்தில் உள்ள மலைகளில் முதல் சூரியக் கதிர்கள் கசியும் போது, வானம் கருஞ்சிவப்பு நிறமாக மாறும். சூரியன் மெதுவாக எழுந்து மேலேச் செல்லும் போது, தொலைவில் உள்ள அழகிய மலைகள் இயற்கையின் போர்வையிலிருந்து வெளியேறி, சிவப்பு நிறத்தில் இருந்து பச்சை நிறமாக மாறும். இம்மலையில் சூரிய உதயத்தைக் காண பல இடங்களிருப்பினும், இங்குள்ள புலி முகம் முகம் கொண்ட 'புலிப்பாறை' எனுமிடத்தின் பின்னால் நின்று பார்த்தால், புலியின் வாயிலிருந்து சூரியக் கதிர்கள் வெளி வருவது போன்று தோன்றும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### சென்ட்ரல் வங்கியில் வேலை... யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம்?

மத்திய அரசின் பொதுத்துறை வங்கிகளில் ஒன்றான சென்ட்ரல் வங்கியில் காலியாக உள்ள 26 சிறப்பு அதிகாரிகள் பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இது பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

பணியிடங்கள்: சிறப்பு அதிகாரிகள் 26

தேர்வுமுறை: எழுத்து தேர்வு, நேர்முகத்தேர்வு

கல்வித்தகுதி: பி. இ/பிடெக்,எம்பிஏ, சிஏ முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். அனுபவமும் அவசியம்

வயது வரம்பு: பணியிடங்களுக்கு தகுந்தபடி மாறுபடும்: அதிகபட்சமாக 45 வயது வரை விண்ணப்பிக்கலாம்

சம்பளம்: ரூ.1,20,940 வரை

விண்ணப்ப கட்டணம்: ரூ.850

விண்ணப்பிக்க கடைசி நாள்: 30.04.2026

தேர்வு அறிவிப்பினை பார்க்க: https://centralbank.bank.in/

### சிஆர்பிஎப் படை பிரிவில் கான்ஸ்டபிள் வேலை.. 9,195 காலி பணியிடங்கள்

மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மத்திய ரிசர்வ் போலீஸ் படையில் காவலர் பணியிடங்களை நிரப்புவதற்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. நாடு முழுவதும் மொத்தம் 9195 இடங்கள் நிரப்பப்பட உள்ளன. தமிழகத்தில் 681 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இதுபற்றிய விவரம் வருமாறு:

பணியிடங்கள்: 9,195 கான்ஸ்டபிள்

கல்வித் தகுதி: 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

வயதுத் தகுதி: 01.01.2026 அன்று 21 வயது முதல் 27 வயது வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

சம்பளம்: ரூ. 21,700– 69,100

தேர்வு முறை: எழுத்து தேர்வு மற்றும் உடற்தகுதி தேர்வு அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

விண்ணப்பிக்கும் முறை: www.rect.crpf.gov.in என்ற பக்கம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பிக்க கடைசி தேதி: 19.05.2026

விண்ணப்பக் கட்டணம்: ரூ. 100. ஆனால் எஸ்.சி, எஸ்.டி, பெண்களுக்கு கட்டணம் கிடையாது

## ஈரானிலிருந்து மீட்கப்பட்ட மீனவர்கள் சென்னை வருகை!



**சென்னை, ஏப். 14:**

ஈரானில் போர்ப் பதற்றத்தில் சிக்கித் தவித்த 312 இந்திய மீனவர்கள் மீட்கப்பட்டு விமானம் மூலம் சென்னைக்கு சனிக்கிழமை அழைத்துவரப்பட்டனர்.

அவர்களை மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ்கோயல், அதிமுக முன்னாள் அமைச்சர் டி.ஜெயகுமார் ஆகியோர் வரவேற்றனர்.

மேற்கு ஆசிய போர்ச் சூழல் காரணமாக அங்குள்ள நாடுகளில் சிக்கித் தவிக்கும் இந்தியர்கள் தொடர்ந்து மீட்கப்பட்டு விமானம் மூலம் தாயகம் அழைத்து வரப்படுகின்றனர்.

அந்த வகையில், ஈரானிலிருந்து 312 இந்திய மீனவர்கள் மீட்கப்பட்டு விமானம் மூலம் சென்னைக்கு சனிக்கிழமை அழைத்து வரப்பட்டனர். அவர்களில் 222 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். மேலும், குஜராத் (73), கேரளம் (9) மற்றும் மற்ற மாநிலங்களைச் சேர்ந்த 8 மீனவர்கள் அழைத்து வரப்பட்டனர். தமிழகத்தைச் சேர்ந்த 222 மீனவர்களில் 104 பேர் கன்னியாகுமரி, 30 பேர் தூத்துக்குடி, 35 பேர் திருநெல்வேலி, 7 பேர் நாகை, 4 பேர் மயிலாடுதுறையைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை விமான நிலையத்துக்கு வந்த மீனவர்களை மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ்கோயல், அதிமுக முன்னாள் அமைச்சர் டி.ஜெயகுமார் ஆகியோர் நேரில் சென்று வரவேற்றனர்.

## ஜனநாயகன் படத்தை ஆதவ் அர்ஜுனா வெளியிட்டிருக்கலாம்? - நடிகை காயத்ரி ரகுராம்

**திருப்பூர், ஏப்.14:**

திருப்பூர் மாவட்டம் அவினாசி சட்டமன்ற தொகுதி திருமுருகன் பூண்டியில் நடிகை காயத்ரி ரகுராம் நிருபர்களிடம் கூறியதாவது:-

த.வெ.க. ஆதவ் அர்ஜுனாவை யாரும் நம்ப போவதில்லை. அவர் யாருக்கு வேலை செய்கிறார் என அனைவருக்கும் தெரியும். ஜனநாயகன் படத்தை அவரே கூட வெளியிட்டிருக்கலாம். அதனால் வாக்குகள் கிடைக்கும் என செய்திருக்கலாம். ஆனால், படத்தை பார்த்து யாரும் ஓட்டு போடமாட்டார்கள்.





மக்களை சந்திக்க வேண்டும். மக்களை சந்திக்காத அவரை நோக்கி ஒரு கூட்டம் வருகிறது. சிரஞ்சீவிக்கு கூட கூட்டம் வந்தது. அந்த கூட்டம் வாக்குகளாக மாறாது. முதலில் ஆதவ் அர்ஜுனா வெற்றி பெற்று வந்து பேசவேண்டும். இது போல மலிவான அரசியல் செய்யக்கூடாது. விஜய்க்கு அரசியல் அனுபவம் இல்லை.

விஜய் மற்றும் உதயநிதி என இருவரும் பிரசாரத்தில் இருந்து தப்பிக்க உடல்நலம் சரியில்லை என சாக்கு சொல்லிக்கொண்டு போகிறார்கள். விஜய்யிடம் பேச எதுவும் இல்லை. அவரிடம் ரிப்போர்ட் கார்டே இல்லை. இருவரும் ஒரே மாதிரி அரசியல் செய்கிறார்கள். முதல்-அமைச்சராக ஆசைப்படுகிறார்கள்.

முதல்-அமைச்சராக வர படிப்படியாக உழைக்க வேண்டும். இருவரையும் மக்கள் முதல்-அமைச்சராக ஏற்கமாட்டார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

## நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தில் தென்மாநிலங்களின் அதிகாரங்களை குறைக்க சூழ்ச்சி - கி.வீரமணி குற்றச்சாட்டு

**சென்னை, ஏப்.14:**

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:-

"நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் பகுதி கடந்த 2-ந்தேதி முடிந்த நிலையில், திடீரென மூன்றாம் பகுதியாக வருகிற 16-ந்தேதி முதல் 18-ந்தேதி வரை 3 நாட்கள் சிறப்பு கூட்டம் கூட்டப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்தும் கூட, அதை கொஞ்சமும் கண்டுகொள்ளாமல் நாடாளுமன்ற கூட்டத்தை கூட்டுவதில் மத்திய அரசு மும்முரமாக இருக்கிறது.

கடந்த 2023-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட நாரி சக்தி வந்தன் அபினியம் என்ற பெயரிலான 33 சதவீத மகளிர் இட ஒதுக்கீட்டு சட்டத்தை உடனடியாக அமல்படுத்துவதற்கான செயல்களில் இறங்குவதற்குரிய அரசியலமைப்பு சட்ட திருத்தங்களை நிறைவேற்றுவது இதன் முக்கிய நோக்கம் என்று சொல்லப்படுகிறது. அதற்காக நாடாளுமன்ற இடங்களை அதிகப்படுத்துவது என்று முடிவெடுத்துள்ளார்கள்.

தென் மாநிலங்களின் அதிகாரங்களை குறைக்கும் மிகப்பெரிய சூழ்ச்சி இதன் பின்னால் ஒளிந்திருக்கிறது. மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்ற இடங்களை கூட்டுகிறோம் என்ற போர்வையில், ஒப்பீட்டளவில் தென்மாநிலங்களுக்கு குறைவான இடங்களும், வடமாநிலங்களுக்கு அதிக இடங்களும் ஒதுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நாடாளுமன்ற கூட்டமும், அதில் நிறைவேற்றப்படவிருக்கும் சட்டத்திருத்தங்களும், சட்ட விரோதம், ஜனநாயக விரோதம், நியாய விரோதம், பாசிச ஆபத்து. பேராபத்தைத்தடுக்கவேண்டியது முக்கியம். சட்டமன்ற தேர்தலில் வாக்களிப்பதுடன் ஜனநாயக கடமை முடிந்துவிட்டது என்று மக்கள் கருதிவிடக்கூடாது. இதனால் பாதிக்கப்படவிருப்பது தென்மாநிலங்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவும், அதன் ஜனநாயகமும். எனவே இந்த பேராபத்தை தடுக்கவேண்டியது அவசரம், அவசியம்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## திருப்பூர் வழியாக போத்தனூர்-பரவுனி இடையே சிறப்பு ரெயில்

**திருப்பூர், ஏப்.14:**

கோடை விடுமுறையில் அதிகரித்து வரும் பயணிகளின் தேவையை கருத்தில் கொண்டு, திருப்பூர், ஈரோடு, சேலம் வழியாக போத்தனூர்-பரவுனி இடையே சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது. போத்தனூர்-பரவுனி (வண்டி எண்.06021) சிறப்பு ரெயில் இன்று (திங்கட்கிழமை) முதல் வருகிற 27-ந்தேதி வரை (3 சேவைகள்) திங்கட்கிழமைகளில் போத்தனூரில் இருந்து அதிகாலை 4.30 மணிக்கு புறப்பட்டு புதன்கிழமை காலை 10.30 மணிக்கு பரவுனி சென்றடையும். இந்த ரெயில் திருப்பூருக்கு திங்கட்கிழமைகளில் அதிகாலை 5.23 மணிக்கு வந்து 5.25 மணிக்கு புறப்படும்.

பரவுனி-போத்தனூர் (06022) சிறப்பு ரெயில் வருகிற 16-ந்தேதி முதல் 30-ந்தேதி வரை (3 சேவைகள்) பரவுனியில் இருந்து வியாழக்கிழமைகளில் மதியம் 1.15 மணிக்கு புறப்பட்டு சனிக்கிழமை இரவு 11.30 மணிக்கு போத்தனூரை சென்றடையும். இந்த ரெயில் திருப்பூருக்கு சனிக்கிழமைகளில் இரவு 8.43 மணிக்கு வந்து 8.45 மணிக்கு புறப்படும்.

மேற்கண்ட தகவலை ரெயில்வே அதிகாரி தெரிவித்துள்ளார்.

## தி.மு.க. தேர்தல் அறிக்கை மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றிருக்கிறது - பிரேமலதா

**சேலம், ஏப்.14:**

சேலம் மாவட்டத்தில் தேர்தல் பிரசாரத்திற்கு வந்த தே.மு.தி.மு.க. பொதுச்செயலாளர் பிரேமலதா நேற்று மாலை நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தி.மு.க. கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து நான் தேர்தல் பிரசாரத்திற்கு செல்லும் இடங்களில் எல்லாம் மக்களிடம் உற்சாக வரவேற்பு இருக்கிறது. குறிப்பாக தி.மு.க. தேர்தல் அறிக்கை மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றிருக்கிறது. வீட்டு உபயோக பொருட்கள் வாங்க ரூ.8 ஆயிரம் கூப்பன் வழங்குவது குறித்து பெண்கள் மத்தியில் ஆதரவு அதிகரித்துள்ளது.

இதனால் தி.மு.க. கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் நிச்சயம் வெற்றி பெறும். அண்ணன் மு.க.ஸ்டாலின் மீண்டும் முதல்-அமைச்சராக பதவி ஏற்பார். தி.மு.க. 7-வது முறையாக ஆட்சி அமைக்கும். கடலூரில் நடந்த பிரசார கூட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் பேசும் போது எனது பெயரை குறிப்பிட்டபோது நான் எழுந்திருக்காதது குறித்து தேவையில்லாமல் எதிர்க்கட்சியினர் விமர்சனம் செய்து வருகிறார்கள்.

இதுதொடர்பாக நானும், திருமாவளவனும் போனில் பேசிவிட்டோம். மக்கள் நலக்கூட்டணியில் அங்கம் வகித்தபோது, விஜயகாந்த் மற்றும் திருமாவளவனுக்கு இடையே நெருங்கிய நட்பு இருந்தது. இது அனைவருக்கும் நன்றாக தெரியும். ஆனால் தற்போது தேவையில்லாமல் பிரச்சினையை கிளப்பி விடுகிறார்கள். விருதாச்சலத்தில் எனக்கு ஆதரவாக திருமாவளவன் வாக்கு சேகரிக்க வருகிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# கோவையில் கேபிள் டி.வி.யில் ஒளிபரப்பான ஜனநாயகன்: த.வெ.க.வினர் போலீசில் புகார்

**கோவை, ஏப்.14:**

நடிகர் விஜய் அரசியலில் ஈடுபட்ட பிறகு, அவர் கடைசியாக நடித்த படம் ஜனநாயகன். பொங்கல் பண்டிகையையொட்டி, கடந்த ஜனவரி மாதம் 9-ந் தேதி திரையரங்குகளில் வெளியிட திட்டமிடப்பட்டது. ஆனால், தணிக்கைக்கு சென்ற இடத்தில் படத்துக்கு சான்றிதழ் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டது. இந்தப் பிரச்சினை 3 மாதங்களாக நீடித்து வரும் நிலையில், கடந்த 10-ந் தேதி ஜனநாயகன் முழுப்படமும் இணையத்தில் வெளியாகி படக்குழுவை அதிர்ச்சி அடையச் செய்தது

இதற்கு, நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன் உள்ளிட்ட திரைப்பிரபலங்கள் கண்டனம் தெரிவித்த நிலையில், படக்குழுவினர் அளித்த புகாரின் அடிப்படையில் சைபர் கிரைம் போலீசாரும் வழக்குப்பதிவுசெய்துநடவடிக்கை மேற்கொண்டனர்.

ஜனநாயகன் படத்தை இணையத்தில் சட்ட விரோதமாக கசியவிட்டது தொடர்பாக, இதுவரை 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 100-க்கும் மேற்பட்ட இணையதளங்கள் முடக்கப்பட்டுள்ளன.



இந்த நிலையில், நேற்று முன்தினம் (11-ந்தேதி) கோவை மாவட்டம் கருமத்தம்பட்டி, சூலூர், பள்ளபாளையம், அவினாசி, திருப்பூர் உள்ளிட்ட பகுதியில், உள்ளூர் கேபிள் டி.வி.யில் ஜனநாயகன் படம் ஒளிபரப்பப்பட்டது. இது நடிகர் விஜய்யின் ரசிகர்களையும், த.வெ.க.வினரையும் அதிர்ச்சி அடையச் செய்தது. குறிப்பிட்ட கேபிள் டி.வி. நிறுவனத்தை தொடர்பு கொண்டு கண்டனம் தெரிவித்த உடன், ஜனநாயகன் படம் நிறுத்தப்பட்டது. ஆனால், அதற்குள் 2 மணி நேர படம் ஒளிபரப்பப்பட்டுவிட்டது.

அதனைத் தொடர்ந்து, இதுகுறித்து போலீசிலும் த.வெ.க.வினர் புகார் அளித்தனர். புகாரின் பேரில் போலீசார் குறிப்பிட்ட உள்ளூர் கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். கேபிள் டி.வி.யில் ஜனநாயகன் படம் வெளியான சம்பவம் கோவை பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## க்ரைம் கார்னர்

### சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் 19 கிலோ கஞ்சா பறிமுதல்



**சென்னை, ஏப்.14:**

சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, ரெயில்களில் மதுபானங்கள் மற்றும் போதைப்பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்க ரெயில்வே பாதுகாப்பு படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தவகையில், நேற்று முன்தினம் எழும்பூர் ரெயில் நிலையத்தில் பல்வேறு ரெயில்களில் ரெயில்வே பாதுகாப்பு படையினர் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது, புவனேஷ்வர்-ராமேசுவரம் ரெயிலில் பயணிகளின் இருக்கைக்கு கீழ் யாரும் உரிமை கோராத பெட்டியில் 12 கிலோ எடை கொண்ட கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதன் மதிப்பு ரூ.6 லட்சம் ஆகும். மேலும், ஹவுரா-திருச்சி ரெயிலில் கேட்பாரற்று கிடந்த ரூ.3.50 லட்சம் மதிப்புள்ள 7 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. மொத்தம் ரூ.9.50 லட்சம் மதிப்புள்ள 19 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதேபோல, ஜோத்பூரில் இருந்து எழும்பூர் வழியாக மங்களூர் செல்லும் ரெயிலில் சந்தேகத்திற்கு இடமான வகையில் வந்த பயணியிடம் சோதனை மேற்கொண்டனர். அப்போது, அவர் வைத்திருந்த பையில் 2 கிலோ தடை செய்யப்பட்ட போதை பொருள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. விசாரணையில், ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் பகுதியை சேர்ந்த நந்த்கிஷோர் (வயது 37) என்பது தெரியவந்தது.

அவருக்கு ரூ.25 ஆயிரம் அபராதம் விதித்ததோடு, பறிமுதல் செய்த புகையிலை பொருட்களையும், அவரையும் உணவு பாதுகாப்பு அதிகாரிகளிடம் ரெயில்வே பாதுகாப்பு படையினர் ஒப்படைத்தனர். மேலும், அதே ரெயிலின் மற்றொரு பெட்டியில் யாரும் உரிமை கோராத 40 கிலோ எடை கொண்ட புகையிலை பொருள் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### தாயுடன் கள்ளத்தொடர்பு வைத்திருந்த நண்பனை கழுத்தை அறுத்து கொன்ற பிளஸ்-2 மாணவர்

**மும்பை, ஏப்.14:**


மராட்டிய மாநிலம், ஜல்னா மாவட்டம் சிர்சாவாடி கிராமத்தை சேர்ந்தவர் நிகில் வாக்மரே (வயது25). இவருக்கும், அதே பகுதியை சேர்ந்த 17 வயது சிறுவன் ஒருவனுக்கும் இடையே நட்பு இருந்து வந்தது. அந்த சிறுவன் சமீபத்தில்தான் பிளஸ்-2 தேர்வு எழுதி முடித்திருந்தார்.

தனது தாய்க்கும், நண்பர் நிகிலுக்கும் இடையே கள்ளத்தொடர்பு இருப்பதாக அந்த சிறுவன் நீண்ட நாட்களாக சந்தேகப்பட்டு வந்தான். மேலும், நிகில் தனது தாய்க்கு அடிக்கடி செல்போனில் குறுஞ்செய்திகளை அனுப்பி வந்ததும் சிறுவனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

இந்தநிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு, சிறுவனும், நிகில் வாக்மரேவும் சேர்ந்து மது குடித்துள்ளனர். அப்போது போதையில் நிகில் மயங்கியபோது, சிறுவன் தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் அவரது கழுத்தை அறுத்து கொலை செய்தான். இதில் சம்பவ இடத்திலேயே நிகில் உயிரிழந்தார். இதுபற்றி தகவலறிந்து வந்த போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று உடலை கைப்பற்றி பிரேதப்பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இதற்கிடையில் ஊரை விட்டு தப்பியோட முயன்ற சிறுவனை போலீசார் மடக்கிப்பிடித்து கைது செய்தனர். மேலும் இதுகு றித்து போலீசார் கொலை வழக்குப்பதிவு செய்து சிறுவனிடம் தீவிர விசாரனை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### சீனியர் டிவிஷன் கால்பந்தில் ஏஜிஓஆர்சி வெற்றி



**சென்னை, ஏப்.14:**

சென்னை கால்பந்து சங்கம் சார்பில் சீனியர் டிவிஷன் லீக் 2025-26 போட்டி செனாய் நகரில் உள்ள பாவேந்தர் பாரதிதாசன் கால்பந்து மைதானத்தில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற லீக் போட்டியில் ஏஜிஓஆர்சி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வருமான வரித்துறை அணியை வீழ்த்தியது. ஏஜிஓஆர்சி அணி சார்பில் ரக்சில் (2-வது நிமிடம்), ஹலிசோ (8-வது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோலடித்தனர். வருமான வரித்துறை அணி சார்பில் நரேஷ், 48-வது நிமிடத்தில் ஒரு கோலடித்தார். மற்றொரு போட்டியில் தாவூத் மெமோரியல் எஃப்சி அணி 3-1 என்ற கோல் கணக்கில் ஆக்டோபஸ் மரைன் எஃப்சி அணியை தோற்கடித்தது. தாவூத் அணி சார்பில் வசந்த் குமார் 31, 37, 57-வது நிமிடங்களில் ஹாட்ரிக் கோலடித்தார். ஆக்டோபஸ் அணி சார்பில் தனிஷ் 90+1-வது நிமிடத்தில் ஒரு கோலடித்தார்.

### ஆசிய பாட்மிண்டனில் ஆயுஷ் ஷெட்டிக்கு வெள்ளி



**நிங்போ, ஏப்.14:**

ஆசிய பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் இறுதிச் சுற்றுப் போட்டியில் இந்திய வீரர் ஆயுஷ் ஷெட்டி தோல்வி அடைந்தார். இதையடுத்து அவருக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. சீனாவின் நிங்போ நகரில் ஆடவர் ஒற்றையர் இறுதிச் சுற்றுப் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் உலகத் தரவரிசையில் 25-வது இடத்தில் இருப்பவரான ஆயுஷ் ஷெட்டி, சீன வீரர் ஷி யுகியுடன் மோதினர். இதில் ஆயுஷ் ஷெட்டி 8-21, 10-21 என்ற கணக்கில் தோல்வி அடைந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார். ஷி யுகி, உலக பாட்மிண்டன் வீரர்கள் தரவரிசையில் 2-வது இடத்தில் இருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வருமான வரி தொடர்பான வழக்கு: சென்னை ஐகோர்ட்டில் விஜய் மேல்முறையீடு

**சென்னை, ஏப்.14:**

கடந்த 2015-16ம் நிதியாண்டுக்கான வருமான வரி கணக்கை நடிகர் விஜய் தாக்கல் செய்தபோது, அந்த ஆண்டுக்கான வருமானமாக 35 கோடியே 42 லட்சத்து 91 ஆயிரத்து 890 ரூபாய் பெற்றதாக குறிப்பிட்டிருந்தார். அந்த ஆண்டுக்கான மதிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொண்ட வருமானவரித் துறை, நடிகர் விஜய் வீட்டில் கடந்த 2015ம் ஆண்டு நடத்திய வருமானவரி சோதனையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் ஒப்பிட்டு, புலி படத்திற்கு பெற்ற 15 கோடி ரூபாய் வருமானத்தை கணக்கில் காட்டவில்லை என கண்டறிந்தது.



வருமானத்தை மறைத்ததற்காக ஒரு கோடியே 50 லட்சம் ரூபாய் அபராதம் விதித்து கடந்த 2022-ம் ஆண்டு ஜூன் 30-ம் தேதி வருமான வரித்துறை உத்தரவு பிறப்பித்தது. தனக்கு அபராதம் விதித்து வருமான வரித்துறை பிறப்பித்த உத்தரவை எதிர்த்து நடிகர் விஜய் தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, விஜய் தரப்பில், சட்டப்படி அபராத உத்தரவை 2019 ஜூன் 30-ம் தேதிக்கு முன்பே பிறப்பித்திருக்க வேண்டும். ஆனால் ஆறு ஆண்டுகள் காலதாமதமாக 2022-ம் ஆண்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், அதனை ரத்துசெய்ய வேண்டுமென வாதிடப்பட்டது.

வருமான வரித்துறை தரப்பில், ஆஜரான வழக்கறிஞர் வருமான வரி மதிப்பீட்டை எதிர்த்த அப்பீல் முடிந்த பின், ஆறு மாத கால அவகாசத்துக்குள்ளேயே அபராத உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வருமான வரிச்சட்டப்படி நடிகர் விஜய்க்கு அபராதம் விதித்து சரிதான். விஜய் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார். இரு தரப்பு வாதங்களைக் கேட்ட நீதிபதி, வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தார். இந்த வழக்கில் கடந்த பிப்ரவரி மாதம் தீர்ப்பளித்த நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி, வழக்கில் நடிகர் விஜய்க்கு அபராதம் விதித்து, உரிய கால அவகாசத்துக்குள் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அபராதம் விதித்த உத்தரவில் எந்த சட்டவிரோதமும் இல்லை. எனவே இதில் நீதிமன்றம் தலையிட எந்த காரணமும் இல்லை எனக் கூறி, விஜய் தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார். அப்போது, மேல்முறையீடு செய்ய அனுமதி வழங்க வேண்டும் என விஜய் தரப்பில் கோரிக்கைவிடுக்கப்பட்டது. இதை ஏற்றுக் கொண்டு, அபராத உத்தரவை எதிர்த்து, வருமான வரி மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல் முறையீடு செய்ய அனுமதியளித்த நீதிபதி, அபராதம் விதித்த உத்தரவு தாமதமாக பிறப்பிக்கப்பட்டது என்ற காரணத்தின் அடிப்படையில் மேல் முறையீடு செய்யக் கூடாது. மற்ற காரணங்களை கூறி மேல் முறையீடு செய்யலாம் என உத்தரவிட்டார்.

இந்த நிலையில், வருமான வரி அபராதம் தொடர்பான வழக்கில் தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்து தவெக தலைவரும், நடிகருமான விஜய் சென்னை ஐகோர்ட்டில் இருநீதிபதிகள் அமர்வில் மேல்முறையீடு செய்துள்ளார். இந்த மேல்முறையீடு விரைவில் விசாரணைக்கு வர உள்ளது.

# ஆசிரியர்களுக்கு தேர்தல் பணி பயிற்சி: திருச்சியில் பள்ளிகளுக்கு விடுமுறை

**சென்னை, ஏப்.14:**

ஆசிரியர்களுக்கான தேர்தல் பணி பயிற்சி வகுப்புகள் காரணமாக, திருச்சியில் நாளை அனைத்து வகையான பள்ளிகளுக்கும் விடுமுறை அளித்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணப் பிரியா அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில்: ”திருச்சி மாவட்டத்தில் நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கான 2-ம் கட்ட பயிற்சி வகுப்பு நாளை (ஏப்.15) சட்டப்பேரவை தொகுதிகள் வாரியாக நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் கலந்து கொள்ள பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் செல்லவிருப்பதால் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்குமாறு திருச்சி மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சித் தலைவருமான வே.சரவணன் அறிவுறுத்தியுள்ளார்.

எனவே, திருச்சி வருவாய் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளுக்கும் நாளை விடுமுறை அறிவிக்கப்படுகிறது.

மேலும், ஆசிரியர்கள் தேர்தல் பணிக்கு செல்வதால் மைய மதிப்பீட்டு பணிகளுக்கும் நாளை முகாம் விடுமுறை என அறிவிக்க சார்ந்த முகாம் அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் பணி ஆணை பெற்ற அனைத்து ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் உரிய நேரத்தில் தேர்தல் பயிற்சியில் கலந்து கொள்ள அறிவுறுத்துமாறு தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.” என்று கிருஷ்ணப் பரியா கூறியுள்ளார்.

## வணிகச் செய்திகள்

### ஈரான் போர் காரணமாக இந்திய காபி ஏற்றுமதி பாதிக்கும்: நிக்கேய் ஆசியா நிறுவனம் தகவல்

**புதுடெல்லி, ஏப்.14:**

காபி உற்பத்தியில் பிரேசில் மற்றும் வியட்நாம் உள்ளிட்ட நாடுகளுக்கு அடுத்தபடியாக, 7-வது இடத்தில் இந்தியா உள்ளது.

இந்திய காபி துபாய், குவைத் மற்றும் ரியாத் ஆகிய நகரங்களில் உள்ள உணவு விடுதிகளில் பல ஆண்டுகளாக முக்கிய இடத்தை பிடித்துள்ளது. ஆனால் தற்போது ஈரான் போர் காரணமாக கப்பல் போக்குவரத்து முடங்கி, சரக்கு போக்குவரத்து செலவுகள் உயர்ந்துள்ளன.

இதனால் மேற்கு ஆசிய சந்தையில், இந்தியாவின் காபி ஏற்றுமதி 80 சதவீதம் வரையில் பாதிப்பை சந்திக்கலாம் என காபி தொழில்துறை அஞ்சுவதாக நிக்கேய் ஆசியா நிறுவனம் தெரிவித்துள்ளது. ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ள ஹார்முஸ் ஜலசந்தியில் ஏற்பட்டுள்ள கப்பல் போக்குவரத்து பிரச்சினை நீண்டகால நெருக்கடியாக மாறும் என்று இந்திய காபி ஏற்றுமதியாளர்கள் கருதுகின்றனர். இந்தியா தனது காபி உற்பத்தியில் 70 சதவீதத்தை ஏற்றுமதி செய்கிறது. கடந்த சில ஆண்டுகளாக மேற்கு ஆசியாவில் இந்தியா தனது காபி சந்தையை தொடர்ந்து விரிவுபடுத்தியது. ஐக்கிய அரபு அமீரகம், ஜோர்டான் மற்றும் சவுதி அரேபியா போன்ற நாடுகளுக்கு கடந்த 2024-ல் இந்தியாவின் காபி ஏற்றுமதி, மொத்த ஏற்றுமதியில் 16 சதவீதத்துக்கும் மேல் இருந்தன ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவில் இருந்தும் எல்பிஜியை இந்தியா இறக்குமதி செய்கிறது.

# தடை காலம் தொடங்கும் முன்பே மீன்கள் விலை 3 மடங்கு உயர்வு: அசைவ பிரியர்கள் அதிர்ச்சி

**சென்னை, ஏப்.14:**

மீன்களின் இனப்பெருக்க காலத்தை கருத்தில் கொண்டு, தமிழகத்தில் பழவேற்காடு முதல் கன்னியாகுமரி வரை வங்கக்கடல் பகுதியில் 61 நாட்கள் மீன்பிடிக்க தடை விதிக்கப்படுகிறது.

அந்த வகையில், இந்த ஆண்டுக்கான மீன்பிடி தடைக்காலம் நாளை மறுநாள் தொடங்குகிறது.

இந்த தடைக் காலத்தில் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் விசைப்படகுகளுக்கு அனுமதி கிடையாது. குறைந்த தூரமே சென்று மீன்பிடிக்கும் பைபர் படகு மற்றும் கட்டு மரங்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும். இதனால், பெரிய மீன்கள் வரத்து குறைந்துபோகும். சிறிய வகை மீன்கள் மட்டுமே விற்பனைக்கு கிடைக்கும்.

ஆனால், மீன்பிடி தடைக்காலம் தொடங்க இன்னும் 2 நாட்கள் இருக்கும் நிலையில், சென்னையில் இப்போதே மீன்கள் விலை உயரத் தொடங்கியுள்ளது. நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்பதால், சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் பொதுமக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது.

ஆனால், 40-க்கும் குறைவான விசைப்படகுகளே கரை திரும்பியதால், மீன்கள் வரத்தும் குறைவாகவே இருந்தது. இதனால், மீன்கள் விலை 3 மடங்கு உயர்ந்துவிட்டது. இதனால், அசைவப் பிரியர்கள் அதிர்ச்சி அடைந்தனர். வரும் நாட்களில், அரபிக் கடலில் பிடிக்கப்படும் மீன்களே பதப்படுத்தப்பட்டு, தமிழகத்திற்கு விற்பனைக்கு வரும் என்பதால், மீன்கள் விலை மேலும் உயரும் என்று தெரிகிறது.

# மேற்கு வங்கத்தில் மோடி அதிரடி: தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு புதிய வாக்குறுதிகள்

**கொல்கத்தா, ஏப்.14:**

294 தொகுதிகளை கொண்ட மேற்கு வங்காளத்தில் 2 கட்டங்களாக சட்டசபை தேர்தல் நடைபெறும் என கடந்த 15-ந்தேதி பிற்பகலில் தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டது. இதன்படி 23-ந்தேதி முதல் கட்ட தேர்தலும், 29-ந்தேதி 2-ம் கட்ட தேர்தலும் நடத்தப்படும். வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

நேற்று மாலை சிலிகுரியில் நடைபெற்ற 15 கிலோமீட்டர் நீள பிரம்மாண்ட வாகன பேரணி பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. அதை தொடர்ந்து இன்று கவகாளி மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், வட வங்காளத்தின் வளர்ச்சி மற்றும் தேயிலை



தோட்டத் தொழிலாளர்களின் நலன் குறித்து பிரதமர் கூறியதாவது:-

டார்ஜிலிங் உட்பட வட வங்காளத்தின் பெரும்பகுதி, அதாவது இப்பிராந்தியம் முழுவதுமே தேயிலை உற்பத்திக்கு உகந்த ஒரு பகுதியாகும். ஆனால், இரக்கமற்ற திரிணாமுல் காங்கிரஸ் அரசாங்கம் இந்த தேயிலை தோட்டங்களையும் அழித்து வருவதை நீங்கள் காண்கிறீர்கள்.

உங்கள் அண்டை மாநிலமான அசாமில், பாஜக அரசாங்கம் தேயிலைத் தோட்டங்களில் பல்வேறு அடிப்படை வசதிகளை மேம்படுத்தியுள்ளது. தேயிலை தோட்ட தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய துறைகளில் அசாமில் பெருமளவிலான பணிகள் செய்துள்ளது. மேலும், அங்குள்ள தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு நில பட்டாக்களும் வழங்கப்பட்டு வருகின்றன என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

இங்குள்ள தேயிலை தோட்ட குடும்பங்களின் நலனுக்காக, மேற்கு வங்க பாஜகவும் பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

தொழிலாளர் குடும்பங்களுக்கு நில பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும், நிரந்தர வீடுகள், குழாய்வழி குடிநீர், மின்சாரம் மற்றும் வேலைவாய்ப்பு வசதிகள் ஆகியவை ஏற்படுத்தி தரப்பட வேண்டும். சுருக்கமாக சொன்னால், இங்கு அமையவிருக்கும் பாஜக அரசாங்கம், தொழிலாளர்களின் வருமானம், கல்வி, மருத்துவம் என அனைத்து துறைகளிலும் முழுவீச்சில் பணியாற்றும் என்று பிரதமர் மோடி கூறினார்.

# பழுது பார்த்த போது, ஜாக்கி நழுவியதால் சோகம்: பஸ்சுக்கு அடியில் சிக்கி மெக்கானிக் பலி

**ஆலப்புழா, ஏப்.14:**

ஆலப்புழா மாவட்டம் காயங்குளம் அடுத்த பட்டோலி மார்க்கெட் அருகே மீனத்தேல் பகுதியைச் சேர்ந்தவர் பிரகாஷ். இவரது மனைவி லதிகா. இவர்களது மகன் கிரி பிரகாஷ் (வயது 23), மெக்கானிக் ஆவார். இவர் கோழிக்கோடு-தேவாலா இடையே இயக்கப்படும் தனியார் பஸ்சை பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டு வந்தார். கோழிக்கோடு அருகே உள்ள சரோவரம் பகுதியில், தனது உதவியாளரான கோழிக்கோட்டைச் சேர்ந்த அஸ்வின் (24) என்பவருடன் சேர்ந்து, பஸ்சை ஜாக்கி வைத்து உயர்த்தி நிறுத்திவிட்டு, அதன் அடியில் படுத்து பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது எதிர்பாராத விதமாக ஜாக்கி நழுவியது. இதனால் பஸ்சுக்கு அடியில் இருந்த 2 பேர் மீதும் பஸ் விழுந்தது. இதில் கிரி பிரகாஷ், அஸ்வின் ஆகிய 2 பேரும் படுகாயம் அடைந்தனர். தகவல் அறிந்த கோழிக்கோடு போலீசார், தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து ஹைட்ராலிக் ஜாக்கி மூலம் பஸ்சை உயர்த்தி, அதன் அடியில் சிக்கிய இருவரையும் மீட்டு கோழிக்கோடு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள், கிரி பிரகாஷ் இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர். அஸ்வின் ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அனைத்து கட்சி கூட்டத்தை ஏப்.29-ல் நடத்த பிரதமர் மோடியிடம் கார்கே வலியுறுத்தல்

**புதுடெல்லி, ஏப்.14:**

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

மகளிர் இடஒதுக்கீடு சட்டம் 2023-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. உடனடியாக சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று அப்போதே வலியுறுத்தினேன். சட்டம் நிறைவேற்றப்பட்டு 30 மாதங்களுக்குப் பிறகு திடீரென நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் கூட்டப்படுகிறது. ஆனால் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்து எதிர்க்கட்சிகளுடன் எவ்வித ஆலோசனையும் நடத்தப்படவில்லை.

தற்போது நீங்கள் எழுதியிருக்கும் கடிதத்தில் தொகுதி மறு வரையறை குறித்து எந்த தகவலும் இடம்பெறவில்லை. இந்த சூழலில் வரலாற்று சிறப்புமிக்க மகளிர் இடஒதுக் கீடு சட்டம் குறித்து ஆக்கப்பூர்வமான விவாதத்தை நடத்துவது சாத்தியமில்லை. தற்போது பல்வேறு மாநிலங்களில் தேர்தல் நடத்தப்படுகிறது.

இந்த தேர்தல்கள் முடிந்த பிறகு ஏப்ரல் 29-ம் தேதி அனைத்துக் கட்சி கூட்டத்தை நடத்த வேண்டும்.

அதில் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் தொடர்பான அரசியலமைப்பு சட்ட திருத்தங்கள் குறித்து விவாதிக்க வேண்டும். மகளிருக்கான இடஒதுக்கீட்டை அதிகரிக்க திடீரென நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தை கூட்டியிருப்பது அரசியல் ஆதாயம் தேடும் முயற்சி ஆகும். இவ்வாறு கார்கே தெரிவித்துள்ளார்.

# திருமணத்திற்கு சென்று திரும்பிய போது விபத்தில் சிக்கி 6 பேர் பலி - உத்தர பிரதேசத்தில் சோகம்

**லக்னோ, ஏப்.14:**



உத்தர பிரதேசத்தின் ஹாப்பூர் மாவட்டத்தில் பஸ் ஒன்று திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பின்னர் சொந்த ஊருக்கு இன்று காலை சென்றுகொண்டிருந்தது. அந்த பஸ்சில் மணமகனின் தந்தையும் பயணம் செய்திருந்தார். அப்போது தௌலானா-குலாவதி சாலையில் சென்றுகொண்டிருந்தபோது, எதிரே வந்த லாரி ஒன்று டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து பஸ் மீது நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில், பஸ்சின் முன்பகுதி முற்றிலும் சேதமடைந்து, வாகனம் தலைகீழாக கவிழ்ந்தது. இந்த நிலையில், சம்பவ இடத்திலேயே மாப்பிள்ளையின் தந்தை மற்றும் பஸ் டிரைவர் உள்ளிட்ட 6 பேர் உயிரிழந்தனர்.

மேலும், பலர் கடுமையாக காயமடைந்தனர். உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் மீட்பு பணியில் ஈடுபட்டு, காயமடைந்தவர்களை அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக போலீசார் தெரிவித்துள்ளனர். திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வீடு திரும்பும் போது ஏற்பட்ட விபத்தில் 6 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# மேற்கு வங்கத்தைப் பிரிக்க சதி: மத்திய அரசு மீது மம்தா புகார்

**புதுடெல்லி, ஏப்.14:**

மேற்கு வங்கத்தின் பாங்குரா மாவட்டத்தில் உள்ள சத்னா மற்றும் ஒண்டா ஆகிய இடங்களில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் மம்தா பங்கேற்றுப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: பாஜக அரசு புதிதாக தொகுதி மறுவரையறை மசோதாவைக் கொண்டு வந்து, மேற்கு வங்கத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கத் திட்டமிட்டுள்ளது. மாநிலத்தின் சில பகுதிகளை பீகார் மற்றும் ஒடிசாவுடன் இணைக்க அவர்கள் முயல்கின்றனர். இதன் மூலம் அந்தப் பகுதிகளில் வசிக்கும் வங்க மொழி பேசும் மக்கள் கடும் சித்திரவதைக்கு உள்ளாவார்கள். பெங்காலிகளின் ஒற்றுமையைச் சிதைக்கவே இந்தச் சதி நடக்கிறது.

திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்த பாஜக ரூ.1,000 கோடி பேரம் பேசியுள்ளது. இதற்கு, ஆம் ஜனதா உன்னயன் கட்சி தலைவர் ஹுமாயூன் கபீர் தொடர்பான வீடியோவே சாட்சியாக உள்ளது. சிறுபான்மையினரின் வாக்குகளைப் பிரித்து திரிணமூல் காங்கிரஸைத் தோற்கடிக்க ரூ.1,000 கோடி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் முன் பணமாக ரூ.200 கோடி கைமாறியுள்ளது.

தேர்தல் நேரத்தில் பாஜகவினர் வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்து விலைக்கு வாங்க முயல்வார்கள். வாக்குப் பதிவு முடிந்ததும் அளித்த வாக்குறுதிகளை மறந்து விடுவார்கள். பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இவ்வாறு மம்தா பேசினார்.

# தேர்தல் பணியில் ஈடுபட்ட அரசு ஊழியர்களிடம் ரூ.1,000 பிடித்தம்; வெளியே சொல்லமுடியாமல் குமுறல்

**புதுச்சேரி, ஏப்.14:**

புதுச்சேரியில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலுக்காக மொத்தம் 1,099 ஓட்டுச் சாவடிகள் அலுவலர்கள், அமைக்கப்பட்டிருந்தது. ஓட்டுச் சாவடிகளில் தலா ஒரு தலைமை தேர்தல் அலுவலர், 3 ஓட்டுப் பதிவு பல்நோக்கு ஊழியர் மற்றும் ஒரு ஓட்டுச்சாவடி அலுவலர் வாக்கு பதிவு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு ஓட்டுப்பதிவு முடிந்து, மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களை வேனில் ஏற்றும் போதே தேர்தல் ஆணையம் வழங்கும் மதிப்பூதியம் வழங்கப்பட்டது. அதில் தலைமை தேர்தல் அலுவலருக்கு ரூ.3,500, ஓட்டுப்பதிவு அலுவலர் நிலை 1 -க்கு ரூ.3,000, ஒரு ஓட்டுப்பதிவு அலுவலர்கள் நிலை 2 மற்றும் நிலை 3-க்கு தலா ரூ.2,700-ம், பல்நோக்கு ஊழியருக்கு ரூ.1,200 மற்றும் ஓட்டுச்சாவடி அலுவலருக்கு ரூ.1500 வழங்கப்பட்டது. இந்த பணத்தில் காலை சிற்றுண்டி மதிய உணவு வழங்கியதற்காக ரூ.300 முதல் ரூ.400 வரை பிடித்தம் செய்யப்பட்டது. ஆனால், 2 தொகுதிகளில் மட்டும், வாக்கு பதிவு பணியில் ஈடுபட்ட அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட மதிப்பூதியத்தில் சாப்பாட்டிற்காக தலைமை அலுவலர் மற்றும் ஓட்டுப் பதிவு அலுவலர்களிடம் ஆயிரம் ரூ.1,000 பல்நோக்கு ஊழியரிடம் ரூ.500 பிடித்தம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. ஆனால் பிற தொகுதிகளில் ரூ. 300 முதல் 400 சாப்பாட்டிற்கு பிடித்தம் செய்துள்ள நிலையில், 3 தொகுதிகளில் மட்டும் ரூ.1,000 பிடித்தம் செய்திருப்பது ஊழியர்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இதனை வெளியே சொல்ல முடியாமல் ஊழியர்கள் வேதனையடைந்துள்ளனர்.

# பாம்பு கடிக்குச் சிகிச்சையளித்த மந்திரவாதி: கங்கையில் 12 மணி நேரம் மிதந்த சிறுவன் பலி

**அம்ரோகா, ஏப்.14:**

உத்தர பிரதேச மாநிலம் அம்ரோகா பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுவனை பாம்பு கடித்துள்ளது. அவனது பெற்றோர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல் சிகிச்சையளிக்க மந்திரவாதியை நாடியுள்ளனர்.

அந்த மந்திரவாதி, சிறுவனின் உடலில் ஏறிய விஷம் இறங்க வேண்டுமானால், அவனைப் புனித கங்கை நதி நீரில் நீண்ட நேரம் மூழ்கடித்து வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

பாம்பு விஷம் கங்கையில் மூழ்கினால் தானாகவே வெளியேறிவிடும் என்று மந்திரவாதியின் மூடநம்பிக்கை பேச்சை நம்பிய பெற்றோர் அவர்களது மகனை கங்கைக்கு அழைத்துச் சென்றனர்.

மூங்கிலால் செய்யப்பட்ட தற்காலிக மிதவை போன்ற அமைப்பில் சிறுவனை கட்டிவைத்த உறவினர்கள், சுமார் 12 மணி நேரம் அவனை கங்கை தண்ணீரிலேயே மூழ்கி இருக்குமாறு செய்துள்ளனர். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் பரவி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அந்த வீடியோவில், அசைவற்றுக் கிடக்கும் சிறுவனை சுற்றி ஏராளமான மக்கள் வேடிக்கை பார்ப்பதும், ஏதேனும் அதிசயம் நடக்கும் என காத்திருப்பதும் பதிவாகியுள்ளது.

நீண்ட நேரம் காத்திருந்தும் எந்த அற்புதமும் நிகழவில்லை. முறையான மருத்துவ சிகிச்சை கிடைக்காததாலும், நீண்ட நேரம் கடும் குளிரில் நீரில் இருந்ததாலும் பாம்பு கடித்த அந்தச் சிறுவன் பரிதாபமாக உயிரிழந்தான். இச்சம்பவம் குறித்த வீடியோ வைரலானதைத் தொடர்ந்து சிறுவனின் இறப்பு குறித்து நெட்டிசன்கள் பலரும் தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

"மக்களின் அறியாமையை முதலீடாகக் கொண்டு இதுபோன்ற போலி மந்திரவாதிகள் உயிரோடு விளையாடுகிறார்கள். பாம்பு கடிக்கு மருத்துவ சிகிச்சையே முதன்மையானது என்ற விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த வேண்டியது அவசியம்'' என்று பதிவிட்டுள்ளனர்.

உயிரிழந்த சிறுவனின் பெற்றோர் மற்றும் சிகிச்சையளித்த மந்திரவாதியை கைது செய்ய வேண்டும் என்றும் கோரிக்கைகள் தற்போது வலுத்துள்ளன.

# ஜூலை 3-ல் அமர்நாத் யாத்திரை தொடக்கம்: ஏப்.15 முதல் முன்பதிவு



**ஸ்ரீநகர், ஏப்.14:**

இந்தாண்டு அமர்நாத் யாத்திரை ஜூலை 3-ம் தேதி முதல் தொடங்கி ஆகஸ்ட் 28-ம் தேதி வரை 57 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. இந்த யாத்திரைக்கான பதிவு நாளை மறுநாள் 15-ம் தேதி முதல் தொடங்குகிறது.

காஷ்மீரின் அனந்தநாக் மாவட்டத்தில் 3,888 மீட்டர் உயரத்தில் அமர்நாத் கோயில் அமைந்துள்ளது. இங்கு பனி லிங்கத்தைத் தரிசிக்க ஒவ்வொரு ஆண்டும் யாத்திரை நடைபெறுகிறது. இந்த யாத்திரை ஜூலை 3-ம் தேதி ஆகஸ்ட் 28-ம் தேதி வரை 57 நாட்களுக்கு நடைபெறும் என காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா அறிவித்தார்.

# Namma Kasa: குப்பை பிரச்சினைக்கு தீர்வு காண உதவும் தளம் @பெங்களூரு

**பெங்களூரு, ஏப்.14:**





பெருநகரங்களில் வசிக்கும் மக்கள் அன்றாடம் தங்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று முறையாக அகற்றப்படாத குப்பைகள்.

இதனால் நகரங்கள் பலருக்கு நரகமாகும். இந்நிலையில், இந்தியாவின் பெருநகரங்களில் ஒன்றான பெங்களூருவில் 'NAMMA KASA' மூலம் புதிய முயற்சியை ஜோதிஷ் என்ற இளைஞர் தொடங்கியுள்ளார்.

இந்த தளம் மூலம் பெங்களூருவின் 243 வார்டுகளில் வசிக்கும் மக்கள் மட்டுமே இப்போதைக்கு தங்களது புகார்களை தெரிவிக்க முடியும். 30 விநாடிகளில் இதை செய்யலாம் என ஜோதிஷ் சொல்லியுள்ளார்.

இந்த தளத்தின் மூலம் பயனர்கள் தங்களது பெயர் உள்ளிட்ட தனிப்பட்ட விவரங்களை எதுவும் தெரிவிக்காமல், தங்கள் இடத்தில் அகற்றப்படாமல் குவிந்திருக்கும் குப்பையை அகற்றுவதற்கான புகாரை தெரிவிக்கலாம். இந்த தளம் கிரவுட்சோர்சிங் முறையில் இயங்குகிறது.

இதில் புகார் தெரிவிக்க விரும்புவோர் தங்களது லொகேஷனை இந்த தளம் அக்சஸ் செய்வதற்கான அனுமதியை தர வேண்டும். அதைத் தொடர்ந்து குவிந்திருக்கும் குப்பையை செல்போனில் படம் பிடித்து இந்த தளத்தில் பதிவேற்றம் செய்யவேண்டும். அதன்பிறகு அந்த இடம் பெங்களூருவின் எந்த வார்டில் உள்ளது, குப்பையை அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பாளர்களான பெருநகர பெங்களூரு மாநகராட்சியின் அதிகாரிகள், அந்த வார்டை உள்ளடக்கி உள்ள சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் யார் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய புகார் தயாராகிறது.

அந்த புகார் சார்ந்த நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு அதற்கு தீர்வு காணப்பட்டுள்ளது குறித்தும் இதிலேயே தெரிவிக்கலாம்.

அதன் பின்னர் அது 'RESOLVED ரிப்போர்ட்' என மாற்றப்படுகிறது. இதை அப்படியே பெருநகர பெங்களூரு மாநகராட்சிக்கு நேரடியாகப் புகார் தரும் அம்சமும் உள்ளது குறிப்பிடத்தக்கது. சமுதாயத்தின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த முயற்சியை மேற்கொண்டதாக ஜோதிஷ் தெரிவித்தார்.

இந்த தளத்தை பயன்படுத்த மிகவும் எளிதாக இருக்க வேண்டும் என்பதில் அவர் கவனமாக இருந்துள்ளார். இதை இலவசமாக பயன்படுத்தலாம் என்றும் கூறியுள்ளார்.

# பிகார் முதல்வர் பதவி: நிதீஷ் குமார் இன்று ராஜிநாமா?

**புதுடெல்லி, ஏப்.14:**

பிகார் அமைச்சரவைக் கூட்டத்தை செவ்வாய்க்கிழமை (ஏப். 14) நடத்த நிதீஷ்குமார் முடிவு செய்துள்ளார். கடந்த வாரம் நிதீஷ்குமார் வெற்றி பெற்று எம்.பி.யாக பதவியேற்றார். அவர் பிகார் முதல்வர் பதவியை ராஜிநாமா செய்வார் என்றும் பாஜகவைச் சேர்ந்த ஒரு தலைவர் புதிய முதல்வராகப் பொறுப்பேற்பார் என்றும் அரசியல் வட்டாரத்தில் ஊகங்கள் வெளியாகின. இந்நிலையில் இது தொடர்பாக கேபினட் செயலகத் துறை வெளியிட்ட அறிக்கையின்படி அன்று பகல் 11 மணிக்கு இக்கூட்டம் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற பிறகு நிதீஷ்குமார் தனது ராஜிநாமா கடிதத்தை ஆளுமர் சையது அடா ஹஸ்னைனிடம் அளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக நிதீஷ்குமாரின் நெருங்கிய சகாவும் ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் செயல் தலைவருமான சஞ்சய்ஜா, செய்தியாளர்களிடம் கூறுகையில் "ஏப். 13ஆம் தேதிக்குப் பிறகு புதிய அரசை அமைப்பதற்கான நடைமுறைகள் தொடங்கும்' என்று தெரிவித்தார்.

## நியூசிலாந்து நாட்டை தாக்கிய புயல்; 90 விமானங்கள் ரத்து - 5 பேர் உயிரிழப்பு



**வெல்லிங்டன், ஏப்.14:**

நியூசிலாந்தின் வடக்குத் தீவை வையாணு புயல் தாக்கியது. மணிக்கு 140 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசியபடி, 10 செ.மீ. அளவு பேய் மழை பெய்தது. இதனால் வார்க்வோர்த் நகரில உள்ள மவுராகி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி வீடுகள், சாலைகள் மற்றும் குடியிருப்பு பகுதிகளுக்குள் வெள்ளம் புகுந்தது.

வடக்குத் தீவின் வக்காட்டேன் பகுதியில் 270 வீடுகளில் இருந்த 2,500 பேர் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். இதுவரை நூற்றுக்கணக்கானோர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். 5,000 வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. வெள்ளம் காரணமாகப் பல முக்கிய நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

ஏர் நியூசிலாந்து நிறுவனம் 90 விமான சேவைகளை ரத்து செய்துள்ளது. வாங்கரே. பார் நார்த் மற்றும் பே ஆப் பிளெண்டி ஆகிய பகுதிகளில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. புயல் தற்போது தெற்கு நோக்கி நகர்ந்து ஹாக்ஸ் பே வழியாக கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புயல் மற்றும் கனமழைக்கு 5 பேர் உயிரிழந்தனர். மாயமான 11 பேரை தேடி வருகிறார்கள்.

## அமெரிக்கா தாக்குதலால் 3,375 பேர் இதுவரை பலி: ஈரான்

**தெஹ்ரான், ஏப்.14:**

ஈரானின் நீதித்துறையின் கீழ் செயல்படும் சட்ட மருத்துவ அமைப்பின் தலைவர், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் நடந்த போரில் ஈரானில் 3,375 பேர் உயிரிழந்ததாக தெரிவித்தார். ஈரான் – அமெரிக்கா போரால் 3,375 பலியாகியுள்ளனர். உயிரிழந்தவர்களில் 2,875 பேர் ஆண்களும், 496 பேர் பெண்களும் அடங்குவதாகவும், அவர்கள் பெரியவர்கள் அல்லது குழந்தைகள் என்பதைக் குறிப்பிட்டு விவரம் அளிக்கப்படவில்லை என்றும் ஈரான் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை என்று கூறி அந்த நாட்டின் மீது அமெரிக்கா கடந்த பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி போர் தொடுத்தது. ஒரு மாதத்திற்கும் மேலாக போர் நீடித்து வரும் நிலையில், இந்த போரை முடிவுக்கு கொண்டு வர நடைபெற்ற அமைதிப்பேச்சுவார்த்தையும் தோல்வி அடைந்துள்ளது. இதனால், ஈரான் - அமெரிக்கா இடையே பதற்ற நிலை நீடிக்கிறது.

## பாதுகாப்பு ஒப்பந்தம் அமல்: சவுதியில் பாகிஸ்தான் போர் விமானங்கள்

**இஸ்லமாபாத், ஏப்.14:**

அமெரிக்கா-ஈரான் போர்நிறுத்த பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த நிலையில், சவுதி அரேபியாவிற்கு பாகிஸ்தான் போர் விமானங்களையும் 13,000 வீரர்களையும் அனுப்பியது.

இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்தான பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ், தனது முதல் இராணுவ நடவடிக்கையாக சவூதி அரேபியாவிற்கு போர் விமானங்களை மற்றும் 13,000 வீரர்களையும் அனுப்பியுள்ளது.

நேற்று சவூதி அரேபியாவின் கிழக்கு மாகாணத்தில் உள்ள கிங் அப்துல்அஜிஸ் விமான தளத்தில் போர் விமானங்கள் தரையிறங்கின. செப்டம்பர் 2025-ல் கையெழுத்தான ஒரு கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ் இந்த நிலை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி, இரு நாடுகளில் ஏதேனும் ஒன்றின் மீதான தாக்குதல் நடந்தால், இரு நாடுகளின் மீதான தாக்குதலாகவே கருதப்படும்.

மேலும் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் ரியாத் சென்றிருந்தபோது இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. அங்கு அவர் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானை சந்தித்து, இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

## சர்வாதிகார போக்கை கைவிட்டால் மட்டுமே அமெரிக்காவுடன் உடன்பாடு: ஈரான் அதிபர் திட்டவட்டம்

**தெஹ்ரான், ஏப்.14:**

ஈரான்-அமெரிக்கா இடையேயான அமைதி பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது. பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததற்கு அணு ஆயுத திட்டத்தை ஈரான் கைவிட மறுப்பது ஒரு காரணம் என்று அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து டிரம்ப் கூறும் போது, 'பேச்சுவார்த்தைக்கு மீண்டும் ஈரான் வரா விட்டாலும் அதைப் பற்றி கவலைப்படவில்லை' என்று கூறியிருந்தார்.



இந்த நிலையில், அமெரிக்கா தனது சர்வாதிகார போக்கை கைவிட்டால் மட்டுமே உடன்பாட்டுக்கான வழி கண்டறியப்படும் என்று ஈரான் அதிபர் மசூத் பெஷஷ்கியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது:

அமெரிக்க அரசு தனது சர்வாதிகார போக்கை கைவிட்டு, ஈரான் நாட்டு உரிமைகளை மதிக்கும் என்றால் ஓர் உடன்பாட்டை எட்டுவதற்கான வழிகள் நிச்சயமாக கண்டறியப்படும். பேச்சுவார்த்தை குழுவின் உறுப்பினர்களையும், குறிப்பாக எனது அன்பு சகோதரர் டாக்டர் காலிப் பாப்பையும் நான் பாராட்டுகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஈரான் வெளியுறவுத்துறை மந்திரி அப்பாஸ் அராக்சி கூறும் போது, 'போரை முடிவுக்கு கொண்டு வருவதற்காக நாங்கள் அமெரிக்காவுடன் நம்பிக்கையுடன்பேச்சுவார்த்தை நடத்தினோம். ஆனால் இந்த ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகளைஅமெரிக்கா சீர்குலைத்து விட்டது. எங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இந்த ஒப்பந்தங்களை ஏற்படுத்த அமெரிக்கா முயற்சித்தது' என்றார்.

## புகழ்பெற்ற சுற்றுலா தலத்தில் கூட்ட நெரிசல்; 30 பேர் பலி

**போர்ட் அவ் பிரின்ஸ், ஏப்.14:**

கரீபியன் கடலில் அமைந்துள்ள தீவு நாடுகளில் ஹைதியும் ஒன்றாகும். இந்நாட்டில் உள்ள மலைகள், கடற்கரைகள், பாரம்பரிய சின்னங்களை காண லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிவது வழக்கம்.

குறிப்பாக, வடக்கு ஹைதியின் மிலாட் நகரில் மலை மீது சிடெல் ஹென்றி என்ற லபெரியர் கோட்டை உள்ளது. பிரான்சிடமிருந்து சுதந்திரம் பெற்றபிறகு புரட்சியாளர் ஹென்றி கிறிஸ்டோப் தலைமையில் இந்த மலைக்கோட்டை கட்டப்பட்டது.



உலக புகழ்பெற்ற சுற்றுலா தலமாக திகழும் இந்த மலைக்கோட்டையில் வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறையை முன்னிட்டு நேற்று திருவிழா நடைபெற்றது. இதில் உள்ளூர், வெளிநாடுகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் கலந்துகொண்டனர். அப்போது அங்கு திடீரென கனமழை பெய்தது. இதனால் அங்கிருந்தவர்கள் மழையில் நனைந்துவிடாமல் இருக்க பாதுகாப்பான இடங்களை தேடி ஓடினர். அப்போது சுற்றுலாப்பணிகளி டையே தள்ளுமுள்ளு எற்பட்டு அது கூட்டநெரிசலாக மாறியது.

இந்த கூட்டநெரிசலில் சிக்கி பெண்கள் உள்பட 30 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 70க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வளைகுடா நாடுகளின் துறைமுகங்களைத் தாக்குவோம்: ஈரான் எச்சரிக்கை!

**தெஹ்ரான், ஏப்.14:**

ஈரான், அமெரிக்கா இடையே பாகிஸ்தானில் 21 மணி நேரத்துக்கும் மேல் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது.

ஈரான் தரப்பில் 10 அம்ச திட்டம் முன்வைக்கப்பட்ட நிலையில், அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடக் கூடாது, ஹோர்முஸ் நீரிணையை முழுமையாகக் கட்டுப்படுத்துவது கூடாது என அமெரிக்கா சில நிபந்தனைகளை விதித்தது. அதில், இரு நாடுகளுக்கும் இடையே உடன்பாடு எட்டப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து, ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் அனைத்து கப்பல்களும் முற்றுகையிடப்படும் என்று டிரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக ஈரான் வெளியிட்ட அறிக்கையில், "ஹோர்முஸ் நீரிணை மற்றும் ஓமன் கடற்பகுதியின் பாதுகாப்பு என்பது அனைவருக்குமானது அல்லது யாருக்கும் உரிமையில்லாதது என இஸ்லாமியக் குடியரசான ஈரானின் ஆயுதப் படைகள் தெளிவாகவும் உறுதியாகவும் அறிவிக்கின்றது.




ஈரான் எல்லைக்குள்பட்ட நீர்ப்பரப்பில் ஆயுதப் படைகளின் உறுதியான பாதுகாப்பு தொடரும். மேலும் பலமுறை எச்சரித்ததன்படி, எதிரி தரப்பு கப்பல்களுக்கு ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்ல அனுமதியில்லை. எப்போதும் இருக்கப் போவதில்லை.

மற்ற கப்பல்கள் ஈரான் ஆயுதப் படைகளின் விதிமுறைகளுக்கு உள்பட்டு ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்ல தொடர்ந்து அனுமதிக்கப்படும்.

போர் முடிந்த பின்னரும் ஈரானின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் தரும் விதமாக அமெரிக்கா நடந்துகொள்வதால், ஹோர்முஸ் நீரிணையைக் கட்டுப்படுத்துவதற்கான நெறிமுறைகளை ஈரான் உறுதியாகச் செயல்படுத்தும்.

சர்வதேச கடல் பகுதியில் கப்பல்களின் நடமாட்டத்திற்கு குற்றவாளி நாடான அமெரிக்கா விதித்துள்ள கட்டுப்பாடுகள் சட்டவிரோதமானது. அது கடற்கொள்ளைக்குச்சமமானது.

ஹோர்முஸ் நீரிணை பிரச்னையில் ஈரான் துறைமுகங்களை அமெரிக்கா முற்றுகையிட்டால், வளைகுடா நாடுகளில் உள்ள துறைமுகங்களில் நாங்கள் தாக்குதல் நடத்துவோம்" என ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

## பில்லியன் டாலர், அழகான பெண்: துருக்கியிடம் கேட்கும் உகாண்டா ராணுவத்தளபதி

**லாகூர், ஏப்.14:**

1 சோமாலியாவில் இஸ்லாமியக் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக உகாண்டா ராணுவம் நீண்டகாலமாக மேற்கொண்டு வரும் பாதுகாப்புப் பங்களிப்பிற்கான ஊதியமாக 1 பில்லியன் அமெரிக்க டாலர் வழங்க வேண்டும் என்று உகாண்டா ராணுவத் தளபதி ஜெனரல் முஹூசி கைனெருகாபா துருக்கியிடம் கேட்டுள்ளார்.

அதோடு நிற்காமல், அந்நாட்டின் மிக அழகான பெண்ணைத் தனக்கு மணம் முடித்துத் தரவேண்டும் என்றும் கூறி பரபரப்பை கிளப்பியுள்ளார். ஒரு மாதத்திற்குள் இக்கோரிக்கைகளைத் துருக்கி நிறைவேற்றாவிட்டால், கம்பாலாவில் உள்ள துருக்கியத் தூதரகம் மூடப்படும் என்றும், உகாண்டா வான்வெளியில் துருக்கி ஏர்லைன்ஸ் பறக்கத் தடை விதிக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். உகாண்டா ராணுவ தளபதியின் இந்த வினோத கோரிக்கை பரப்பை கிளப்பியுள்ளது.

## "ஈரான் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு திரும்புவது குறித்து எனக்கு கவலையில்லை..." - ட்ரம்ப்

**வாஷிங்டன், ஏப்.14:**

பாகிஸ்தானில் நடந்த அமெரிக்கா – ஈரான் இடையிலான பேச்சுவார்த்தை உடன்பாட்டை எட்டத் தவறிய நிலையில், "ஈரான் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு திரும்புவது குறித்து எனக்குக் கவலையில்லை. 'நாகரிகம் அழியும்' என்ற எனது கருத்துதான் ஈரானைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வந்தது" என்று அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறினார்.

புளோரிடாவிலிருந்து மேரிலாந்தில் உள்ள ஜாயின்ட் பேஸ் ஆண்ட்ரூஸில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "ஈரான் பேச்சுவார்த்தைக்கு திரும்ப வருகிறார்களா இல்லையா என்பது குறித்து எனக்குக் கவலையில்லை. அவர்கள் திரும்ப வரவில்லை என்றாலும், எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. 'நாகரிகம் அழியும்' என்ற எனது கருத்துதான் ஈரானைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வந்தது. ஆனால், அவர்கள் அதை மறந்து விட்டு பேச்சுவார்த்தையை விட்டு வெளியேறிவிட்டார்கள். இருப்பினும், அவர்கள் திரும்பி வந்து, நாம் விரும்பும் அனைத்தையும் நமக்குத் தருவார்கள் என்று நான் கணிக்கிறேன்" என்று கூறினார்.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் கடந்த சனிக்கிழமை அன்று அமெரிக்கா, ஈரான் இடையிலான அமைதிப்பேச்சுவார்த்தை நடந்தது. இதில் அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ், ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாப் உள்ளிட்டோர் பங்கேற்றனர். சுமார் 21 மணி நேரம் நடந்த இப்பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்பட்டது. இந்த அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வியடைய அமெரிக்காதான் காரணம் என ஈரான் வெளியுறவு அமைச்சர் சையது அப்பாஸ் அராக்சி தெரிவித்தார். அமெரிக்கா - ஈரான் இடையிலான பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில் மேற்காசியாவில் போர் பதற்றம் மீண்டும் அதிகரித்துள்ளது. ஹார்முஸ் ஜலசந்தி மூடப்படும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் தங்கியிருந்த லெபனான் கிராமங்களைத் தகர்த்தது இஸ்ரேல்

**பெய்ரூட், ஏப்.14:**

: தெற்கு லெபனானில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் தங்கியிருந்த கிராமங்களை இஸ்ரேல் குண்டு வைத்து மொத்தமாக தகர்த்தது.

தெற்கு லெபனான் பகுதியில் உள்ள கிராமங்களில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் தங்கியிருந்தனர். இவர்கள் வடக்கு இஸ்ரேல் பகுதியில் அடிக்கடி ராக்கெட் குண்டு வீச்சில் ஈடுபட்டு வந்தனர். இதனால் கடந்த 2 வாரங்க ளாக லெபனான் மீது இஸ்ரேல் கடும் தாக்குதல் நடத்தி வந்தது.

காசாவின் ரஃபா, பெய்ட் ஹானன் ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்பு பகுதிகளை எல்லாம் மக்கள் மீண்டும் வசிக்காதபடி இஸ்ரேல் குண்டு வைத்து தகர்த்தது. தெற்கு லெபனான் எல்லைப் பகுதியில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் தங்கியிருந்த டேபெஹ், நகுரா மற்றும் டெயிர் செர்யான் ஆகிய கிராமங்களில் உள்ள அனைத்து வீடுகளையும் குண்டு வைத்து ரிமோட் கன்ட்ரோல் மூலம் இஸ்ரேல் ராணுவத்தினர் தகர்த்தனர்.

இந்த தாக்குதலின் செயற்கைக்கோள் வீடியோவையும் சமூக ஊடகத்தில் இஸ்ரேல் வெளியிட்டுள்ளது. லெபனான் எல்லையில் உள்ள பல கிராமங்களை இஸ்ரேல் தகர்த்துள்ளதாக லெபனான் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை 2,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்நிலையில் லெபனானுடன் அமைதி ஒப்பந்தம் செய்ய விரும்புவதாகவும், ஆனால் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுடன் எந்த ஒப்பந்தமும் கிடையாது என்றும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறியுள்ளார். தெற்கு லெபனானின் பல பகுதிகளை ஆக்கிரமிப்போம் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

## ஹார்முஸ் நீரிணையில் கண்ணிவெடிகளை கண்டுபிடிக்க முடியாமல் திணறும் ஈரான்

**தெஹ்ரான், ஏப்.14:**

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிராக நடைபெற்ற போரில், எரிபொருள் விநியோகத்தின் முக்கிய பாதையான ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடியது. இதனால், சர்வதேச அளவில் எரிபொருள் தட்டுப்பாடு உருவானது. இந்தப் போரின்போது அனுமதியின்றி ஹார்முஸ் நீரிணையைக் கடக்க முயன்ற சில வெளிநாடுகளின் கப்பல்கள் மீது ஈரானின் படைகள் தாக்குதல் நடத்தின.

மேலும் அவ்வழியாக கப்பல்கள் செல்வதைத் தடுக்க சிறிய படகுகள் மூலம் ஈரானின் புரட்சிகர காவல் படையினர் கண்ணிவெடிகளை பொருத்தினர்.



போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென அழுத்தம் அதிகரித்ததைத் தொடர்ந்து 2 வாரங்களுக்கு அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே போர்நிறுத்தம் அமலுக்கு வந்தது.

இதையடுத்து, ஹார்முஸ் நீரிணையின் குறிப்பிட்ட பாதையின் வழியாக சர்வதேச நாடுகளின் கப்பல்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டதால் எரிபொருள் வினியோகம் சற்று இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. இந்த நிலையில், ஹார்முஸ் நீரிணையில் ஈரான் பொருத்திய கண்ணிவெடிகளைக் கண்டறிய அந்நாட்டு படைகளால் முடியவில்லை எனவும், அவை கடலின் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹார்முஸ் நீரிணை கடல்பகுதியில், கண்ணிவெடிகள் எங்கெல்லாம் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்க முடியாததால் நீரிணையை முழுமையாக திறப்பதில் சிக்கல் நீடிக்கிறது. கடலுக்கு மேலே மிதந்த கண்ணிவெடிகளை ஈரான் ராணுவம் அகற்றியது. கடலுக்கு சில நூறு அடி ஆழத்தில் எங்கெல்லாம் கண்ணிவெடிகள் வீசப்பட்டன என்பது குறித்து தெளிவான விவரங்கள் இல்லாததால் சிரமம் ஏற்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்ட ராணுவ வரைபடத்தின்படி நடக்காமல், அவசர அவசரமாகச் செய்யப்பட்டதால், எந்தெந்த இடங்களில் கண்ணிவெடிகள் வைக்கப்பட்டுள்ளன என்பதற்கான துல்லியமான தரவுகள் ஈரானிடம் இல்லாமல் போய்விட்டது. பொதுவாக கண்ணிவெடிகளை வைப்பது எளிது. ஆனால் அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து அகற்றுவது மிகவும் கடினமான பணி. தற்போது அவற்றை அகற்றத் தேவையான நவீனத் தொழில்நுட்பம் ஈரானிடம் போதிய அளவு இல்லாததால் சிக்கல் நீடிக்கிறது.

# நிர்மலா சீதாராமன் கூறியது உண்மைக்கு புறம்பானது





## உலகப்புகழ்பெற்ற சித்திரை திருவிழா: மதுரைக்கு 29-ந்தேதி கள்ளழகர் புறப்படுகிறார்

## கோவையில் கேபிள் டி.வி.யில் ஒளிபரப்பான ஜனநாயகன்: த.வெ.க.வினர் போலீசில் புகார்

## வளைகுடா நாடுகளின் துறைமுகங்களைத் தாக்குவோம்: ஈரான் எச்சரிக்கை!

## அமைச்சர் சேகர் பாபுவின் மகன்களுக்கு சொந்தமான நிறுவனத்தில் வருமான வரித்துறை சோதனை

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 14.04.2026 செவ்வாய்க்கிழமை இலவச இ–பேப்பர்